# ஆண்டறிக்கை
# 2011

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### சுற்றாடல் அமைச்சு

# தொலை நோக்கு

"உன்னதமான சேவையினூடாக
சுத்தமான மற்றும் பசுமையான
சுற்றாடல்"

# அரும்பணி

"மக்கள் பங்கேற்பு
சட்ட அமுலாக்கம்
உயர் தொழில்நுட்ப இடையீட்டுதவி
அத்துடன்
சுற்றாடல் கல்வியின் மூலம்
சுற்றாடலின் மேன்மையைப் பாதுகாத்துக்
கையாளும் தேசத்தின் முன்னோடி"

## முன்னுரை

தலைமை அலுவலகத்தில் உள்ள 15 பிரிவுகளின் / அலகுகளின் பணிப்பாளர்கள் மற்றம் 8 மாகாண அலுவலகம் மற்றும் சுற்றாடல் சபை என்பனவற்றால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இவ் வருடத்தின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேல் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் விசேட செயற்திட்டங்களின் தகவல்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்னேற்றங்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ம் அத்தியாயம் மற்றம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சிறந்த நடத்தை, நிதி செயற்பாடுகள், வருடாந்த கணக்கறிக்கை மற்றும் கணக்காய்வு நாயக அறிக்கை என்பன இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ள்ளது.

தேவையான தகவல்களை வழங்கியமைக்கு, தலமை அலவலகத்தில் உள்ள 15 பிரிவுகளின் / அலகுகளின் பணிப்பாளர்கள் மற்றம் 8 மாகாண அலுவலகம் மற்றும் செயற்திட்ட பணிப்பாளர்களுக்கு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு அலகு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**திட்டமிடல், கண்காணிப்பு பிரிவு**

## வருடாந்த அறிக்கை 2011 க்கான தவிசாளரின் செய்தி

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை, கணக்காய்வு அறிக்கை பண ஓட்ட கூற்று என்பனவற்றுக்கு செய்தி தெரிவிப்பதில் மிகுந்த சந்தோஷமடைகிறேன். நாட்டில் நடைபெறம் துரித அபிவிருத்தியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல துறைகளில் பங்கழிப்பை, தனது சேவையினை 30 வருடங்களாக முன்னெடுத்து வருகின்றது.

தேசிய சுற்றாடல் சட்டத்தின்படி, சுற்றாடல் தரக்கட்டுப்பாடு, சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடலில் கல்வி மற்றும் விழிப்பணர்வு என்பனவற்றினை ம.சு.அ. மேற்கொள்கின்றது. ம.சு.அ. இன் இலக்கை எட்டுவதற்க சுற்றாடல் பாதுகாப்பு, உரிமம் மற்றம் நிர்வாக முறைமை என்பன போதாது உள்ளது. தொழிற்சாலைகள், உள்ளூராட்சி சபைகள், பாடசாலைகள் மற்றும் நிறவனங்கள் தமது செயற்பாட்டில் பசுமையான செயற்பாட்டை கடைப்பிடிப்பதனை ஊக்குவிக்கும் வகையாக ‘‘சுற்றாடல் பசுமை விருது’’ எனும் தேசிய விருது. ம.சு.அ சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.

‘‘சுற்றாடல் பசுமை விருது’’ இல் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கங்கள் அதிமேதக ஜனாதிபதி அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாசு கட்டுப்பாட்டு பிரிவின் நீா் தர கண்காணிப்ப ஆய்வுகூடத்தினால் நாடளாவிய ரீதியல் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவிடப்படும் கழிவு நீரை கண்காணித்து நீரின் தரத்தை உறுதி செய்யம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேசிய சுற்றாடல் ஒருங்கிணைப்பினை நிதியுதவி செய்யப்பட்ட நீரின் தர கண்காணிப்பு செயற்திட்டத்தின் கீழ் 3 அறிக்கைகள் பிரசுரிப்பு மற்றம் பல உள்ளக செயலமா்வுகள் என்பன நடாத்தப்பட்டது. ம.சு.அ இனால் ஒருங்கிணைப்புடன் சிலோன் இன்ட கொன்றினல் ஹோட்டலில் 4 மாா்ச் 2011 இல் நடாத்தப்பட்ட நீா் நிலைகளை பாதுகாக்க அவசிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. கொரிய நாட்டின் அனுபவம் கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்தும் சாத்தியப்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மின் கழிவுகள் அந்த நாடாக திகழும் வகையில் 14 தனியாா் நிறுவனங்களின் உதவியுனட் ஈ. கழிவு முகாமைத்வ திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தேசிய ஈ - கழிவ முகாமைத்துவ மாநாடு 19 டிசம்பா் 2011 இல் BMCH இல் நடாத்தப்பட்டது.

ம.சு.சு. சபையின் ‘‘பிலிசறு’’ செயற்திட்டத்தின் கீழ் 70 உள்ளூராட்சி சபைகளில் கொம்போஸ்ட் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தின் கீழ் களுத்துறை, பொகறவத்த, கிக்கடுவை, அனுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய இடங்களில் பாரியளவு கொம்போஸ்ட் நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகள் தமது திண்ம கழிவு பிரச்சினையை தீா்த்து கொள்வதற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றம் நிதியுதவிகள் ‘‘பிலிசறு’’ செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

ஆரோக்கிய கழிவு முகாமைத்துவ நடவடிக்கை திட்டம் 2011 ஐ மாதிரி செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு CEA இன் கழிவு முகாமைத்துவ அலகிற்கு ‘‘பிரிசற செயற்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டது.

எமது நாளாந்த வாழ்வில் பிளாஸ்டிக் முக்கிய விடயமாக அமைகிறது. நாடாளவிய ரீதியில் பிளாஸ்டிக் உற்பத்திகள் மற்றம் பொதி செய்தல் என்பனவற்றின் கேள்வி வெகுவாக அதிகரித்து வருகின்றது. எனவே இதனால் நுகர்வுக்கு தேசிய செயற்திட்டம் 2011 இலும் தொடர்ச்சியாக தொடரப்படுகிறது. மேம்பாட்டு முகாம்கள், புத்தளவில் ‘‘தேசத்தின் மகுடம்’’ செயற்திட்டத்தில் பங்குபற்றியமை, பொது மக்களிடையே கழிவு சேகரிப்ப தாங்கி வழங்கியமை போன்ற பல நடவடிக்கைகளை நடத்தியுள்து.

தே.சு. சட்டத்தின் பாகம் 24 இல் மற்றம் 24 ஈ ஆகிய பகுதிகளின் கீழ் தனித்துவமான சூழல் தொகுதி, வாழ்விடம் மற்றும் பார்தகு அழகு இடங்கள் ஆகியன மசசு சபையினால் சுற்றாடல் பாதுகாக்கப்பட்ட இடமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 2011 ஆம் அண்டில் பெந்தோட்ட, கொக்கல, தெடிகமுக கந்த, மற்றும் ஜின்ஒயா தேசிய சுற்றாடல் பாதுகாப்பு இடமாக பிரகடணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

திண்ம கழிவு முகாமைத்தில் ஆரோக்கிய காணி நிரப்புதல் முக்கியமானது. பொது மக்களின் பலத்த எதிர்ப்பு காரணமாக மாளிகாவத்தை மற்றும் டோட்பே ஆகிய இடங்களில் பாரிய ஆரோக்கிய காணி நிரப்பும் செயற்திட்டம் KOICA வடன் கலந்துரையாடி நடாத்தப்பட்டது. பல நடவடிக்கைகளுக்காக அமைச்சரை பத்திரம் சரிபார்க்கப்பட்டு தொழில் நுட்ப மதிப்பீடு சபை (TEC) இன் சிபார்சுடன் அனுமதி வழங்கப்பட்டது. ம.ச.சு. அலுவல்கள் கொரியாவுக்கு பயிற்சிகளை பெறுவதற்காக இரண்டு வாரங்கள் அனுப்பபட்டது.

தொழில்நுட்பம் மேம்பாட்டின் போது தகலவ்களை வெளியிடுவதும் அவசியமாகும். எனவே களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டங்களின் மாவட்ட மட்ட தகவல்களின்

சற்றாடலை நிலையான பெறபேற்றை முகாமை செய்வதற்கு (அரச மற்றும் தனியார் துறைகள் பல அபிவிருத்தி நடவடிக்கைகைள மேற்கொள்ளும் வேளையில்) ஒவ்வொரு வருடமும் பல வித்தியாசமான தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றது. ம.ச.ச. சபையால் அறிகம் செய்யப்பட்டும் இவ் தந்திரோபாய மாதிரிகள் சுற்றாடலை பாதுகாப்பதற்க இணைத்து கொள்ளப்படுகிறது.

ம.ச.ச. சபையின் நோக்கத்தை அடைதல் மற்றும் இலக்கு மீளாய்வு செய்தால் தமது பங்களப்பை செய்த பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ அவலகங்கள் மற்றும் ம.ச.சு. அலவலகங்களுக்கு நன்றியினை தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் .ச.சு. சபையினை வழிநடாத்துவதற்க தமது ஒங்கணைப்ப ஆலோசனை மற்றும் உவியை நல்கிய மத்திய ச.அ. முகாமைத்துவ சபை

அங்கத்தவர்கள் மற்றும் சுற்றாடல் சபை அங்கத்தவர்களுககு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன். சற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சின் செயலாளர் அவரது ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை முதலியற்றுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிமேதகு ஆலோசனை மற்றும் வழிகாட்டிய அமைச்சர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சரித்த ஹேரத்**
**தலைவர்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**

## Organization Structure of the Central Environmental Authority



**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ குழு**

| பெயர் | பதவி | தகைமை |
|---|---|---|
| திரு. சரித ஹேரத் | தலைவர் | கலைமாணி (சிறப்பு), கலை முதுமாணி (Ohio) |
| திருமதி. ஆர். ஆர். எல்லேபொல | பணிப்பாளர் தலைமை அதிபதி | விஞ்ஞானமாணி (சிறப்பு), விஞ்ஞான முதுமாணி M.I. chem..c.chtd chemist |
| வெற்றிடம் | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் கல்வி) | |
| திரு. கே.எச் முதுகுடஆரச்சி | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| பொறி ஜே. எம். யூ. இந்திரரத்ன | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (ம.வ.அ, நிருவாகம் மற்றும் நிதி) | வர்த்த நிருவாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டம், பட்டய பொறியியலாளர் FIT. (SL) MIE (Aus) |
| திரு யூ. கே. டீ. ஜே. ஜயசிங்ஹ | பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி (சுற்றாடல் முகாமைத்துவ, மதிப்பீடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு எம். எஸ் ஏ.ஈ திஸ்மல்பொல | பணிப்பாளர் (ம.வ.அ) | சட்டத்தரணி |
| திரு பி. ஏ. விஜேபால | பணிப்பாளர் (நிருவாகம்) | ஆளணி முகாமைத்துவ டிப்ளோமா (என். ஐ. பி. எம்), கலை முதுமாணி தொழிற் கல்வியியல் (சிறப்பு) |
| கலாநிதி திரு ஆர். எம். எஜ. ரத்நாயக்க | பணிப்பாளர் (சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு) | பட்டய இரசாயவிளலாளர், இரசாயனவியல் டிப்ளோமா (ரோக்கியோ இரசாயனவியல் நிறுவனம் - யப்பான்) விஞ்ஞான முதுமாணி (சிறப்பு) கலாநிதி |
| திருமதி கே. டி. சில்வா | பணிப்பாளர் (சுற்றாடல் தாக்க மதிப்பீடு) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திருமதி ஏ. எம். ஜீ. டப்ளியு. தயாரத்ன | பணிப்பாளர் (சட்டம்) | சட்டத்தரணி |
| திரு சீ. என். அமரதுங்க | பணிப்பாளர் (ஆய்வுக்கூடம்) | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா |
| திரு எம். கே. எஸ். நானாயக்கார | பணிப்பாளர் (நிதி) | வணிக முதுமாணி (சிறப்பு) கணக்கீட்டு நிறுவன அங்கத்தவர். பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அதிகாரம் பெற்றவர் |
| திரு எம். ஏ. ஏ. என் ஹேமகுமார | பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்டங்கள்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| | | |
| திரு நீல் பெரேரா | பணிப்பாளர் (சு கல்வி மற்றும் வழிப்பூட்டல்) | கலைமாணி (சிறப்பு), கலை முதுமாணி (பொருளியல்) முகாமைத்துவ டிப்ளோமா |
| திருமதி சரோஜினி | பதில் பணிப்பாளர் | விஞ்ஞானமாணி (சிறப்பு), விஞ்ஞான முதுமாணி |
| திரு என். எஸ. கமகே | பணிப்பாளர் (மேல் மாகாணம்) | விஞ்ஞானமாணி, கலாநிதி, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சூழலியல்) |
| திரு கே. ஜீ. ரீ. என் கிரிஎல்ல | பணிப்பாளர் (மத்திய மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு அஜித் விஜேசுந்தர | பணிப்பாளர் (சபரகமுவ மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு எம் சிவகுமார் | பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திரு சுசந்த வெதகே | பி.பணிப்பாளர் (தென் மாகாணம்) | விஞ்ஞானமாணி |
| திரு எஸ். எம். ஏ சேனாநாயக்க | பி.பணிப்பாளர் (ஊவா மாகாணம்) | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திருமதி குமாரி குலதிலக | பிரதிப் பணிப்பாளர் (திட்ட, மேற்பார்வை) | கலைமாணி |

| பெயர் | பதவி | தகமை |
|---|---|---|
| திருமதி ஏ. சீ. பீ. தாபறே | தலைமை நூலகர் | கலைமாணி, விஞ்ஞான முதுமாணி, பட்டய நூலகர் |
| திருமதி யூ. விதானஆரச்சி | உள்நிலை கணக்காளர் | கணக்கீட்டு நிறுவன அங்கத்தவர், பட்டயக் கணக்காளர், நிறுவக அதிகாரம் பெற்றவர் |
| திரு சுனில் டி சில்வா | நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் | விஞ்ஞானமாணி, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கனணி தொழில்நுட்பம்) |
| திரு ஜீ. என் சந்திரசிறி | உதவிப் பணிப்பாளர் - வட மத்திய மாகாணம் | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி |
| திருமதி விஜிதா சத்தியகுமார் | உதவிப் பணிப்பாளர் - வட மாகாணம் | விஞ்ஞானமாணி, விஞ்ஞான முதுமாணி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சுழலியல்) |

# உள்ளடக்கம்


1.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபை.................................................. 01
1.1 அறிமுகம்........................................................................ 01
1.2 நோக்கங்கள்..................................................................... 02
1.3 தத்துவங்கள் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள்................................ 02
1.4 அதிகாரசபையின் உறுப்பினர்கள்................................................ 03
1.5 சுற்றாடல் மன்றம்............................................................... 03

2.0 அதிகாரசபையின் பொறுப்புக்களும் பணிகளும்................................ 07

3.0 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு.............................................. 12
3.1 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு.................................................. 12
3.1.1 ஒழுங்குவிதி மற்றும் கண்காணிப்பு.............................................. 12
3.1.2 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான தொழில்நுட்ப அறிவுரைப்புகளை வழங்குதல் ........................................................................................ 14
3.1.3 சுற்றாடல் தாக்கமதிப்பீடு மற்றும் பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுக்கான தொழில்நுட்ப உதவி வழங்கல்.................................................................. 15
3.1.4 சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய மூலோபாயங்களை அறிமுகம் செய்தல்.................................................................. 27
3.2 ஆய்வுக்கூடச் சேவைகள்.................................................................. 21
3.2.1. வளித்தரக் கண்காணிப்பு .......................................................... 21
3.2.2 நீரின் தரத்தை கண்காணிப்பு...................................................... 24
3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு.................................................. 26
3.3.1 பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படத்தல்..................................... 27
3.3.2 பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்.................................... 27
3.3.3 றொரர்டேம் உடன்படிக்கைளை நடைமுறைப்படுத்தல்............................. 28
3.3.3.1 இலத்திரன் மற்றும் மின் சாதன முகாமைத்துவம்.............................. 28

4.0 சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு.............................. 30
4.1 சுற்றாடல் தாக்க செயன்முறை.......................................................... 30
4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு பிரிவு.................. 37
4.3 புவி தகவல் அலகு......................................................................... 39

5.0 சட்ட அலகு.................................................................................. 43

6.0 சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு........................................ 47

7.0 சுற்றாடல் பொருளாதார தொடர்பு அலகு......................................56

8.1 திட்ட, கண்காணிப்பு அலகு................................................... 58

8.1 முறைப்பாட்டுப் அலகு........................................................ 60

9.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் 62

9.1 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரங்களை பன்முகப்படுத்தல்...................................................................62

9.2 உள்;ராட்சி அதிகாரசபைகளுக்கான அதிகார பரவலாக்கம்.......................... 62

9.3. மாவட்ட சுற்றாடல் சட்டங்களை பலப்படுத்தும் குழு (னுநுடுநுஊ)......................... 63

10.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேமயமாக்கல் வேலைத்திட்டம்.......... 65

10.1 அறிமுகம்................................................................................ 65

10.2 மாகாண அலுவலகங்களின் செயற்பொறுப்பு.......................................... 66

10.3 மாகாண அலுவலகங்களின் செயலாற்று.............................................. 67

10.3.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் செயற்பாடு................ 67

10.3.2 சுற்றாடல் முகாமைத்துவம்....................................................71

10.3.3 சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல்..........................................73

11.0 ம.சு.அ இனால் அமுல்படுத்தப்படும் திறைசேரி நிதிவழங்கிய செயற்திட்டங்கள்............................................................ .... 76

11.1 நுகர்வுக்கப் பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமைத்தவ செயற் திட்டம்................. 76

11.4.2 பாடசாலை சூழல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்........................................ 80

11.5 சுற்றாடல் பாதுகாபபுக்காக இலங்கையில் சுற்றாடல் மாசு நடவடிக்கைகளுக்கு தரவு சுவடு அபிவிருத்தி செய்தல் .......................................................... 80

12.0 நிறுவன கூட்டிணை ஆளுகைத் திட்ட அறிக்கை..................................... 87

13.0 மனித வள அபிவிருத்தி, நிருவாகம், நிதி................................. ...... 89

13.1. மனித வள அபிவிருத்தி அலகு.................................................. 89

13.2. மனித வள முகாமைத்துவ அலகு.................................................. 90

13.3. நிதிப் பிரிவு............................................................................. 91

14.0 கணக்கியல் கூற்று மீதான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை...................... 96

15.0 பிலிசறு தேசிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டம்.... 117

# 1.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## 1.1 அறிமுகம்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப் பெற்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2010ஆம் ஆண்டில் தனது 29 வருடத்தைப் பூர்த்தி செய்தது. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் கீழ் இயங்கி வரும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் கொள்கையை அமுலாக்கும் பிரதான நிறுவனங்களில் ஒன்றாகும். 2010ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மூலம் 2010ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயலாற்றுகை மற்றும் திறைசேரி நிதியினையும் வெளிநாட்டு நிதியுதவிகளையும் பிரயோகித்து அடைந்துள்ள செயலாற்றுகை தொடர்பான முழுமையான அறிக்கையினை வழங்கும்பொருட்டு அவ்வாண்டில் ஈட்டிய வெற்றிகள் மாத்திரமின்றி தோல்விகள் தொடர்பான மதிப்பீடும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

8 மாகாண அலுவலகம், 11 மாவட்ட அலுவலகம் 2911 இல் ம.சு.அ. நடாத்தப்பட்ட விசேட செயற்திட்டங்கள் ஆகியன இவ் ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளது.

## 1.2 நோக்கங்கள்

1980ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டம் கீழ்க்காட்டப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அமுலாக்குவதற்காக சுற்றாடலில் அபாயகரமானதும் அபாயகரமானதாக அமையக்கூடியதுமான கழிவுப்பொருட்களை விடுவித்தல், படிவுசெய்தல் அல்லது ஏனைய மாசு வழிகளின் தன்மை, அளவு, செறிவு மற்றும் தாக்கத்தை ஒழுங்குபடுத்துதல், கட்டுப்படுத்துதல் அத்துடன் பேணுதல்.

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டடினைப் பயன்படுத்தி முறையாக மதிப்பீடு செய்யப்பட்ட சுற்றாடல் பிரச்சனைகளினூடாக சுற்றாடல் நேயமுள்ள அபிவிருத்தியினை உறுதிசெய்து நாட்டின் இயற்கை வளத்தொகுதியைப் பாதுகாத்தல்.

- சுற்றாடலைப் பாதுகாப்பதில் பொது மக்களின் ஒத்துழைப்பினையும் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ளல். குறிப்பாக பாடசாலைச் சிறார்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல்.

- அனுசரணையாளர்களில் பெருமளவிலானோருக்கு சேவைகளை வழங்கி சுற்றாடல் சார்ந்த தகவல்களையும் தரவுகளையும் வழங்கும் மையமாகத் தொழிற்படுதல்.

## 1.3 தத்துவங்கள் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தற்போது கீழே குறிப்பிட்டுள்ள பிரதான தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகள் மீது தனது கவனத்தைச் செலுத்திவருகிறது.

அ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் அமுலாக்குதல்.

ஆ) மாசடைதலுக்கான ஏதுக்கள், தன்மை, அளவு மற்றும் மாசடைதலைத் தடுத்தல் தொடர்பான மதிப்பீடுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ளலும் அத்துடன் அத்தகைய ஏனைய ஆட்கள் அல்லது அமைப்புகளுக்கு உதவியளித்தலும் ஒத்துழைப்பு வழங்கலும்.

இ) சுற்றாடல் பாதிப்புடன் தொடர்புடைய ஏதேனும் துறையுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளல், மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் அத்துடன் சுற்றாடலைப் பாதுகாக்கவும் முன்னேற்றுவதற்குமான வரையறைகளை மேற்கொள்ளுதல்,

ஈ) சுற்றாடலின் பயன்மிகு பயன்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான தரங்கள், மாதிரிவடிவங்கள் மற்றும் வரையறைகளை நிர்ணயித்தல்.

உ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தின் எந்தவோர் அம்சம் தொடர்பிலும் அறிக்கைகளையும் தகவல்களையும் பிரசுரித்தல்.

ஊ) சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் விருத்தி செய்தல் தொடர்பாக மக்களுக்கு தகவல்களையும் கல்வியையும் வழங்குதல்.

1998 மற்றும் 2000ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் மீதான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இத்தகைய திருத்தங்களினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட பிரதானமான அதிகாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அ) சுற்றாடலுக்கு மாசுக் காரணிகளை வெளியேற்றும் சந்தர்ப்பங்களில் அச்செயற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்ப மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழ் மேற்கொள்வதன் தேவைப்பாடு.

ஆ) சுற்றாடலுக்கு மிக மோசமான விளைவுகளை கொண்டு வரக்கூடிய ஒருசில திட்டவட்டமான அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக அவை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்வதன் தேவைப்பாடு.

இ) குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையாக சுற்றாடலுக்கு கழிவுப்பொருட்களை வெளியேற்றுதல், படியவிடுதல் மற்றும் விடுவிப்பதை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாக செயற்படுவதற்கும் மற்றும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட உரிமமின்றி எந்தவொரு நபராலும் குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லையென்பதை உறுசெய்தல்.

## 1.4 அதிகாரசபையின் உறுப்பினர்கள்

தேசிய சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு உட்பட்டதாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரை வினவி சனாதிபதியவர்களால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களை அதிகார சபை கொண்டிருக்கும். இவர்களில் இருவர் சுற்றாடல் விடயத்துறையில் போதுமான துறைசார் அறிவினையும் அனுபவத்தையும் கொண்டுவர்களாகவும் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான சிறப்புத் தேர்ச்சிகளையும் அனுபவத்தையும் கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

12.05.2011 இல். திரு. சர்த்தகேரத் அவர்கள் அதிமேதது ஜனாதிபதி அவர்களால் ம.சு.அ. சபைக்கு தவிசாளராக நியமிக்கப்பட்டார்.07.05.2010 இல் இருந்து ம.சு.அ. சபை அங்கத்தவர்களாக அதிமேதக ஜனதிபதியால் திரு.எம். லலித் சிலிவா மற்றும் திரு. சமன்சில்வா ஆகியோர் சபை அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்.

பின்வருவோர் சபை அங்கத்தவர்களாவர்.

திரு. சர்த்தகேரத் - தலைவர்

திரு.எம். லலித் சிலிவா - உறுப்பினர்

திரு. சமன்சில்வா- உறுப்பினர்

சட்டத்தின் கீழ் பணிப்பாளர் நாயகம் திருமதி. ரணி எல்வேபொல காரியதரிசியாக செயற்படுகிறார்.

இவ் வருட காலத்தில் சுற்றாடல் முகாமைத்துவடுன தொடர்புபட்ட பல பாரிய பிச்சினைகள் தீர்வு காண்பதற்க சபை 12 தடவைகள் கூடி வழிகாட்டியுள்ளது.

## 1.5 சுற்றாடல் மன்றம்

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 07ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மன்றம் தாபிக்கப்பட்டுள்ளது.

## சுற்றாடல் மன்றத்தின் பிரதான தொழிற்பாடுகள்

மேற்படியான சட்டத்திற்கமைய மன்றத்தின் பிரதான தொழிற்பாடுகள் பின்வரமாறு

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், செயற்பொறுப்புக்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் சுற்றாடல் மன்றத்திற்கு முன்வைக்கப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் ஆலோசனை வழங்குதல்.

## சுற்றாடல் மன்றத்தின் கட்டமைப்பு

திருத்தப்பட்டவாறான 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் அமைச்சினால் தெரிவுசெய்யப்படுவர்.

## சுற்றாடல் மன்றத்தின் தொழிற்பாடுகள்

11ஆவது கூட்டத்தொடர்

இந்த கூட்டத்தொடருக்கென சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரினால் நிமிக்கப்பட்ட உறுப்பினர்கள் வருமாறு

| உறுப்புரிமை | உறுப்பினரின் பெயர் |
|---|---|
| மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | திரு டி. சுபசிங்க, சிரேஸ்ட உதவி செயலாளர்(உள்ளூராட்சி சபை) |
| மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | திரு டபிள்யு உம் பி விக்கிரமசிங்க, மேலதிக செயலாளர் |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | திரு ஆர் சமரசிங்க,பணிப்பாளர் நாயகம் |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | திரு சீ.என் விஜயசேகர, உதவி பணிப்பாளர் நாயகம |
| காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | திருமதி. A. M. K. K. அத்தநாயக்க, சிரேஸ்ட உதவி செயராளர |
| கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | திரு. A. K. செனவீரத்தின, மேலதிக செயலாளர் |
| துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு | திருமதி. S. A. D. S. சுபசிங்க, மேலதிக செயலாளர்(அபிவிருத்தி) |
| தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சு | திரு. P. S. குணசேகர, பாராளுமன்ற செயலாளர் |
| வியாபார அபிவிருத்தி அமைச்சு | திருமதி. சுமண பிரேமரெத்தின, மேலதிக செயலாளர் |
| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | திரு. W.W.C.B. மேடகொடை, பதில் பணிப்பாளர் நாயகம் |
| கூட்டுறவு, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு | திருமதி. D. C. N. A. குமாரசிங்க, பிரதி பணிப்பாளர்(திட்டமிடல்) |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | திருமதி. N. K. அபேரெத்தின, சிரேஸ்ட உதவி செயலாளர் |
| புகையிரத மற்றும் போக்குவரத்து அமைச்சு | திரு. U.N. மல்வாராச்சி, உதவி பணிப்பாளர் |
| மின்வலு, சக்தி அமைச்சு | திருமதி. இந்திராணி விதானகே, பணிப்பாளர்(அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்) |
| சுகாதார அமைச்சு | Dr. பியசேன சமரகோன் சிரேஸ்ட உதவி |

| **உறுப்புரிமை** | **உறுப்பினரின் பெயர்** |
|---|---|
| | செயலாளர் |
| தோழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு | Mr. W. M. D. S. குணரெத்தின, பிரதி பணிப்பாளர் |
| வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | திருமதி. சுமந்தா ஜெயசூரிய, பணிப்பாளர் |
| வெளிநாட்டலுவல்கள் அமைச்சு | திருமதி. மனோரி மல்லிகாராச்சி பிரதி பணிப்பாளர்(ஐ.நா) |
| மீன்பிடி, நீரக வளமூலங்கள் அமைச்சு | திருமதி. இந்திரா ரணசிங்க, பதில் பணிப்பாளர் |
| கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | திருமதி. L. U. N. சுமணசேகர, பிரதி பணிப்பாளர் (மேம்பாடு மற்றும் முதலீடு) |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | திருமதி N B கேமா தர்மவத்தின, பணிப்பாளர் நாயகம்(முதலீடு) |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | திருமதி. M. A. S. பெரேரா, பணிப்பாளர் (சுற்றாடல் முகாமைத்துவம்) |
| கல்வி அமைச்சு | திருமதி பி.எல்.டி. பாலசூரிய பணிப்பாளர்(கல்வி) |
| மத்திய சுற்றாடல் அதிகாரசபை | திருமதி ரமணி எல்லேபொல செயலாளர் |

11ஆவது கூட்டத்தொடர்

இந்த கூட்டத்தொடருக்கென சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறு

### 1.4.4 சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நிபுணர்கள்.

| **சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நிபுணர்கள்.** | |
|---|---|
| சபை தலைவா் | திரு. பாலித்த ரூபரசிங்க தவிசாளா் |
| பேராதனை பல்கலைக்கழகம் | பேராசிரியா் சாந்த கென்னயகே |
| களனி பல்கழைக்கழகம் | திரு.ஏ.ஜி. அமரசிங்க |
| சட்டத்தரணி | திரு.ஜெகத குணவர்த்தின |
| | திரு. நன்தசேன முத்துக்கொட, |
| | திரு. பண்டுசேன லியனகே |

| NGO's பிரநிதிகள் | |
|---|---|
| இலங்கை சுற்றாடல் எழுத்தாளா் சங்கம் | திரு. தா்மன் விக்கிரமசிங்க |
| செயற்திட்ட பணிப்பாளா , TRPSP. President elect, ITPSL | திரு. கேமந் ஜெயசந்தர |
| சட்டத்தரணி | திரு. இன்டிக்க ஜெயதிலக்க. |

**கூட்டங்கள்**

ஜனவரி 20 இல் இருந்து நவம்பர் 23 வரை நடைபெற்ற கூட்டங்கள்.

| கூட்ட இல | மாதம் | திகதி |
|---|---|---|
| 218 | ஜனவரி | 20 |
| 219 | மார்ச் | 03 |
| 220 | மார்ச் | 24 |
| 221 | ஜுன் | 24 |
| 222 | ஜுலை | 25 |
| 223 | செப்டம்பர் | 05 |
| 224 | ஒக்டோபர் | 19 |
| 225 | நவம்பர் | 23 |

கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள்

- சுற்றாடல் வளப்பாவனை கட்டணம்
- சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சதிட்டம் ஜனாதிபதி பதக்க வெற்றியீட்டாளர்
- EIA தொடர்பான NEA திருத்தம்
- சுற்றாடல் பாதுகாப்பு ஊடாக தணித்த முகாமைத்துவம்
- மேம்படுத்த நிதி பெறதல்
- ஈரநில நிரப்புதலுக்குரிய SLLRDC வர்த்தமானி
- வடமேல் மாகாண சற்றாடல் நிலமை
- ம.சு.அ 30வது நிறைவுக் கொண்டாட்டம்
- வட மாகாணத்துக்கான தந்திரோபாய சுற்றாடல் மதிப்பீடு
- வெளிநாட்டு நிதியுதவி குறித்த திறைசேரி சட்டம்
- ஆசனிக் பிரச்சினை மற்றம் தந்துரோபாய நிலமை
- தென் கடுகதிப்பாதை
- கரையோர வலைய முகாமைத்துவம் மற்றும் கரயோர சுற்றுலா
- சுற்றுலாவுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள்
- நாட்டில் பொலித்தீன் நுகர்வை கட்டுப்படுத்தல்.

## 2.0 அதிகாரசபையின் பொறுப்புக்களும் பணிகளும்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கீழ்க்காணும் 04 சிறப்பான தொழில்நுட்பத் துறைகளின் அடிப்படையில் தாபனக்கட்டமைப்பினை வகுத்தமைத்துள்ளது.

i. சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு
ii. சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் கணிப்பீட்டுப் பிரிவு
iii. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு
iv. மனிதவள அபிவிருத்தி, நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

சுற்றாடல் முகாமைத்துவ துறையில் துறைசிறப்பறிவையும் அனுபவத்தையும் கல்வி மற்றும் தொழில்சார் அறிவினையும் கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் இப்பிரிவுகளின் தலைமை அதிகாரிகளாக பணியாற்றி வருகின்றனர்.

**சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு**

சூழல் மாசடைதலைத் தடுத்தல் / குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக பணிகளை மேற்கொள்ளுதல் இப்பிரிவின் பொறுப்பாகும். இப்பிரிவின் கீழ் நிறுவப்பட்டுள்ள 03 அலகுகளின் செயற்பொறுப்புக்கள் பின்வருமாறு

**<u>சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு</u>**

- புதிய கைத்தொழில் / செயற்பாடுகளுக்கான சுற்றாடல் சாத்தியவள விதப்புரைகளை வழங்குதல்
- கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகித்தல்
- கைத்தொழில்களினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதல் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- கைத்தொழில்களினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தல்
- கைத்தொழில் செயற்பாட்டினைக் கண்காணித்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்
- தற்போது நடைமுறையிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வினியோகிக்கும் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**கழிவு முகாமைத்துவ அலகு**

- கழிவுப்பொருள் முகாமைத்துவச் சட்டங்கள், ஒழுங்கு விதிகளை அறிமுகம் செய்தலும் நடைமுறைப்படுத்தலும்
- கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்
- கழிவுப்பொருள் முகாமைத்துவ முறைமையைத் தயாரித்தல்
- கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான ஆசிரியர் ஆலோசனகைளைத் தயாரித்தல்
- சட்டரீதியான தேவைகளுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல்
- கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான முன்னோடிக் கருத்திட்டங்களைத் அமுலாக்குதல் சட்டங்கள், ஒழுங்கு விதிகளை அறிமுகம் செய்தலும் நடைமுறைப்படுத்தலும்

**ஆய்வுக்கூடம்**

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கும் அவசியமான பகுப்பாய்வுச் சேவைகளை வழங்குதல்
- சுற்றாடல் தர / நியமக் கண்காணிப்பு
- தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நீர் மற்றும் வளித்தரக் கண்காணிப்பு

- வளி, ஒலி, அதிர்வு மற்றும் நீர்த்தரம் தொடர்பான சுற்றாடல் பரிசோதனைகளையும் கண்காணிப்புப் பணிகளையும் மேற்கொள்ளுதல்
- ஒலி, வளித்தர மற்றும் நீர்த்தரம் தொடர்பான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்

**சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் கணிப்பீட்டுப் பிரிவு**

சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் கணிப்பீட்டுப் பிரிவானது 03 அலகுகளைக் கொண்டுள்ளது

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு**

- புதிய கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுச் செயற்பாடுகளை அமுலாக்கதலும் கண்காணித்தலும்
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாடு தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை அமுலாக்கல்
- ஆசிரியர் ஆலோசனைகளைத் தயாரித்தல்
- மூலோபாய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டினை அறிமுகஞ்செய்தலும் நடைமுறைப்படுத்தலும்

**இயற்கைவள முகாமை அலகு**

- சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு செயற்பாட்டில் அடங்காத கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்
- மேற்படி கருத்திட்டங்களின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளல்
- இயற்கை வளங்களின் தரங்குன்றல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
- இயற்கை வளங்களைப் பேணுதல் பற்றி விழிப்பூட்டல்
- சுற்றாடல் பாதுகாப்புப் பிரதேசங்களை பிரகடனஞ்செய்தல்
- கொள்கை அமுலாக்கல் தொடர்பான ஆசிரியர் ஆலோசனைகளைத் தயாரித்தல்

**ஆராய்ச்சி மற்றும் சிறப்புக் கருத்திட்ட அலகு**

- புவியியல் சார்ந்த தரவுகளை சேகரித்தல்
- சுற்றாடல் ரீதியில் கூருணர்வுமிக்க பிரதேசங்களுக்கான முகாமைத்துவக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- மாவட்டத் தோற்றப்பாடுகளுக்கான தேசப்படங்களைத் தயாரித்தல்
- சுற்றாடல் ஆராய்ச்சிகளின் இணைப்பாக்கம் மற்றும் ஆய்வுகளின் பெறுபேறுகளை வெளியிடல்

**சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு**

- அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் குழுரீதியான தொடர்பாடல் வழிமுறைகளினூடாக சுற்றாடல் தொடர்பான கல்வியை வழங்கதலும் விழிப்பூட்டுதலும்
- தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலான பயிற்சி செயலமர்வுகளையும் கண்காட்சிகளையும் நடாத்துதல்
- மக்களுக்கு சுற்றாடல் தகவல்களை வழங்குதல்
- அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு அவசியமான ஒத்துழைப்பினை வழங்குதல்
- (சொபா) கள மையங்களை உருவாக்குதலும்

**தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்**

- சுற்றாடல் தகவல்களைத் திரட்டுதலும் விருத்தி செய்தலும்
- நூலக வலையமைப்பு மற்றும் வலயமைப்பில் அடங்காத நூலகங்களின் இணைப்பாக்கம்
- சுற்றால் சார்ந்த தகவல்களை வழங்குதல்
- சர்வதேச நூலகங்களுடனான இணைப்பாக்கம்

**கட்புல செவிப்புல அலகு**

- அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான கட்புல செவிப்புல உபகரணங்களை வழங்குதல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையினாலும் சூழலியல் அமைச்சினாலும் நடாத்தப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான கட்புல செவிப்புல சேவைகளை வழங்குதல்
- சுற்றாடல் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வீடியோக்களைத் தயாரித்தலும் வசதிகளை வழங்குதலும்

**மனிதவள அபிவிருத்தி, நிருவாக மற்றும் நிதிப் பிரிவு**

**மனிதவள அபிவிருத்தி அலகு**

- மனிதவள முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்
- ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளலும் பதவி உயர்வுகளை வழங்குதலும்
- பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின்பால் பதவியினரை ஆற்றுப்படுத்துதல்
- தனியாட்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்
- பயிற்சித் தேவைகளை இனங்காணுதலும் உள்ளூர் / வெளிநாட்டுப் பயிற்சியின் பொருட்டு பொருத்தமான அலுவலர்களை வழிப்படுத்துதலும்
- பதவியணி அங்கத்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை விசாரித்தறிந்து அதற்கான பரிகாரங்களை அளித்தல்
- மனிதவளம் தொடர்பான தரவுத்தளத்தைத் தயாரித்தல்
- சம்பளம் / சம்பள ஏற்றங்களைத் தயாரித்தல்

**நிருவாக அலகு**

- கொள்வனவு
- இலாபப் பெறுகைகளையும் மூலதரனச் சொத்துக்களையும் பேணிவருதல்
- சேவை இணக்கப்பாடுகளை பெற்றக்கொள்ளலும் புதுப்பித்தலும்
- காப்புறுதி வசதிகளைப் பெற்றக் கொடுத்தல்
- அலுவலக வசதிகளை வழங்குதல்
- தாபனரீதியான சுகாதாரப் பாதுகாப்பும் நலனோம்பலும்
- பொது நிருவாகம் மற்றும் ஒழுக்கக்கட்டுப்பாடு

**நிதி அலகு**

- வருடாந்த வருமான / செலவு அறிக்கைகளைத் தயாரித்தல்
- இறுதிக் கணக்கறிக்கையைச் சமர்ப்பித்தல்
- நிதிசார் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்
- சம்பள மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல்

- மாதாந்த வரவு / செலவுக் கட்டுப்பாட்டு அறிக்கையைத் தயாரித்தல்
- கருத்திட்டக் கணக்குகளைப் பேணிவருதல்

**சட்ட அலகு**

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்டமூலங்களைத் தயாரித்தல்
- தேசிய சுற்றாடல் சட்டத்தையும் ஒழுங்குவிதிகளையும் அமுலாக்குதல் அத்துடன் சட்டத்தையும் ஒழுங்குவிதிகளையும் மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- சட்ட அலகுடன் தொடர்புடைய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் பங்குபற்றலும்
- சுற்றாடல் சட்டத்தின் 12 மற்றும் 24ஆம் பிரிவுகளின் கீழ் கட்டளைகள் பிறப்பித்தல்
- விநியோகிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இடைநிறுத்துதல் / ரத்துச்செய்தல்
- நிறுவனங்கள் குப்பைகளை அப்புறப்படுத்துவதுடன் தொடர்புடையதாக 235ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளைப் பிறப்பித்தல்
- சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகளை அங்கீகரித்தலும் அதிகாரசபைக்கு பரிசோதனை அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்
- மத்திய சுற்றாடல் அதிகார சபையால் தொடரப்பட்டுள்ளதும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கெதிராக தொடரப்பட்டுள்ளதுமான வழக்குகளில் தோன்றுதல்
- அமைச்சில் நடைபெறும் விசாரணைகள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான வசதியளித்தல்
- சட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல்
- சுற்றாடல் பிரமாணக் குறிப்புகளை சட்டமயப்படுத்தல் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும் வளவாளர்களாகச் செயற்படுதலும்
- சுற்றாடல் சார்ந்த சட்ட நடிவடிக்கைகள் தொடர்பில் ஏனைய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்
- உடன்படிக்கைகளை வரைதலும் பின்பற்றலும்
- முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு பொலிஸ் திணைக்களத்துடனான இணைப்பாக்கம்

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு அலகு**

- தேவையான அடிப்படைத் தரவுகளையும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்களையும் இனங்காணல், தரவுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேவையான தரவுகளைத் தயாரித்தல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்
- கூட்டுத் திட்டம், ஆண்டுத்திட்டம் மற்றும் வெளிவாரியான நிதியேற்பாடுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்களுக்கிணங்க மத்திய சுற்றால் அதிகாரசபையின் செயல்திட்டத்தை தயாரித்தல்
- கண்காணித்தல் தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளுக்கும் மாவட்ட / மாகாண அலுவலகங்களுக்கும் இடையில் இணைப்பாக்க நடவடிக்கைகளைப் பேணிவருதலும் சேவை மதிப்பீடும்
- முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தலும் பிற நிறுவனங்களுக்கு முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்
- வருடாந்த அறிக்கையைத் தயாரித்தல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் அமுலாக்கமப்படும் திட்டம் தொடர்பாக உள்ளூர் வெளிநாட்டு நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள், ஏற்புடைய தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களை விழிப்பூட்டுதலும் இணைப்பாக்கத்தைப் பேணிவருதலும்.

**முறைப்பாட்டு அலகு**

- பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பதிவு செய்தல்

- சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல்
- முன்னேற்றத்தை ஆராய்தல்

**உள்நிலை கணக்காய்வு அலகு**

**பிராந்திய அலுவலகங்கள்**

பிராந்திய அலுவலகங்களுக்கு சுற்றாடல் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பின்வரும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

*மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண / மாவட்ட அலுவலகங்களின் செயற்பொறுப்புக்கள்*

- உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளுதல்
- புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்
- கைத்தொழில்களுக்கான நடவடிக்கைகள் / சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கல் (உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கப்படாத)
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்குமிடையில் இணைப்பாக்கம், கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் தேவைப்பாட்டிற்கமைய தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- இயற்கை வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு / சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்கு உட்படாத அதாவது, மாணிக்கக்கல் அகழ்வு, காணி மீட்டல் மற்றும் மரங்களைத் தரித்தல் போன்ற தொழில்முயற்சிகளுக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதப்புரைகளை வழங்குதல்
- சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- சுற்றாடல் விடயம் தொடர்பில் பிராந்திய மட்டத்தில் நடைபெறும் கூட்டங்கள் மற்றும் பணிகளில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றல்.
- அரச நிறுவனங்கள், அரசு சார்பற்ற அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள், பிற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கைத்தொழில்கள், வர்த்தகச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் இளைஞர் அமைப்புகளுக்கிடையில் இணைப்பாக்கத்தை மேற்கொள்ளுதல்
- மாவட்ட, பிரதேச செயலக, கிராம மற்றும் பாடசாலை ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் கருத்திட்டங்களைக் கண்காணித்தல்
- சுற்றாடல் முகாமைத்துவத்திற்கு ஏற்புடையதாக பிராந்திய மட்டத்தில் தகவல்கள் / தரவுகளைச் சேகரித்தல், தரவுத் தளமொன்றை அமைத்தல் மற்றும் காலத்திருத்தம் செய்தல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஐந்தாண்டு வேலைத்திட்டத்திற்கு அமைவாக மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கான ஆண்டு வேலைத்திட்டத்தை தயாரித்தல்

**அதிகாரசபையின் செயலாற்றுகை**

பின்வரும் அத்தியாயத்தில் அந்தந்தப் பிரிவுகள், அலகுகள் மற்றும் மாகாண அலவலகங்களில் 2010 ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகைகள் தொடர்பான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

# 3.0 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவு

## 3.1 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகானது சுற்றாடல் மாசுறுவதைத் தடுத்தல் மற்றும் கட்டுப்பாட்டுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. சுற்றாடல் மாசுறுவதைக் கட்டுப்படுத்துவதற்காக கையாளும் பிரதான சட்ட மூலோபாய மார்க்கமான சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாடு மற்றும் சுற்றாடல் மாசுறுவதை கட்டுப்படுத்துவதற்கான முறைவழிகளை விருத்திசெய்தல், புதிய முறைவழிகளைத் தயாரித்து அறிமுகம் செய்தல் என்பன சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகின் பிரதான செயற்பொறுப்புகளாகும்.

சுற்றாடல் மாசடைவதைத் தடுத்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக இந்த அலகினால் 2010 ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதலும் அது சார்ந்த அபிவிருத்தி பணிகளும்.
ஆ. சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவுரைப்புகளை வழங்குதல்
இ. கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தல்
ஈ. சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய மூலோபாய முறைவழிகளை அறிமுகம் செய்தல்
உ .சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட செயலமா்வுகள், கூட்டங்களில் பங்கேற்றலும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தலும்.
ஊ. சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல்

### 3.1.1 ஒழுங்குவிதி மற்றும் கண்காணிப்பு

#### 3.1.1.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குதலை அமுலாக்கம்

1988ஆண்டின் 56இலக்க மற்றும் 2000 ஆண்டின் 53ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான தேசிய சுற்றாடல் சட்டத்தின் எற்பாடுகளின் கீழ் 1533/16 இலக்க மற்றும் 2008.01.25 திகதியிலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிலிருந்து செல்லுபடியாகும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் சட்டத்தின் தேவையாகும். சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியச் செயற்பாடுகள் வர்த்தமானி அறிவித்தலில் வகுதி ‘‘அ’’ ‘‘ஆ’’ மற்றும் ‘‘இ’’ என பட்டியலிடப்பட்டுள்ளது.

2008.01.25 திகதி மற்றும் 1533/16 இலக்க புதிய வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள "இ" வகுதி சிறியளவிலான மாசு காரணிகளைக் கொண்டுள்ள கைத்தொழில்களாகவிருப்பதோடு அவற்றுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும் பணிகள் நாடெங்கிலுமுள்ள சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

| வழங்கப்பட்ட EPL | 2011 |
|---|---|
| புதிய EPLs | 886 |
| EPL புதுப்பிப்பு | 1509 |

### 3.1.1.2 இலங்கை முதலீட்டுச் சபையில் அங்கீகாரம் பெற்ற கைத்தொழில் செயற்பாட்டை கண்காணித்தல (BOI)

கைத்தொழில்களில் நிறவப்பட்டுள்ள சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பரிகாரத் தொகுதிகளின் வினைத்திறன், கைத்தொழில்களை சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகளுக்கு இயைபாக முறைப்படுத்தப்படுவதையும் கைத்தொழில் செயற்பாடு சார்ந்ததாக ஏதேனும் மாற்றம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆராய்வதற்காக கைத்தொழில் செயற்பாடு சார்ந்த கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரகாரம் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவானது இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் செயற்பாடுகளை கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

| வழங்கப்பட்ட அனுமதிகள | 2011 |
|---|---|
| புதிய EPLs | 48 |
| EPL புதுப்பிப்பு | 297 |
| ஏனைய செயற்திட்டங்களுக்காக சிபார்சசெய்யப்பட்ட புதிய இடர்பரப்புக்கள் | 72 |
| தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக சிபார்சசெய்யப்பட்ட புதிய இடர்பரப்புக்கள் | 156 |
| தொலைத்தொடர்பு கோபுரங்களுக்காக வழங்கப்பட்ட EPLs | 43 |

### 3.1.1.3 பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு எற்புடையதாக கிடைக்கும் முறைப்பாடுகளையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் நேரடியாகவே ஆற்றுப்படுத்தப்படும் எனைய விசேட முறைப்பாடுகளையும் விசாரணை செய்யும் பணிகளை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு மேற்கொள்கிறது. 2010 ஆண்டில் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கதப்பட்ட கைத்தொழில்களுக்கு எற்புடையதாக கிடைத்த 62 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு தீர்வுகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் தலைவரினால் ஆற்றுப்படுத்தப்பட்ட 08 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3.1.1.4 இலங்கை முதலீட்டுச் சபையின் கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் விதப்புரை வழங்கல்

முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களில் புதிய உத்தேச கைத்தொழில்கள் மற்றும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கைத்தொழில்களுக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விதப்புரையை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு வழங்கும். முதலீட்டாளர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பான கள ஆய்வினை மேற்கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகின் உத்தியோகத்தர்களும் முதலீட்டுச் சபையின் சுற்றாடல் பிரிவு உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொள்வார்கள். சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் சுற்றாடல் விதப்புரைகளை வழங்குவதற்காக இலங்கை முதலீட்டுச் சபைக்கு சிபாரிசு செய்யப்படும்.

## 3.1.2 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுக்கான தொழில்நுட்ப அறிவுரைப்புகளை வழங்குதல்

### 3.1.2.1 கூருணர்வுள்ள வலயங்களில் பாரிய மற்றும் நடுத்தர அளவிலான மாசுக் காரணிகளைக் கொண்டுள்ள கைத்தொழில்களை நிறுவதல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான கழு

ஏற்றுமதி வலயங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளுக்கு வெளியே பாரிய மற்றும் நடுத்தர அளவிலான மாசுக்காரணிகளைக் கொண்டுள்ள கைத்தொழில்களை நிறுவுதல் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக தொழில்நுட்பக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. இக்கழுவானது இலங்கை முதலீட்டுச் சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை, கைத்தொழில் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று மட்டத்திலான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்டுள்ளது.

பாரிய கொழும்பின் நீருக்கான கேள்வியில் 75 சதவீதத்தை பூர்த்திசெய்யம் அம்பத்தளை சுத்திகரிப்பு நிலையத்திற்கு களனி கங்கையிலிருந்து நீரைப்பெற்றுக்கொள்வதால் கைத்தொழில் கழிவு நீரினால் களனி கங்கை மாசடைவதைக் கட்டுப்படுத்தல் இக்குழுவின் பிரதான நோக்கமாகும். எவ்வாறாயினும், இன்றளவில் களனி ஆற்றின் வடிநிலத்திற்கு அப்பாற்பட்டதா பாரியளவில் கழிவுநீரை வெளியேற்றும் பாரிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அவற்றுக்கான விதப்புரைகளை வழங்கும் பணிகளையும் இக்குழு மேற்கொண்டு வருகிறது.

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு 2011ஆண்டில் இவ்வாறான 11 குழுக்களை கூட்டியதோடு கைத்தொழில் உரிமையாளர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் மீதான மதிப்பீடுகளையும் செய்துள்ளது.

### 3.1.2.2 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டிற்கு எற்புடையதான கருத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கான தொழில்நுட்பக் குழு

சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாடு மற்றும் கைத்தொழில் நிறுவுகையின்போது சுற்றாடல் விதப்புரைகளை வழங்கும் செயற்பாட்டிற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு உத்திகளை கடைப்பிடிக்கும்பொருட்டு கைத்தொழிலாளர்களை நெறிப்படுத்தும் நோக்கத்துடன் இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக கருத்திட்ட முன்மொழிவாளர்களால் வழங்கப்படும் கருத்திட்ட தொழில்நுட்ப அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக துறைசார்ந்த அறிவுடனான அங்கத்தவர்களை கொண்டமைந்ததும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்துடனும் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாகாண அலுவலகங்களில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கும்போது கைத்தொழில்களின் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பணிகள் முறையான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதோடு சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டை மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

## 3.1..3 சுற்றாடல் தாக்கமதிப்பீடு மற்றும் பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுக்கான தொழில்நுட்ப உதவி வழங்கல்

### 3.1..3.1 சுற்றாடல் தாக்கமதிப்பீடு மற்றும் பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுக்கான தொழில்நுட்ப உதவி வழங்கல்

இப்பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு முறைவழி தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விசேட அங்கத்தவர்களாக கடமையாற்றும் அதேசமயம், குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் பூர்வாங்க சுற்றாடல் ஆய்வறிக்கைகளை மதிப்பீடு செய்யும் பணிகளிலும் ஈடுபடுவார். EIA/IEE செயற்பாட்டின்போது சுற்றாடல்

மாசுக்கட்டுப்பாட்டு விடயத்துறைக்கு அமைவாக கருத்துரைகளும் விதப்புரைகளும் வழங்கப்படும். சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் 14 கருத்திட்டங்கள் சார்பில் தொழில்நுட்பக் குழு அங்கத்தவர்களாக கலந்துகொண்டு சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு சார்ந்த தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளனர்.

### 3.1.3.2 கைத்தொழில் செயற்பாடுகளுக்கான வசதிகளை ஏற்படுத்தல்

கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு இயைபான விதத்தில் கட்டுப்படுத்துவதற்காக கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் நிபுணத்துவ உதவிகளை எற்படுத்துவதற்கான வசதிகளை எற்படுத்தும்பொருட்டு ஆய்வுக்கூட தொழில்நுட்ப நிபுணத்துவ ஆலோசனைச் சேவை வழங்கும் நிறுவனங்களை பதிவுசெய்து பட்டியலிடும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆண்டுதோறும் அவற்றை காலத்திருத்தம் செய்து வருகிறது.

கைத்தொழிலாளர்களுக்கு பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்குவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் குறித்த நிறுவனங்களினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதல் நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்குள்ள தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நிறுவனங்கள் ஆற்றியுள்ள பங்களிப்பினை மதிப்பீடு செய்த பின்னர் தகைமைபெற்ற ஆய்வுக்கூட மற்றும் நிபுணத்துவ நிறுவனங்களை பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தொழிலாளர்களுக்கு குறைந்த செலவில் மேலான தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதனூடாக சுற்றாடலுக்கு எற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தல் இதன் நோக்கமாகும். ஆய்வுக்கூட வசதிகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனைச் சேவைகளை வழங்குபவர்களுக்கும் தமது நிறுவனங்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொண்டு விரிவான சேவைகளை வழங்க முடியும். இதன் பிரகாரம் 2011ஆண்டில் 28 ஆய்வுக்கூடங்களும் 36 நிபுணத்துவ தொழில்நுட்ப நிறுவனங்களும் மேற்படி சேவைகளை வழங்கப் பொருத்தமான நிறுவனங்களென பதிவு செய்யப்பட்டன.

### 3.1.3.3 சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டிற்காக புதிய மூலோபாயங்களை அறிமுகம் செய்தல்

கால்நடை வளர்ப்பு நாளுக்குநாள் தோன்றும் சுற்றாடல் சார்ந்த ஒரு பிரச்சனையாகும். அநேகமான கால்நடை வளர்ப்புக் கைத்தொழில்கள் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன. எனவே இவற்றால் வெளியாகும் தூசித்துகள்கள், துர்நாற்றம் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக எப்போதும் முறைப்பாடுகள் வந்தவண்ணமுள்ளன. இவ்வாறான பிரச்சனைகளுக்கத் தீர்வுகாணும் நோக்கத்துடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு அத்துடன் சுகாதார அமைச்சும் இணைந்து சூழல் நேயம் தொடர்பாக அரச பணியாளர்களை விழிப்பூட்டும் செயலமர்வொன்றை நடாத்தியிருந்தன.

### 3.1.3.4 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை வாழ் மக்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்புக்களை கொண்டு வரக்கூடிய கைத்தொழில் மாசுக்காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்கான பல புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்கிறது.

இதனூடான அனுதின கண்காணிப்பு மற்றும் உரிய நேரத்தில் செயற்படுதல் காரணமாக இரசாயன விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் இந்த வேலைத்திட்டம் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டதாக ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

**ஆ) அரச வர்த்தமானி**

1153/16 ஆம் இலக்க மற்றும் 2008.01.25ஆம் திகதியிலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக செல்லுபடியாகும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் பிரகாரம் கைத்தொழில் செயற்பாட்டில் இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுமாயின் அதனூடான சுற்றாடல் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட நிபந்தனைகளை உள்ளடக்கியதாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் விநியோகிக்கப்படுகிறது. எனவே, இந்த சுற்றாடல் பாதுகாப்பு உரிம செயற்பாட்டுடன் ஒருங்கிணைந்த விதத்தில் இரசாயன விபத்துக்களைத் தடுக்கும் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

மத்திய சற்றாடல் அதிகாரசபையுடன் ஆசிய அனர்த்த முகாமைத்துவ மையமும் தொழில் முயற்சிப் பிரிவும் இணைந்து சமர்ப்பித்த நிதி உதவிகளைப் பெற்றக்கொள்வதற்கான கருத்திட்ட முன்மொழிவுக்கு 2010 ஆண்டில் அங்கீகாரம் கிடைத்தது.

### 3.1.4 சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய மூலோபாயங்களை அறிமுகம் செய்தல்

3.1.4.1 இரசயான விபத்து தடுப்ப நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான SAICM

காட்டில் வாழுயிர் சுற்றாடல் மற்றம் மானிட வர்க்கை என்பனவற்றில் எற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்த ம.சு.அ. சபையின் மா.க.அ இனால் பல செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

சரியான முன்னாயத்த நடவடிக்கைகள் மற்றும் நேரத்துக்கு தோதான கண்காணிப்ப என்பனவற்றை மேற்கொள்வதற்ன மூலம் அனேகமான இரசாயன ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

சர்வதேச சட்டத்தில் கீழ் UNEP இனால் இரசாயண விபத்துக்களை தவிாத்தலும், நிகழ்ச்சித்திட்டம் பூர்வாங்கம் செய்யப்பட்டது. (CAPP)

25.01.2008 ஆம் ஆண்டின் 1533/16 ஆம் இலக்க அரச வர்த்தமான மூலம் தொழிற்சாலை நுழுடு கண்காணிப்பு வழங்கப்பட்டுள்ளது. இரசாயண தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசுபடுதலால் சுற்றாடலின் பாரிய தாக்கங்கள் ஏற்படும் என்பதுடன் இத்தகைய பிரச்சினைகளை நேர்த்தியான திட்டமிடல் 5லம் கறைப்பது CAPP இன் பொறுப்பாகும். கண்டுபிடிக்கப்படுமிடத்து EPL கண்காணிக்கப்படல் வேண்டும்.

இச் செயற்திட்டத்துக்கென பெறப்பட்ட நிதியுடன் ஆரமப் நடவடிக்கைகள் 2011 இல் முற்றாகிக்கப்பட்டது.

### 3.1.4.2 சேிய பசுமை விருதுத் திட்டம்

NEA இன்படி CEA ஆனது சுற்றாடல் மாசுபடுதல் கட்டுப்பாடு, சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடல் விழிப்புணர்வு மற்றம் உகல்வி முதலியவற்றை நடைமுறைப்படுத்த முடியம். தொழிற்சாலை நடவடிக்கைகளில் இருந்து ஏற்படும் மாசகட்டுபபாட்டினை கட்டுப்படுத்த 25.01.2008 ஆம் திகதிய 1538/1ம் இலக்க அரச வர்த்தமானி மூலம் நீடு வழங்கும் செயன்முறை அறிமகம் செய்யப்பட்டது.

இளம் தலை முறையினருக்க சுற்றாடல் கல்வி ஊட்டுவதற்கு பாடசாலை சூழல் முன்னோட கற்றல் ஊடாக சுற்றாடல் கல்வி மற்றம் விழிப்பூட்ழ் நிகழ்ச்சித்திட்ம் மேற்கொள்ளப்படுகிறது.

இருப்பினும் உநய இன் இலக்கை எய்வதற்கும் மேற்குறிப்பிட்ட சட்ட மற்றம் நிருவாக முறகைள் போதாது (நடவடிக்கைகளை செயன்முறைப்படுத்தும்போது CEA பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றது.)

எனவே தொழிற்சாலைகள், பாடசாலைகள் மற்றம் உள்ளூராட்சி சபைகள் மற்றம் ஏனைய நிறுவனங்கள் தமது பசுமை அலகு முறையினை ஊக்கவிக்க CEA தேசிய பசுமை விருது முறைமையினை பிரேரித்தது.

னவே சுற்றாடலின் தரத்தை உறுதி செய்யவும் இயற்கை வளத்தினை நிலைபேறாக பாவனை செய்தல், மாசு கட்டுப்பாட்டை தன்னார்வமான கொள்கையாக தேசிய பசமை விருத் திட்டம் பூர்வாகம் செய்யப்பட்டது.

### 3.1.4.3 பயிற்சி வேலைக்களம், கூட்டங்கள் மற்றும் சமர்ப்பிப்புக்கள்.

அலகுகளின் நடவடிக்கை மற்றம் பொறுப்புக்களை செயற்திறன்மிக்கதாக ஆமுலாக்குவதற்கு பயிற்சிகள் மிக முக்கியமானது. நீடு அலகினால் பின்வரும் பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

அ. பிரச்சினைகளை இனம் காணும் வேலைக்களம் தெட்டதெளிய விலங்கு பண்ணை பயிற்சி மையத்தில் நடாத்தப்பட்டது.

ஆ. CEA கம்பஹா மாவட்ட அலவலக உத்தியொகத்தாக்ள் சௌக்கிய அமைச்சின் கள உத்தியோகத்தர்க்களை பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

இ. கைத்தொழிற்சாலை சமூகம் மற்றும் பொது மக்களக்கு 2011 இல் மாசு சட்டுப்பாடு தொடர்பான 27 சமர்ப்பிப்புக்கள் / விரிவுரைகள் நடாத்தப்பட்டது.

ஈ. மாசுகட்டுப்பாடு தொடர்பான 36 பயிற்சி நெறி, வேலைக்களம் மற்றும் கூட்டம் பொன்ற 36 நிகழ்வுகளை நீஊ ஆலுகு நடாத்தியுள்ளது.

## முன்னேற்றச் சுருக்கம் 2011
## சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

| **தொழிற்பாடு** | **முன்னேற்றம்** | | **பிற** |
|---|---|---|---|
| | **பௌதீக** | **நிதி** | |
| **1. சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் முதலீட்டுச் சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை** | | 2010ஆம் ஆண்டில் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகிற்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூபா 15,00,000/-<br><br>அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு செலவு செய்துள்ள தொகை ரூபா 969667.90<br><br>திட்டமிட்டல் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லத் தேவையான மேலதிக நிதி பணிப்பாளர் தலைமை அதிபதியின் விசேட அனுமதியின் கீழ் பெறப்பட்டது | செயற்பாட்டுச் செலவுகள் முதலீட்டுச் சபையால் ஏற்கப்பட்டுள்ளன. |
| • புதிய கைத்தொழில்களுக்குத் தேவையான சிபாரிசுகள் | 72 | | |
| • தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான சிபாரிசுகள் | 156 | | |
| • புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் | 48 | | |
| • புதுப்பிக்கப்பட்ட பாதுகாப்பு உரிமங்கள் | 297 | | |
| **2. சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் மத்திய சுற்றாடல் அதிகாரசபை** | | | |
| • தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கலும் கள ஆய்வும் | 43 | | |
| • விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 21 | | |
| • நடவடிக்கை எடுக்கப்பட்ட முறைப்பாடுகள் | 117 | | |
| **3. நிபுணத்துவ ஆலோசனை நிறுவனங்கள், ஆய்வுக்கூட பட்டியலை காலத்திருத்தம் செய்தல்** | | | |

| தொழிற்பாடு | முன்னேற்றம் | | பிற |
|---|---|---|---|
| | பௌதீக | நிதி | |
| • ஆயுவுக்கூட பதிவிற்கான விண்ணப்பங்கள் | 55 | | |
| • நிபுணத்துவ ஆலேசனை சேவை பதிவிற்கான விண்ணப்பங்கள் | 18 | | |
| • பதிவு செய்யப்பட்ட ஆய்வுக்கூடங்கள் | 37 | | |
| • பதிவு செய்யப்பட்ட நிபுணத்துவ ஆலோசனை சேலைவ நிறுவனங்கள் | | | |
| **4. நீதி மன்றத்தில் தோன்றலும் நிபுணத்துவ சாட்சியங்களும்** | 32 | | |
| • சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக நீதி மன்றத்தில் தோன்றல் | 52 | | |
| • நீதி மன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பு | 27 | | |
| • சட்ட ஆலோசனைகள் | 47 | | |
| **5. கருத்திட்ட முன்மொழிவு மதிப்பீட்டுக் குழு** | | | |
| • கூட்டப்பட்ட கூட்டங்கள் | 10 | | |
| • மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட அறிக்கைகள் | 38 | | |
| **6. பாரிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கான குழுக்கள்** | | | |
| • கூட்டப்பட்ட கூட்டங்கள் | 32 | | |
| • கண்காணிப்பு கள ஆய்வுகள் | 52 | | |
| • மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் | 27 | | |
| • சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் | 47 | | |
| **7. சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களுக்கான இலக்கங்கள்** | | | |
| • “ஏ” வகுதியின் புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிம இலக்கங்கள் | 7 | | |
| • “ஏ” வகுதியின் புதிய சுற்றாடல் பாதுகாப்பு கோப்பு இலக்கங்கள் (புதிய கோப்புகள்) | 26 | | |
| • “ஏ” வகுதியில் புதுப்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் | | | |
| **9. பயிற்சிகள்/** | 886 | | |

| தொழிற்பாடு | முன்னேற்றம் | | பிற |
|---|---|---|---|
| | பௌதீக | நிதி | |
| **செயலமர்வுகள், கூட்டங்கள், சமர்ப்பணங்கள்** | | | |
| • சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகினால் நடாத்தப்பட்ட விரிவுரைகள் | 1418<br>1509 | | |
| • பயிலமர்வுகள் | 27 | | |
| • சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு பங்கேற்ற செயலமர்வுகள் | 4 | | |
| • சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு பங்கேற்ற கூட்டங்கள் | 36 | | |
| **10. பங்கேற்ற EIA குழுக் கூட்டங்கள்** | 18 | | |

## 3.2 ஆய்வுக்கூடச் சேவைகள்

### 3.2.1. வளித்தரக் கண்காணிப்பு

தானியங்கி வளித்தரக் கண்காணிப்பு நிலையத்தின் உதவியுடன் 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்:டு வரை கொழும்புக் கோட்டையில் காபன் மொனொக்சைட்டு, நைதரசன் டயொக்சைட்டு, சல்பர் டயொக்சைட்டு மற்றும் நுண்துணிக்கை (PM 10)களுக்கான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நைதரசன் டயொக்சைட்டு மற்றும் சல்பர் டயொக்சைட்டு அதிகரித்துச் செல்லும் போக்கினை வெளிப்படுத்தியுள்ளதோடு காபன் டயொக்சைட்டு மற்றும் நுண்துணிக்கைகள் (PM 10) குறைந்து செல்லும் போக்கினைக் காட்டியுள்ளன. பயன்படுத்தப்பட்ட ஏனைய வளி அளவீட்டு உபகரணங்கள் 15ஆண்டுகளுக்கு மேலாக பழமைவாய்ந்தவையாக இருப்பதாலும் அவற்றுக்குத் தேவையான துணையுறுப்புக்கள் தயாரிக்கப்படாததாலும் நகழ்காலத்தில் நுண்துணிக்கைகள் (PM 10) மாத்திரம் அளவிடப்படுகின்றன.

**1 இலங்கையில் வளித் தரக் கண்காணிப்பு நடவடிக்கைகள்**

1998 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் கொழும்புக் கோட்டை நுண்துணிக்கை (PM 10) களின் வருடாந்த சராசரி பெறுமானம் கீழுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு நுண்துணிக்கை (PM 10) களின் பெறுமானம் உச்ச எல்லையை (தாங்கும் மட்டம்) விஞ்சியுள்ளபோதிலும் கடந்த பத்தாண்டு காலத்தில் குறைந்து செல்லும் போக்கினைக் காட்டியுள்ளது.

## 2 இலங்கையில் வளித் தரக் கண்காணிப்பு




இதற்குச் சமாந்தரமாக நகரின் சுற்றுப்புற வளியின் தரம் அளவீடு செய்யப்பட்டது. சல்பர் டயொக்சைட்டு மற்றும் காபன் மொனொக்சைட்டின் செறிவு தேசிய மட்டத்திலும் மிகக்குறைந்த பெறுமானத்தைப் பதிவுசெய்துள்ளது. எவ்வாறாயினும் நுண்துணிக்கை(PM 10) களின் செறிவானது தேசிய மட்டத்தினை அண்மித்திருப்பதை வரைபு காட்டுகிறது.









இவ் நியமம் CEA சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இதனை செயன்முறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் வளி மாசபடுதலை கட்டுப்படுத்த உநய இன் யஙஅர அலுவலர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட்டது. ஜப்பான் சர்வதேச ஒருங்கமைப்பு தொழிலகத்தால் (JICA) ‘‘வளி மாசுடைதல் வளி முகாமைத்துவம்’ மற்றும் ‘நிலைபேறான போக்குவரத்து முகாமைத்துவம்’’ எனும் விடயங்களில் பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

### 3.2.1.3 நாடுகளுக்கிடையிலான எல்லைகளினுஸடாக நிகழும் வளிமாசு கண்காணிப்பு

மாலே பிரகடனச் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாக தெற்காசியாவில் நாடுகளுக்கிடையிலான எல்லைகளினூடாக நிகழும் வளிமாசடைவு, அதன் தாக்கம், வளி மாசடைவதைக் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மாலே பிரகடனச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமாகவும் செயற்படுகிறது.

### 3.2.1.4 அமில மழை கண்காணிப்பு

நாடுகளுக்கிடையிலான எல்லைகளினூடாக ஏற்படும் வளிமாசடைதலினால் அமில மழை பெய்வதற்கான இடர்வருநிலை அல்லது செல்நெறி காணப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்கான வேலைத் திட்டமொன்றை மாலே பிரகடன கருத்திட்டத்தின் கீழ் எமது ஆய்வுக்கூடம் ஆரம்பித்துள்ளது. இதற்கென மிகிந்தலை தொரமண்டலாவ பிரதேசத்தில் மழை நீர் சேகரிக்கப்பட்டு அதன் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

### 3.2.1.5 நீரின் தரத்தை கண்காணிப்பு

ஆய்வு கூடம் சுற்றாடல் பாதுகாப்பு உரிம முறைமை ஆமுலாக்கம் மற்றும் வசதி ஏற்படுத்துதல்.

1988ம் ஆண்டின் 56ம் இலக்கம் மற்றம் 2000 ஆண்டின் 53ம் இலக்க சட்ட மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1980ம் ஆண்டின் 47ம் இலக்க நேுயு இன்படி சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஒழுங்கு.்.சட்ட தேவையாகும். நீடு பெறப்பட வேண்டிய தொழிச்சாலைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலைகளில் எற்படும் மாசுபடுத்தலின் அடிப்படையில் ''அ'' ''ஆ'' ''இ'' என வரைகப்படுத்தப்பட்டுள்ளது. வகை 'அ'' மற்றும் 'ஆ'' க்கான தொழிற்சாலைகள் உநயு இடம் அனுமதி பெற வேண்டும்.

| கண்காணிப்பின் நோக்கம் | சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| EPL | 161 |
| சட்டம் | 26 |
| புகார் | 20 |
| கண்காணிப்பு | 112 |
| வர்த்தக தொழிற்சாலைகள் | 114 |
| மாதிரிகளின் எண்ணிக்கை | **433** |

நாடளாவிய ரீதியில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நீரை கண்காணித்து, பகுப்பாய்வு செய்து அறிக்கையிம் வேலையில் CEA இன் EPL பிரிவு நீரின் தர கண்காணிப்பு ஆய்வுகூடம்

மேற்கொண்டது. 2011 இல் 433 தொழிற்சாலை வெளியேற்றம் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகப்பாய்வு செய்யப்பட்டது. இதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| மேற்பரப்பு நீர் பெயர் | சேகரிக்கப்பட்ட மாதிரிகள் எண் |
|---|---|
| களனி ஆறு | 156 |
| மகாஒயா | 88 |
| தலங்கம | 12 |
| பொறபங்கமுவ | 32 |
| பொல்கொட | 16 |
| டடுகமஓயா | 60 |
| பெந்தோட்டை | 61 |
| வர்த்தக மேற்பரப்பு | 91 |
| **மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை** | **516** |




**நாட்டின் மேற்பரப்பு நீர் நிலைகளின் கண்காணிப்பு**

அட்டவணை 1 – 2011 இல் தொழிற்சாலை வெளிவிடும் கழிவு நீரை கண்காணிப்பு.



அட்டவணை 2011 காலப்பகுதியல் 510 மேற்பரப்பு நீர் நிலை மாதிரிகள் சேரிக்கப்பட்டு 16 வளியலகுகளுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது. கொரிய சுற்றாடல் ஒருங்கமைப்பினால் வழங்கப்பட்ட (KECO) நிதியில் இருந்து பொல்கொட வாவி, தலங்கம குளம், மற்றும் பெந்தோட்ட ஆறு என்பனவற்றின் மாதிரிகள் தொடாச்சியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. வருடம் பூராகவும் களனி ஆறு மற்றும் பொறலங்கமுவ ஆறு என்பன கண்காணிப்பு செய்யப்பட்டது. திறைசேரியால் வழங்கப்பட்ட நிதியில் இரந்து மகா ஓயா, மற்றும் டடுகஸ் ஓயா என்பன கண்காணிப்பு செய்யப்பட்டது.

வர்த்தக ரீதியான பரீட்சையால் பெறப்பட்ட வருமானம்




2011 காலப்பகதியில் 22மு மானது வர்த்தக பரீதியாகவும் 78% சேவை அடிப்படையிலும் ஆய்வுகூட சேவை நடாத்தப்பட்டது. வர்த்தக ரீதியில் இரந்து ரூபா 1.6 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது.




## 3.3 கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகு

2010 ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்தால் கண்டறியப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள் மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு ஏற்புடையதாக பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

a. தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்
b. சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

c. திண்மக் கழிவுப்பொருள், தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவ அலகிற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.3.1 பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படத்தல்

இலங்கை 1992.08.28ஆம் திகதியன்று கழிவுப்பொருட்களை கொண்டு செல்லவும் அப்புறப்படுத்தலுக்குமான பாசல உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதோடு அன்று தொடக்கம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இலங்கையில் இவ்வுடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளது.

### 3.3.2 **பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படத்தல்**

#### 3.3.2.1 உடன்படிக்கையின் B பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை இறக்கமதி செய்தல்

பாசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுற்றாடல் அமைச்சின் கீழ் தொழிற்படும் தேசிய இணைப்புக் குழு (NCC) வினூடாக இலங்கையில் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு அவசியமான தொழில்நுட்பம் விடயங்கள் சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளும்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்காக தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது முக்கியமாக பாசல் உடன்படிக்கையின் B பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்து மூலப்பொருட்களாக உபயோகித்து ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கைத்தொழில்களுக்கான சிபாரிசுகளை வழங்கி வருகிறது. (பாசல் உடன்படிக்கையின் பட்டியல் A இல் உள்ளடக்கப்பட்டுளள கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்யப்படுவதற்கு அமைச்சரவைத் தீர்மானத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.)

அண்மைக்காலமாக இலங்கைச் சுங்கம் மூலமாக இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொலித்தீன், பி.வி.சீ, போம் இறப்பர் போன்றவற்றை சுங்கப்பகுதியிலிருந்து விடுவிப்பதற்கு முன்னர் அது பற்றி மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் விசாரிக்கப்படும்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட ஒருசில கழிவுப்பொருட்கள் பாசல் உடன்படிக்கையின் பட்டியல் B இல் நிரல்படுத்தப்பட்டவையாக அமைவதோடு இச்செயற்பாட்டினை மேலும் ஒழுங்குப்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழிகாட்டல் கோவையொன்றைத் தயாரித்துள்ளதோடு தேசிய இணைப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு இவ்விதமாக இறக்குமதி செய்யப்பட்ட கழிவுப்பொருட்களின் தூய்மையும்

இறக்குமதி செய்யப்பட்ட முழு அளவும் உற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தப்படுமாவென்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இத்தொழில்நுட்ப வழிகாட்டியிலுள்ள ஒழுங்கு விதிகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக 2010 ஆண்டில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்கள் தொடர்பாக 49 கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு மத்திய சுற்றாடல் அதிகாரசபை 48 கொள்கலன்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. எஞ்சிய கொள்கலன் நிராகரிக்கப்பட்டுள்ளது. 2010 ஆண்டில் கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 12 கோரிக்கைகளை கைத்தொழிற்சாலைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் முன்வைத்துள்ளன. இந்த கோரிக்கைகள் / முன்மொழிவுகள் 04 இணைப்புக் குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு அவற்றுக்கான விதப்புரைகள் வழங்கப்பட்டன.

### 3.2.2.2 நாடுகளுக்கிடையில் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருட்களை கொண்டுசெல்லல்

பாசல் உடன்படிக்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பெற்ற நிறுவனமாக இயங்கி வரும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2010 ஆண்டில் பாசல் உடன்படிக்கையின் A பட்டியலில் நிரல்படுத்தப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை இந்நாட்டு எல்லையினூடாக கொண்டுசெல்வதற்கான 08 அங்கீகாரங்களையும் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான 02 அங்கீகாரங்களையும் வழங்கியுள்ளது.

### 3.3.3 றொரர்டேம் உடன்படிக்கைளை நடைமுறைப்படுத்தல்

3.3.1. இலங்கையில் றொரர்டேம் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக 2011 ஆண்டில் கைத்தொழில் இரசாயன முகாமைத்துவம் தொடர்பான 02 தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு அதில் இலங்கையில் எல்பெஸ்ரோஸ் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அது சார்ந்து ஏற்படும் நோய்களைக் தவிர்ப்பதற்கான தேசியக் கொள்கையொன்றை வகுக்க தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆய்விற்கான முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கான தேசியக் கொள்கையொன்றைத் தயாரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **தேசிய இரசாயன விபரங்களைக் காலத்திருத்தம் செய்தலும் இலங்கையில் இரசாயனப் பொருட்களின் முகாமைத்துவம் தொடர்பான திட்டமொன்றைத் தயாரித்தலும்.**

  இரசாயனப் பொருட்களின் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மூலோபாய வேலைத்திட்டத்தின் கீழ் நிதியுதவி கிடைத்தவுடன் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **இலங்கையில் பயன்படுத்தப்படும் வர்ணப் பூச்சுக்களில் அடங்கியுள்ள ஈயத்தின் அளவைக் கட்டுப்படுத்தல்**

இவ்விடயம் தொடர்பான ஆரம்பக் கலந்தாய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இலங்கை கட்டளைகள் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள வர்ணப் பூச்சுக்களில் அடங்கியுள்ள ஈயத்தின் அளவு தொடர்பான நியமங்களை மீளாய்வு செய்வதற்காகவும் அத்துடன் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் அதனை கட்டாயமாக்குவதற்கான கோரிக்கையொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

- **இலத்திரன் மற்றும் மின் சாதன முகாமைத்துவம்**

இலத்திரன் கழிவுப்பொருட்கள் உலகமெங்கும் துரிதமாக பரவி வரும் சுற்றாடல் பிரச்சினையாக் மாறியுள்ளதோடு இதனால் மனிதனின் ஆரோக்கியத்திற்கு பாதகமான தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன. பாசல் உடன்படிக்கைக்கு அமைய இலத்திரன் மற்றும் மின் கழிவுப்பொருட்கள் தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருள்களாக கருதப்படுவதோடு துரித கவனம் செலுத்தப்படவேண்டிய ஒரு பிரச்சனையாகவும் முன்னுரிமைபடுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான கவனம் திரும்பியுள்ளது. கடந்த ஒருசில ஆண்டுகளில் இலங்கையிலும் இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான சாதனங்கள் குறைந்த பாவனைக் காலத்தைக்கொண்டிருப்பதால் அவை இலத்திரனியல் கழிவுப்பொருட்களாக சேமிக்கப்பட்டு சுற்றாடல் சார்ந்த பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. இவ்வாறான அனைத்து சாதனங்களிலும் பல்வேறு பொருட் கூறுகள் அடங்கியிருப்பதால் அவற்றை முறையாக அப்புறப்படுத்தாவிடின் பாதிப்புக்கள் ஏற்டக்கூடும். பார உலோகங்களாகக் கருதப்டும் பாதரசம், ஈயம், கட்மியம், அந்திமனி, பெரலியம், ஆசனிக் மற்றும் தீயின் வேகத்தைக் குறைக்கும் பதார்த்தங்கள் என்பனவற்றை இவை கொண்டுள்ளன. இவை மனித உடலில் புற்றுநோய் மற்றும் ஏனைய பாதிப்புகளை ஏற்படுத்த காரணமாகின்றன. எனவே, இவ்வாறான கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதால் அழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இலத்திரனியல் கழிவுப்பொருட்களை முகாமைத்துவம் செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தைக் கண்டறிந்த பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை விழிப்பூட்டுவதற்கான செயலமர்வுகளையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடாத்தியுள்ளது.




**தயாரிக்கப்பட்ட கையேட்டின் படம்**

## 4.0 சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு

### 4.1 சுற்றாடல் தாக்க செயன்முறை

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் இயற்கைவள முகாமைத்துவப் பணிகளின் பொறுப்பினை சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு ஏற்றுள்ளது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு இச்செயற்பொறுப்பினை நிறைவேற்றும் மிக முக்கியமான கருவியாக கருதப்படுகிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய கருத்திட்டங்களின் பட்டியல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இயற்கைவள முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு பிரிவு பெருமபாலும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் அடங்காத கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் சார்ந்த விதப்புரைகளை வழங்கி வருகிறது.

தற்காலத்தில் சுற்றாடல் மதிப்பீட்டுச் செயற்பாட்டில் அடங்காத இருப்பினும் சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் தேவைப்படும் அநேகமான கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் விதப்புரைகளை வழங்கும் பணிகளை அதிகார சபையின் பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் சிறியளவிலான கருத்திட்டங்கள் சிலவற்றையும் மேற்படி அலுவலகங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

**2011ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டதாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவினால் அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| தொஇல | கருத்திட்டம் | சு.தா.ம/ ஆ.சு.ஆ |
|---|---|---|
| 01 | பூனாகல சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 02 | இங்கிரிய சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 03 | உத்தேச ஏற்றுமதி வலயம் II, பர்ன் வத்த, ஹொரண (பரிகார தொகுதி நிறுவுகையை மாற்றியமைத்தல்) | மேலதிக சு.தா.ம |
| 04 | ஈரியகம புதிய நகர் அபிவிருத்த கருத்திட்டம், பேராதளை | ஆ.சு.ஆ |
| 05 | 400 மீற்றர் சுய பாதுகாப்பு வலைய அபிவிருத்தி கருத்திட்டம், முதுராஜவல | சு.தா.ம |
| 06 | மாத்தறை-கொழும்பு புகையிரத வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் (கட்டம் II) | ஆ.சு.ஆ |
| 07 | எல்லேவெவ உயிர் வாயு கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 08 | உத்தேச படகு மீதான வீடமைப்புத் திட்டங்களும் ஹோட்டல்களும் நுவரெலியா | ஆ.சு.ஆ |

**2011 ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டதாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவினால் நிராகரிக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| தொஇல | நிராகரிக்கப்பட்ட கருத்திட்டம் | சு.தா.ம/ ஆ.சு.ஆ |
|---|---|---|
| 01 | கோல்டன் சன்ரயிஸ் கம்பனியின் உத்தேச கரதியான பிரதேசத்தில் கழிவகற்றல், முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பல் நோக்கு வளங்களை மீளப் பெறுதல் மற்றும் உயிர் மாற்று தொழிற்பாட்டுக் கருத்திட்டம் | **ஆ.சு.ஆ** |

**2011 ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கருத்திட்டங்கள்**

| தொ இல | கருத்திட்டம் | சு.தா.ம/ ஆ.சு.ஆ |
|---|---|---|
| 01 | உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 02 | உத்தேச முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், சூரியவெவ, அம்பாந்தோட்டை | சு.தா.ம |
| 03 | மரங்கள் தரிப்பு, மீள் நடுகை கருத்திட்டம், “வுட்சயிட்” அரச தோட்டம், மெத மஹநுவர | சு.தா.ம |
| 04 | “Forest Rock Gwden” ஹோட்டல் நுவரெலிளா | சு.தா.ம |
| 05 | பிபில சீனி அபிவிருத்தி கருத்திட்டம், ரிதிமாலியத்த | சு.தா.ம |
| 06 | அழுக்கு நீக்கிப்பொருள் உற்பத்தி கருத்திட்டம், மத்துகம | சு.தா.ம |
| 07 | கரைக்கு அப்பால் மணல் அகழ்வு கருத்திட்டம், கெரவலபிட்டிய | சு.தா.ம |
| 08 | உத்தேச மூலிகைச் செடி வளர்ப்பு கருத்திட்டம், தொளுவ | சு.தா.ம |
| 09 | மரங்களைத் தரித்தல், மீள் நடுகை கருத்திட்டம், எலகொலே அரச தோட்டம், பன்வில | சு.தா.ம |
| 10 | மரங்களைத் தரித்தல், மீள் நடுகை கருத்திட்டம், கெலேபொக்க அரச தோட்டம், பன்வில | சு.தா.ம |
| 11 | உத்தேச குருநாகல் ஹபரண (தம்புள்ளை ஊடான) புகையிரத வீதி விஸ்தரிப்பு கருத்திட்டம் | சு.தா.ம |
| 12 | ஏண்டேரமுல்ல நகர் அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 13 | அக்குரெஸ்ஸ நகர் விஸ்தரிப்பு கருத்திட்டம் | |
| 14 | பின்லே கம்பனியின் அளவு அதிகரிப்பிற்கான உத்தேச பரகார கழிவு முகாமை கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 15 | கண்டி நகர சபைக்கான உத்தேச குஹாகொட குப்பைகளை அப்புறப்படுத்தும் நிலப்பரப்பு புனரமைப்பு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட திணமக் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் | சு.தா.ம |
| 16 | கோல்டன் சன்ரயிஸ் கம்பனியின் உத்தேச கரதியான குப்பைகளை அப்புறப்படுத்தும் நிலப்பரப்பு புனரமைப்பு மற்றும் வளியின்றி குப்பைகளை உக்கச் செய்யும் கருத்திட்டம் | சு.தா.ம |
| 17 | உத்தேச நகர திண்மக் கழிவு பரிகார, உற்பத்தி மற்றும் குப்பைக்கூளங்களிலிருந்து சக்திவலு உற்பத்தி கருத்திட்டம், நவகமுவ, கடுவெல | சு.தா.ம |
| 18 | உத்தேச 40 மெகா வாற் கலப்பு நகர மற்றும் திண்மக் கழிவுப் பொருட்களிலிருந்து சக்திவலு உற்பத்தி கருத்திட்டம். கெரவலபிட்டிய, முதுராஜவெல | சு.தா.ம |
| 19 | காலி மாநகர சபை எல்லையில் கழிவு நீரகற்றல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 20 | நீர்கொழும்பு மாநகர சபை எல்லையில் கழிவு நீரகற்றல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 21 | யான் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 22 | பதுளை, ஹாலிஎல, எல்ல ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 23 | சீதாவக்க கைத்தொழில் பேட்டைக்கு களனி கங்கையிலிருந்து நீரைப் பெறுவதற்கான அணை நிர்மாணிப்பு கருத்திட்டம். | ஆ.சு.ஆ |
| 24 | ஹசலக வெல்கஹவாடிய மாணிக்கக்கல் அகழ்வு கருத்திட்டம் (கட்டம் II) | ஆ.சு.ஆ |
| 25 | உத்தேச விளையாட்டரங்கு கருத்திட்டம், நுவரெலியா | ஆ.சு.ஆ |
| 26 | மரங்கள் தரிப்பு, மீள் நடுகை கருத்திட்டம், கொட்டகஹ அரச தோட்டம், தெல்தெனிய | ஆ.சு.ஆ |
| 27 | கொழும்பு நகருக்கு வெளிச்சுற்று வீதியில் கெரவலபிட்டி ஊடறுப்பிற்கான உத்தேச மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டம் | சு.தா.ம |
| 28 | மாலிம்பொட சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 29 | உத்தேச பெனல் மரத்தரிப்பு மற்றும் மீள் நடுகை கருத்திட்டம், வாரியகலவத்த மேல் பகுதி, நில்லம்பே | சு.தா.ம |
| 30 | நீர்கொழும்பு, மாரி ஸ்ரெலா வித்தியாலயத்தின் இணைந்த பாடசாலைக்கான | ஆ.சு.ஆ |

| தொ இல | கருத்திட்டம் | சு.தா.ம/ ஆ.சு.ஆ |
|---|---|---|
| | காணியை அபிவிருத்தி செய்தல் | |
| 31 | கித்துல்கல சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 32 | மீரிகம ஏற்றுமதி வலய மாற்றங்கள் | ஆ.சு.ஆ |
| 33 | எரத்ன II சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 34 | அடவிகந்த II சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 35 | மருகந்த சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 36 | மரங்கள் தரிப்பு, மீள் நடுகை கருத்திட்டம், கொட்டகஹ அரச தோட்டம், தெல்தெனிய | ஆ.சு.ஆ |
| 37 | கொழும்பு நகருக்கு வெளிச்சுற்று வீதியில் கெரவலபிட்டி ஊடறுப்பிற்கான உத்தேச மாற்றங்கள் தொடர்பான கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 38 | மாலிம்பொட சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 39 | உத்தேச பெனல் மரத்தரிப்பு மற்றும் மீள் நடுகை கருத்திட்டம், வாரியகலவத்த மேல் பகுதி, நில்லம்பே | சு.தா.ம |
| 40 | நீர்கொழும்பு, மாரி ஸ்ரெலா வித்தியாலயத்தின் இணைந்த பாடசாலைக்கான காணியை அபிவிருத்தி செய்தல் | ஆ.சு.ஆ |
| 41 | கித்துல்கல சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 42 | மீரிகம ஏற்றுமதி வலய மாற்றங்கள் | ஆ.சு.ஆ |
| 43 | எரத்ன II சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 44 | அடவிகந்த II சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 45 | மருகந்த சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |

இவை தவிர தெரிவுசெய்யவுள்ள கருத்திட்டங்களுக்கான பூர்வாங்க சுற்றாடல் ஆய்வினை மேற்கொள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது தேவையான ஒத்துழைப்பும வழிகாட்டல்களும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவினால் வழங்கப்படும்.

மேலும், ஏனைய கருத்திட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கும் நிறுவனங்கள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தியபோது தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

**2011ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தியபோது கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் ஏனைய நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்ட கருத்திட்டங்கள்**

| தொ இல | கருத்திட்டம் | சு.தா.ம/ பூ.சு.ஆ |
|---|---|---|
| 01 | உத்தேச புதிய நகர் கருத்திட்டம், வடவந்தனா வீதி, அனுராதபுரம் | பூ.ம.ஆ |
| 02 | மரங்களைத் தரிக்கும் கருத்திட்டம், ஹெயாபாக் அரச தோட்டம் | பூ.ம.ஆ |
| 03 | காலி – மாத்தறை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | பூ.ம.ஆ |
| 04 | கிளிநொச்சி – சுன்னாகம் வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | பூ.ம.ஆ |
| 05 | அம்பேவெல பண்ணையில் விலங்கு மெ.ஹொ 03 காற்று மின் உற்பத்தி கருத்திட்டம் | பூ.ம.ஆ |
| 06 | உத்தேச சுற்றுலா ஹோட்டல் கருத்திட்டம், பாசிக்குடா | பூ.ம.ஆ |
| 07 | ஹபரண – வாழைச்சேனை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | பூ.ம.ஆ |
| 08 | ஹபரண – வாழைச்சேனை வரையான உத்தேச 220KV மின் கடத்தும் வழி | பூ.ம.ஆ |
| 09 | உத்தேச விக்ரோரியா நீர் மின் உற்பத்தி விரிவாக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 10 | வடக்கு – கிழக்கு மின் கடத்தும் வழி கருத்திட்டம் | பூ.ம.ஆ |
| 11 | உத்தேச திக்கல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | சு.தா.ம |
| 12 | உத்தேச கிவுல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | சு.தா.ம |
| 13 | உத்தேச ஓவல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | சு.தா.ம |

| தொ இல | கருத்திட்டம் | சு.தா.ம/ பூ.சு.ஆ |
|---|---|---|
| 14 | உத்தேச அன்கந்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | சு.தா.ம |
| 15 | உத்தேச உடுவன்கந்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், பாலிந்த நுவர | ஆ.சு.ஆ |
| 16 | உத்தேச மாதுசெடே சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், நெளுவ | ஆ.சு.ஆ |
| 17 | மஹியங்கனை – பதியதலாய கண்டி வீதி அபிவிருத்தி மற்றும் செப்பனிடும கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 18 | துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம், காலி முகத்திடல் | சு.தா.ம |
| 19 | மொறகஹகந்த கமத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 20 | திருப்பனே உயிர் வாயு பயன்பாட்டு மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 21 | சோளப் பயிர்ச்செய்கை கருத்திட்டம், கந்தளாய் | ஆ.சு.ஆ |
| 22 | மன்னார் வளைகுடா சார்ந்த கடற்பரப்பில் கனிய எண்ணெய் அகழ்வாராய்ச்சி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 23 | ரன்தெம்பே – மஹியங்கனை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 24 | நீர்கொழும்பு ஹோட்டல் கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 25 | ROSS ESTATE சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், சுதுகங்கை மாத்தளை | சு.தா.ம |
| 26 | கொலதெனிய சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 27 | ரஜ்ஜம்மன சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 28 | தம்புளுஓயா சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 29 | உத்தேச உப்பள அபிவிருத்தி கருத்திட்டம், திபுருபிட்டிய, திருகோணமலை | சு.தா.ம |
| 30 | உத்தேச விடுமுறை விடுதி, அத்திடிய | சு.தா.ம |
| 31 | உத்தேச கருங்கல் உடைப்பு கருத்திட்டம், காயங்குளம், ஓமந்தை | ஆ.சு.ஆ |
| 32 | உத்தேச வீடமைப்பு கருத்திட்டம், ஹல்முல்ல, கொரிகாவத்த | ஆ.சு.ஆ |
| 33 | காற்று மின் உற்பத்தி கருத்திட்டம், பூநகரி | ஆ.சு.ஆ |
| 34 | நகர பூங்கா – பொலனறுவை | ஆ.சு.ஆ |
| 35 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹஙவல, திவுலப்பிட்டி | ஆ.சு.ஆ |
| 36 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கெக்ரிறாவ, இம்புல்கஸ்வெவ | ஆ.சு.ஆ |
| 37 | உத்தேச அறைகள் 428 ஹோட்டல் கருத்திட்டம், கட்டுநாயக்க | ஆ.சு.ஆ |
| 38 | உத்தேச அறைகள் 200 ஹோட்டல் கருத்திட்டம், கட்டுநாயக்க | ஆ.சு.ஆ |
| 39 | உத்தேச மீன்பிடித் துறைமுகம், சுதுவெல்ல | ஆ.சு.ஆ |
| 40 | புலத்வத்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 41 | மாணிக்க கங்கை சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 42 | கொன்தூவ/ஊறுதூவ அபிவிருத்திக் கருத்திட்டம், பொல்கொட, பாணந்துறை | ஆ.சு.ஆ |
| 43 | உத்தேச மீன்பிடித் துறைமுகம், திக்வெல்ல | ஆ.சு.ஆ |
| 44 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், மில்லனியவத்த, பணடாரகம | ஆ.சு.ஆ |
| 45 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கடவரகெலே, அம்பாந்தோட்டை | ஆ.சு.ஆ |
| 46 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹல்பராத, பாதுக்க | ஆ.சு.ஆ |
| 47 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கொரதொட்ட, கடுவெல | ஆ.சு.ஆ |
| 48 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹங்கவத்த, மாதிகியாவல, திவுலபிட்டி | ஆ.சு.ஆ |
| 49 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், குருளுபெட்டிகலஈ நொச்சியாகம | ஆ.சு.ஆ |
| 50 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், குப்பியாகம, வவுனியா | ஆ.சு.ஆ |
| 51 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், அரங்கல, ஹோகந்தர | ஆ.சு.ஆ |
| 52 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், சின்ன புல்லுமலை, மட்டக்களப்பு | ஆ.சு.ஆ |
| 53 | காணி துண்டாடல் கருத்திட்டம், கொறகான, பாணந்துறை | ஆ.சு.ஆ |
| 54 | உத்தேச 40 மாடி இணைந்த கருத்திட்டம், செத்சிறிபாய | ஆ.சு.ஆ |
| 55 | உத்தேச புதிய நகர் கருத்திட்டம், வடவந்தனா வீதி, அனுராதபுரம் | ஆ.சு.ஆ |
| 56 | மரங்களைத் தரிக்கும் கருத்திட்டம், ஹெயாபாக் அரச தோட்டம் | ஆ.சு.ஆ |
| 57 | காலி – மாத்தறை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 58 | கிளிநொச்சி – சுன்னாகம் வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 59 | அம்பேவெல பண்ணையில் விலங்கு மெ.ஹொ 03 காற்று மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |

| தொ இல | கருத்திட்டம் | சு.தா.ம/ பூ.சு.ஆ |
|---|---|---|
| 60 | உத்தேச சுற்றுலா ஹோட்டல் கருத்திட்டம், பாசிக்குடா | ஆ.சு.ஆ |
| 61 | ஹபரண – வாழைச்சேனை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 62 | ஹபரண – வாழைச்சேனை வரையான உத்தேச 220KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 63 | உத்தேச விக்ரோரியா நீர் மின் உற்பத்தி விரிவாக்க கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 64 | வடக்கு – கிழக்கு மின் கடத்தும் வழி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 65 | உத்தேச திக்கல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | ஆ.சு.ஆ |
| 66 | உத்தேச கிவுல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | ஆ.சு.ஆ |
| 67 | உத்தேச ஓவல சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | ஆ.சு.ஆ |
| 68 | உத்தேச அன்கந்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், மாத்தளை | ஆ.சு.ஆ |
| 69 | உத்தேச உடுவன்கந்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், பாலிந்த நுவர | ஆ.சு.ஆ |
| 70 | உத்தேச மாதுசெடே சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், நெளுவ | ஆ.சு.ஆ |
| 71 | மஹியங்கனை – பதியதலாய கண்டி வீதி அபிவிருத்தி மற்றும் செப்பனிடும கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 72 | துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம், காலி முகத்திடல் | ஆ.சு.ஆ |
| 73 | மொறகஹகந்த கமத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 74 | திருப்பனே உயிர் வாயு பயன்பாட்டு மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 75 | சோளப் பயிர்ச்செய்கை கருத்திட்டம், கந்தளாய் | ஆ.சு.ஆ |
| 76 | மன்னார் வளைகுடா சார்ந்த கடற்பரப்பில் கனிய எண்ணெய் அகழ்வாராய்ச்சி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 77 | ரன்தெம்பே – மஹியங்கனை வரையான உத்தேச 132KV மின் கடத்தும் வழி | ஆ.சு.ஆ |
| 78 | நீர்கொழும்பு ஹோட்டல் கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 79 | ROSS ESTATE சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம், சுதுகங்கை மாத்தளை | ஆ.சு.ஆ |
| 80 | கொலதெனிய சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 81 | ரஜ்ஜம்மன சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 82 | தம்புளுஓயா சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 83 | உத்தேச உப்பள அபிவிருத்தி கருத்திட்டம், திபுருபிட்டிய, திருகோணமலை | ஆ.சு.ஆ |
| 84 | உத்தேச விடுமுறை விடுதி, அத்திடிய | ஆ.சு.ஆ |
| 85 | உத்தேச கருங்கல் உடைப்பு கருத்திட்டம், காயங்குளம், ஓமந்தை | ஆ.சு.ஆ |
| 86 | உத்தேச வீடமைப்பு கருத்திட்டம், ஹல்முல்ல, கொரிகாவத்த | ஆ.சு.ஆ |
| 87 | காற்று மின் உற்பத்தி கருத்திட்டம், பூநகரி | ஆ.சு.ஆ |
| 88 | நகர பூங்கா – பொலனறுவை | ஆ.சு.ஆ |
| 89 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹஙவல, திவுலப்பிட்டி | ஆ.சு.ஆ |
| 90 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கெக்ரிறாவ, இம்புல்கஸ்வெவ | ஆ.சு.ஆ |
| 91 | உத்தேச அறைகள் 428 ஹோட்டல் கருத்திட்டம், கட்டுநாயக்க | ஆ.சு.ஆ |
| 92 | உத்தேச அறைகள் 200 ஹோட்டல் கருத்திட்டம், கட்டுநாயக்க | ஆ.சு.ஆ |
| 93 | உத்தேச மீன்பிடித் துறைமுகம், சுதுவெல்ல | ஆ.சு.ஆ |
| 94 | புலத்வத்த சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 95 | மாணிக்க கங்கை சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ஆ |
| 96 | கொன்தூவ/ஊறுதூவ அபிவிருத்திக் கருத்திட்டம், பொல்கொட, பாணந்துறை | ஆ.சு.ஆ |
| 97 | உத்தேச மீன்பிடித் துறைமுகம், திக்வெல்ல | ஆ.சு.ஆ |
| 98 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், மில்லனியவத்த, பணடாரகம | ஆ.சு.ஆ |
| 99 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கடவரகெலே, அம்பாந்தோட்டை | ஆ.சு.ஆ |
| 100 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹல்பராத, பாதுக்க | ஆ.சு.ஆ |
| 101 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், கொரதொட்ட, கடுவெல | ஆ.சு.ஆ |
| 102 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், ஹங்கவத்த, மாதிகியாவல, திவுலபிட்டி | ஆ.சு.ஆ |
| 103 | கருங்கல் உடைத்தல் கருத்திட்டம், குருளுபெட்டிகலஈ நொச்சியாகம | ஆ.சு.ஆ |

### 4.1.1 அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் கண்காணிப்பு

கருத்திட்டங்களை அங்கீகரிக்கும்போது வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக கருத்திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு ஏற்கெனவே அத்தைகைய கருத்திட்டங்களை கண்காணித்துள்ளது. கீழுள்ள கருத்திட்டங்களின் கண்காணிப்பு,

2011 ஆண்டில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு,

- தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம்
- கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம்
- கொழும்பு வெளிச்சுற்று வட்ட பெருந்தெரு கருத்திட்டம் (கொட்டாவ தொடக்கம் கடுவெல வரை)
- மொறகஹகந்த கமத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டம்
- களுகங்கை நீர்தேக்க, கமத்தொழில் விஸ்தரிப்பு கருத்திட்டம்
- மேல் கொத்மலை நீர்மின் கருத்திட்டம்
- குருகொட ஓயா சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம்
- கெரவலபிட்டிய மெகா வாற் 300 இரட்டை இணைந்த சுற்று அனல் மின் உற்பத்தி
- காணி துண்டாடல் கருத்திட்டம், தெலவல, மொறட்டுவ
- இரத்தினக்கல் அகழ்வு கருத்திட்டம், வெல்கஹவாடிய ஹசலக (கட்டம் I)
- அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி கருத்திட்டம்
- சர்வதேச விமான நிலையம், அம்பாந்தோட்டை
- வலவே கங்கை உப்பு செறிவு

### 4.1.2 சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு சேயற்பாட்டை மேம்படுத்தல்

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சின் செயலாளரது தலைமையில் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு குழுக் சுட்டம் நடைபெறும்.

2011 ஆண்டில் இவ்வாறான 04 குழுக்கள் கூட்டப்பட்டன. இதன்போது இன்றளவில் சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுகள், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டன. சுற்றாடல் தாக்க மதிப்பீடு / பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது கருத்திட்டம் தாமதிக்கப்படுவதற்கு ஏதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டது. மேலும், கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் துணை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வுகள் வழங்கப்பட்டன.

### 4.1.3 மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுச் செயற்பாடு

பாரிய அம்பாந்தோட்டை அபிவிருத்தி திட்டத்திற்கான மூபோய சுற்றாடல் மதிப்பீடு

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவானது பாரிய அம்பாந்தோட்டை அபிவிருத்தி திட்டத்தற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பானது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் புலமையர் குழாத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் கூருணர்வு மிக்க சுற்றாடல் தொகுதிகளை கண்டறிந்து பாதுகாக்கும் அதேசமயம் தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான ஒத்துழைப்பினை வழங்குதல் இதன் பிரதான நோக்கமாகும்.

இந்த புலமையர் குழாத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களும் அடங்கும் விதத்தில் மதிப்பீட்டுக் குழுவொன்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது பிரதேசத்தில் காணப்படும் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காக பல முறைகள் கூடியுள்ளதோடு கள ஆய்வுகள் பலவற்றையும் மேற்கொண்டுள்ளது. குறித்த குழுவின் முன்மொழிவுகள் மற்றும் விதப்புரைகளை ஆதாரமாகக் கொண்டு பாரிய அம்பாந்தோட்டை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

யானை – மனித மோதல்களைத் தவிர்க்கும் எதிர்பார்ப்புடன் யானைகள் சுதந்திரமாக நடமாடக் கூடிய யானை முகாமைத்துவ வலயத்தை இனம்காண்பது இந்த ஆய்வின் பிரதானமான ஒரு குறிக்கோளாகும். ஒவ்வொரு வலயத்திற்குமென இணங்கிக்கொண்ட தொழிற்பா:டுகள் மற்றும் இந்த ஆய்வின் விதப்புரைகள் அடங்கிய இறுதி வலயமாக்கல் திட்டம் தகுந்த நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

<u>வட மாகாண அபிவிருத்தி திட்டத்திற்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு</u>

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு இந்த ஆய்வினை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தது.
முப்பது ஆண்டுகால கொடிய யுத்தத்தின் பின்னர் தற்போது ஏஞ்சியுள்ளதும் சுற்றாடல் சார்ந்து முக்கியத்துவம் பெற்றுள்ளதுமான இடங்கள் / பிரதேசங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வது தொடர்பில் இந்த ஆய்வில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் கூருணர்வு மிக்க சுற்றாடல் தொகுதிகள் மற்றும் வளங்களை கண்டறிவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை, காடு பேணல் திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், நீர் வளங்கல் சபை, தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் அத்துடன் தொல்பொருளியல் திணைக்களம் ஆகயவற்றுடன் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டது. மேலும், இந்த ஆய்வுக்கான கடமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு இந்த நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டது.

வட மாகாண மாவடடச் செயலாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் கூட்டங்களை நடாத்திய இந்த ஆய்வுக்குழு அவற்றின் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பெற்றுக்கொண்டது. தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்காக பல கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு இதன் முன்னேற்றங்கள் அரச உத்தியோகத்தர்களுடன் கூட்டங்களை கூட்டி அவற்றின் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பெற்றுக்கொண்டது. தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்காக பல கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு இதன் முன்னேற்றங்கள் வட மாகாண ஆளுநருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

கூருணர்வுள்ள சுற்றாடல் பிரதேசங்கள் மற்றும் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரதேசங்களைக் கண்டறிந்து படமாக்கல் செய்யப்பட்டது. பிரதேசத்தில் காணப்படும் வளங்களும் (நீர் மற்றும் கனிய) இனம்காணப்பட்டன. இன்றளவில் மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த முன்மொழிவுகள் எதிர்கால நிறுவன ரீதியான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு பயன்பாடுடையதாக அமையும்.
<u>மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்</u>

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு அரச ஊழியர்களுக்காக மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு தொடர்பான இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்தியது. மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு தொடர்பான சர்வதேச துறை சிறப்பறிஞர்களால் விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

### 4.1.4 ஏனை தொழிற்பாடுகள்

மேற் குறிப்பிட்ட தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டங்கள் / கள ஆய்வுகளுக்காகவும் 2010ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

- வீதிக் கருத்திட்டங்களுக்கான வசதிகளை

ஏற்படுத்தும் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள்.

- தேசி பெருந்தெருக்கல் கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள்.
- வெளிச்சுற்று பெருந்தெரு கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள்.
- தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டத்தின் இணைப்புக் குழுக் கூட்டங்கள்.
- மொறகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள்.
- கொழும்பு கட்டுநாயக்க பெருந்தெரு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் இணைப்புக் குழுக் கூட்டங்கள்.
- வெளிச் சுற்றுவட்ட பெருந்தெரு கருத்திட்டத்தின் கருத்திட்ட இணைப்புக் குழுக் கூட்டங்கள்.
- தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டத்தின் பரிச்சார்த்த வெடி கண்காணிப்பு
- சுற்றுலாத் துறை கருத்திட்டத்திற்கான "One Stop Shop" கூட்டங்கள்
- மாகாண தெருக்கல் கருத்திட்டத்தின் தொழிற்பாட்டுக் குழுக் கூட்டங்கள்
- பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கருத்திட்ட குழுக் கூட்டங்கள்
- "Cauvery Basin" மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டுக்கான கருத்திட்டக் கூட்டங்கள்.

## 4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு பிரிவு

சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பாக்கத்தை மேற்கொள்வதனூடாக இலங்கையில் காணப்படும் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்தல் இயற்கை வளங்கள் முகாமைத்துவ, கண்காணிப்பு அலகின் பிரதான செயற்பொறுப்பாகும். இயற்கை வளங்கள் முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய ஒழுங்குவிதிகளையும் ஆசிரியர் ஆலோசனைகளையும் தயாரித்தல், சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் பெற்று விழங்கும் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்தல், இவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசங்களை முகாமைத்துவம் செய்தலும் கண்காணித்தலும் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களில் உத்தேச கருத்திட்டங்களுக்கான அங்கீகாரம் வழங்கும் நடைமுறையை அமுலாக்குதல் என்பன இந்த அலகினால் மேற்கொள்ளப்படும் ஏனைய தொழிற்பாடுகளாகும். தேசிய ஈரநில கொள்கையை நடைமுறைப்படுத்தல், தேசிய சுற்றாடல் சட்டத்தின் (இ) பிரிவின் கீழ் அங்கீகாரம் தேவைப்படாத கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் விதப்புரைகளை வழங்கள் மற்றும் கண்காணித்தல் அத்துடன் இயற்கை வளங்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் பணியையும் இந்த அலகு மேற்கொண்டு வருகிறது.

### முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்தல்

தலங்கம வேலை, முதுராஜவெல மற்றும் கிரெகறி வேலை ஆகிய சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களுக்கான முகாமைத்துவ திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தில் உத்தேச கருத்திட்டத்திற்கான நிதிசார்ந்த அங்கீகாரத்திற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஹந்தானை பாதுகாப்பு பிரதேசத்திற்கான முகாமைத்துவ திட்டமொன்றைத் தயாரிக்கும் பொருட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பங்கேற்புடன் பணியாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிரெகறி வேலை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச எல்லையை காட்சிப்படுத்தும் பலகைகளை பொருத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

**பிரகடனம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள்**

கடந்த ஆண்டில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 42 கள ஆய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

- பிரகடனம் செய்யப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் 04
- மாகாண அலுவலகங்கள் ஊடான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றப்படுத்தல்கள் 04
- சட்ட ரீதியான நடவடிக்கைக்காக சட்டப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தல் 06

**கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

இயற்கை வளங்கள் முகாமைத்துவ அலகு கடந்த ஆண்டில் பிரகடனம் செய்த மற்றும் பிரகடனம் செய்ய உத்தேசித்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களில் கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நான்கினை 104 நடத்தியுள்ளது.

**ஈரநில முகாமைத்துவம்**

உப அலகாகத் தொழிற்படும் ஈரநிலங்கள் அலகானது தேசிய ஈரநிலக் கொள்கைகளுக்கான மூலோபாயங்களை செயற்படுத்தும் பொறுப்பினைக் கொண்டுள்ளது.

2011 ஆண்டில் சுற்றாடல் அமைச்சின் செயலாளரது தலைமையில் 04 ஈரநில முகாமைத்துவ தொழிற்பாட்டுக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன்போது உலக ஈரநிலங்கள் தினக்கொண்டாட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களமும் இணைந்து நடத்த வேண்டுமெனவும் ஓராண்டில் ஒரு நிறுவனம் தலைமையேற்று ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. முதுராஜவெல வேலை, தலங்கம வேலை ஆகிய கிராமிய ஈரநிலங்கள் குழுக்கள் அதனது முன்னேற்ற அறிக்கைகளை தொழிற்பாட்டுக்குழுக் கூட்டத்தின்போது சமர்ப்பித்தன. மேலும் ஈரநிலங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்காக ஈரநில மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

உலக ஈரநிலங்கள் தினக் கொண்டாட்டத்திற்குச் சமாந்தரமாக அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையில் நிலக்காட்சி சித்திரப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற ஓவியங்கள் அடங்கிய கண்காட்சியொன்றும் நடாத்தப்பட்டது. தேசிய கலாபவனத்தில் நடாத்தப்பட்ட இக்கண்காட்சிக்கு கௌரவ சுற்றாடல் அமைச்சர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இவை தவிர மாகாண அலுவலகங்களிலும் உலக ஈரநிலங்கள் தினக்கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

**சுற்றாடல் விதப்புரைகளை வழங்குதல்**

கீழ்க் காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.
நீர்க்கொழும்பு கடல்நீரேரியில் இலகு விமானங்களை இறக்குவதற்காக ஸ்ரீ லங்கன் விமான சேவை கம்பனிக்கு விதப்புரைகள் வழங்கப்படல்
ஜா-எல மற்றும் தண்டுகம ஓயா சேறு அகழ்வுப் பணிகளுக்கான விதப்புரை வழங்கப்படல்
தெனியாய, கோனகல, டொப்லர் ரேடார் தொகுதி நிறுவுகைக்கான விதப்புரைகள்

**பிற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சுற்றாடல் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப அறிவுரைப்புகளை வழங்குதல்**

**சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பிலான மக்கள் முறைப்பாடுகள்**

இந்த அலகிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சுற்றாடல் பிரச்சனைகள் தொடர்பிலான மக்களின் முறைப்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களின் இணைப்பாக்கத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 4.3 புவி தகவல் அலகு

### 4.3.1 2011ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்டங்கள் அலகினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

**(அ) வட மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை அபிவிருத்தி திட்டத்திற்கான மூலோபாய**

**சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை**

ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்ட அலகினால் அம்பாந்தோட்டை அபிவிருத்தி திட்டத்திற்கு ஏற்புடைய பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு அறிக்கைக்கான பிராந்திய தேசப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டைப் பிரதேசம் மற்றும் சம்பந்தப்பட்ட விரிவான சுற்றாடல் மூலோபாய மதிப்பீட்டு அறிக்கைக்கான இறுதி பிராந்திய தேசப்படம்.



### (ஆ). புவிசார் தகவல் முறைமை மற்றும் தொலை உணரிகளைப் (GIS & RS பயன்படுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான துண்டுப் பிரசுரம் வெளியீடு

ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்ட அலகில் GIS, RS ஐப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலம் பிற நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு வழங்கக்கூடிய சேவைகள், சந்தைப்படுத்தல் தொடர்பான துண்டுப்பிரசுரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் மாதிரி




### 4.3.3 மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு GPS உபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சி

ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்ட அலகினால் நிறுவப்பட்டுள்ள சுற்றாடல் வள மற்றும் கைத்தொழில் சார்ந்த தரவுத் தளம் மாகாண, மாவட்ட அலுவலகங்களிள் மூலம் அடுத்த ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக காலத்திருத்தம் செய்யப்படவுள்ளது. இதன்போது GPS உபகரணங்களின் உதவியுடன் புதிதாக நிறுவப்படும் கைத்தொழில்கள், பாதுகாப்பு பிரதேசங்களாக குறித்துக்காட்டப்படும் இடங்களின் அமைவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் முக்கிய செயற்பாடாக அமையும். ஆகையால், அப்பிரதேசத்திலுள்ள அலுவலர்களுக்கு குறித்த உபகரணங்களைக் கையாளுவது தொடர்பான ஒரு நாள் பயிற்சி அமர்வொன்று நடாத்தப்பட்டது.

### 4.3.4 பிற செயற்பாடுகள்

ஆராய்ச்சி மற்றும் விசேட கருத்திட்ட அலகானது பல்வேறு இடங்களிலும் GPS உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏனைய பிரிவுக்கு உதவி வருகிறது. 2011 ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகள், மாவட்ட மற்றும் மாகாண அலுவலகங்களது வேண்டுகோள்களுக்கிணங்க ஆராய்ச்சி, விசேட கருத்திட்ட பிரிவு பின்வரும் தொழிற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது.

### 4.1. GPS மதிப்பீடு

- தலங்கம வேலை
- மரகலகந்த சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம்
- முதுராஜவெல மற்றும் தெடிகமுவ மேடு
- எட்டியாந்தோட்டை சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்
- சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கண்டி நகரில் நுவர வாவி மற்றும் அதையண்டிய பிரதேசங்களில் GPS மதிப்பீடு மற்றும் சம்பந்தப்பட்ட எண்ணக்கரு பிரசுரம் (concept Paper) தயாரிப்பு
- கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தில் உரக் களஞ்சிய சாலைகள் மற்றும் உற்பத்தி தொழிற்சாலைகளில் GPS மதிப்பீடு

### 4.2. படமாக்கல்



### 4.3.6 வணிக நோக்கத்துடன் வழங்கப்படும் புவிசார் தகவல் சேவைகள்

- சுற்றாடல் கூருணர்வு வலைய வரைபடம் - கஜுவத்த விவசாய பண்ணை
- சுற்றாடல் தோற்றம் - பதுளை மாவட்டம்
- நகர்த் திட்டமிடல் நிறுவனத்திற்கான தரவுக் களஞ்சியமும் அமைப்புப் படத் தயாரிப்பும்
- இலங்கை மகாவலி அதிகாரசபைக்காக மொறகஹகந்த புதிய ஆனையிறவு மற்றும் சரணாலய அமைப்புப் படத் தயாரிப்பு.
- செய்மதிப் படம் ஊடாக மக்கள் வசிக்கும் இடங்கள் ஏற்கெனவே இனம்காணப்பட்டுள்ளன
- மகாவலி மற்றும் முந்தெனி ஆற்றுப்படுக்கைக்கான சுற்றாடல் கூருணர்வு பிரதேச படமாக்கல்

  சுற்றாடல் தாக்க மதிப்பீடு
- பொல்கொட கங்கை சுற்றாடல் பாதுகாப்பு வலய படமாக்கல் - இயற்கை வள முகாமைத்துவ அலகு
- தொம்பே பிரதேச செயலகத்தில் நில பயன்பாட்டு படமாக்கல் - பிலிசறு கருத்திட்டம்
- நக்கில்ஸ் ஒதுக்கம் மற்றும் அதையடுத்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் மரங்களைத் தரித்தல் தொடர்பான வரைபடங்கள்
- அத்தனகல்ல ஓயா மற்றும் அதன் கிளை ஆறுகளின் படமாக்கல் - மேல் மாகாண அலுவலகம்.
- குருகொட ஓயா சிறிய நீர் மின் நிலையத்திற்காக அணையொன்றை நிர்மாணித்தலும் சுற்றுப் பிரதேசத்து வெள்ள நிலைமைகள் தொடர்பான வரைபைத் தயாரித்தலும்
- பொல்கொட கங்கை ஒதுக்கத்திற்காக 40 மீற்றர் மற்றும் 60மீற்றர் ஒதுக்க வலயம் அடங்கலான அமைப்புப் படத் தயாரிப்பு
- பெலிஹுல் ஓயா சிறிய நீர்மின் நிலையத்திற்கான அமைப்புப் படத் தயாரிப்பு
- அனுராதபுரம் 'குழசநளவ சுழஉம புயசனநெ' ஹோட்டலின் அமைவு மற்றும் அமைப்புப் படத் தயாரிப்பு
- பிலிசறு கருத்திட்டத்தின் மூலம் இலங்கையில் நடைமுறைப்படுத்திய திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய படமாக்கல்
- பாவனைக்கு பிற்பட்ட பிலாஸ்ரிக் முகாமைத்துவ கருத்திட்டத்தால் இலங்கையில் அமைக்கப்பட்ட அப்புறப்படுத்தப்பட்ட பிலாதிட்டம்

# 5.0 சட்ட அலகு

***அரும்பணிக் கூற்று***

*''நாம் ஒவ்வொருவரினதும் நல்லிருப்பிற்காக சட்டப் பொறிமுறையை பயனுறச் செய்வதன் மூலம் சுற்றாடல் அபிவிருத்தி மற்றும் விழிப்பூட்டலின் ஊடாக சுற்றாடலின் ஆரோக்கியமான இருப்பினை உறுதி செய்வோம்''*

## 5.1 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வலுவிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் ஊடாகவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமை அதிபதியின் நேரடியான கண்காணிப்பின் கீழும் 2011ஆம் ஆண்டில் சட்டப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் வருமாறு.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள மற்றும் விசாரணை நிலையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை மிகமிக அதிகமாகும். இவற்றில் 2011 ஆண்டில் அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகாரசபையினாலும் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 307 ஆகும். இந்த ஆண்டில் திருத்தம் செய்யப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அதிகாரசபையினால் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 165.

### சட்ட நடவடிக்கைகள்

சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஒருசில கைத்தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பிற்கான தொகுதிகளை நிறுவி அதன் பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுள்ளன. பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஒருசில தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் வரையறைகளுக்கு இயைபாக சில தொழிற்சாலைகளில் ஒலி கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன.மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு IVஇ மீறப்பட்டுள்ளமை தொடர்பான வழக்குகளை மொறட்டுவ நீதவான் நீதி மன்றத்தில் பதிவு செய்தது. மேலும், காணியொன்றின் அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்துவது தொடர்பிலான உத்தரவொன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக 59 வழக்குகள் தொடரப்பட்டு விசாரணை நிலையில் உள்ளதோடு 19 வழக்கின் மீதான நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. புதிதாக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 13 ஆகும்.

### குற்றப்பத்திரிகைகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவி

தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்களை மீறும் வகையில் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் குப்பைக்கூளங்களை அப்புறப்படுத்தியமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டலில் தங்காலை நகர சபைக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினாலும் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கெதிராகவும் தொடரப்பட்டுள்ள வழக்குகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை, உதவியுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ரத்துசெய்யப்படுதல் / நிராகரிக்கப்படுதல் மற்றும் ரத்துசெய்யாமைக்கான ஏதுக்களை ஆராய்தல்

கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக ஆராய்ந்து வினியோகிக்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை ரத்துசெய்வது தொடர்பாக 01 கைத்தொழிற்சாலைக்கும், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து 106 தொழிற்சாலைகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அதிகாரசபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ரத்துசெய்யப்படாதிருப்பதற்கான ஏதுக்களைத் தெரிவிப்பதற்கு 01 தொழிற்சாலைக்கு வாய்ப்பளித்து அதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகள்**

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கையின்போது சுற்றாடல் பாதுகாப்பு உரிம நிபந்தனைகளை பரிட்சித்தல் முக்கிய பணியாகும்.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வினியோகித்தலுடன் சம்பந்தப்பட்ட சுமார் 1400 கோப்புகளில் நிபந்தனைகளது சட்டரீதியான தன்மை சட்டப் பிரிவு மற்றும் சம்பந்தப்பட்ட மாகாண சபை அலுவலகங்கள் ஊடாக பரீட்சிக்கப்பட்டன.

**கட்டளை பிறப்பித்தல்**

அபிவிருத்திக் கருத்திட்டங்களால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புக்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றாடல் மாசடைதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமை தொடர்பாகவும், முறையற்ற விதத்தில் குப்பைகள் அப்புறப்படுத்துதைத் தடுக்கும் நோக்கத்துடனும் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் நாடெங்கிலுமுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு இருபது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கள ஆய்வறிக்கைக்கமைய அபிவிருத்திப் பணிகளை தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளதாக அறிவித்திருந்த 19 (பத்தொன்பது) கருத்திட்ட முன்மொழிவாளர்களுக்கு தேசிய சுற்றாடல் சட்டத்தின் 24 ஆ பிரிவிற்கமைய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள்**
**(சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு)**

சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை ரத்துசெய்தல், நிராகரித்தல் தொடர்பாக அமைச்சின் செயலாளருடன் நடைபெற்ற 71 மேன்முறையீட்டு விசாரணைகளின்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சட்டப்பிரிவின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர். மேலும் தொடர்புடைய கடிதக் கோப்புகள் அமைச்சின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தும் பணிகளையும் சட்டப்பிரிவு மேற்கொண்டது.

**நொத்தாரிசுப் பணிகள்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுகையில் பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் வெளித் தரப்பினரோடு ஏற்படுத்திக்கொள்ளும் உடன்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளைத் தயாரித்தலும் அவற்றுக்கான அங்கீகாரம் வழங்கலும்.

**முறைப்பாடுகள்**

சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு மற்றும் பொது மக்களுக்கு ஏற்படும் தொந்தரவுகள் தொடர்பாக பொதுமக்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், ஏனைய அரசு சார்பற்ற நிறுவனங்களினால் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்து தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தொழிற்சாலைகளினால் ஏற்படும் தொல்லைகள் தொடர்பாக செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் தண்டனை சட்டக்கோவையின் 98 பிரிவு மற்றும் பொலிசு கட்டளைச் சட்டத்தின் கீழான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக பொலிசுத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களில் பங்கேற்றல்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கெதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு ஆட்சேபனைத் தெரிவித்தல் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக சட்ட அலகின் உத்தியோகத்தர்கள் சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பலசுற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

### 5.2 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள்

தேசிய சுற்றாடல் சட்டம் மீதான திருத்தத்திற்கு ஏற்புடைய வரைவைத் தயாரித்தல், புதிய ஒழுங்கு விதிகளை வரைதல் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பான இணைப்பாக்கத்தை பேணுதல்.

மேலும், சமூக இரைச்சல் ஒலி மட்டங் (Community noise) களைக் கட்டுப்படுத்தலுடன் தொடர்புடைய நியமங்கள் மற்றும் வரையறைகள் அடங்கலான தொழில்நுட்ப வரைவு CABRE கருத்திட்டத்தின் நிதி உதவியுடன் தயாரிக்கப்பட்டு உயர் நிதி மன்றத்தின் வழிகாட்டலின் கீழ் சுற்றாடல் அமைச்சினூடாக சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 5.3 சட்ட ஆலோசனைகள்

தேசிய சுற்றாடல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகள், நபர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்கள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் IVஇ பிரிவின் கீழ் அங்கீகாரம் பெற வேண்டிய கருத்திட்டங்களில் சட்ட நிபுணராக தொழில்நுட்ப மதிப்பீட்டுப் பணிகளில் பங்கேற்றல்.

### 5.4 சட்ட அறிவித்தல்கள்

தேசிய சுற்றாடல் சட்டம் மீறப்பட்டுள்ளமைக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள 118 கைத்தொழிற்சாலைகளுக்கு சட்ட அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

நீதி மன்ற உத்தரவுகளுக்கிணங்க நீதி மன்றத்தில் சமர்ப்பித்தல் மற்றும் சுற்றாடல், இயற்கை வள அமைச்சின் செயலாளரின் முன்னிலையில் நடாத்தப்படும் மேன்முறையீட்டு விசாரணைகளின்போது சமர்ப்பிக்க வேண்டிய பல அறிக்கைகளுக்கு சட்ட அலகு சிபாரிசு செய்துள்ளது.

**5.5 தெற்காசிய பிராந்தியத்தில் சுற்றாடல் வழக்குகளைத் தொடுத்துள்ளவர்களின் சந்திப்பு** ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் (UNEP) அனுசரணையுடன் சட்டப்பிரிவானது தெற்காசிய நாடுகளில் சுற்றாடல் சார்ந்த வழக்குகளைத் தொடுத்துள்ளவர்களின் பங்கேற்புடன் 2009 யூன் மாதம் 22-24 திகதி வரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் செயலமர்வொன்றை நடாத்தியது. மேலும், ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் சட்ட மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள் பிரவின் பணிப்பாளர் பெகரி கான்ரே, சட்ட தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் கிரகெறி ரோஸ் மற்றும் ஐக்கிய நாடகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் கடமையாற்றும் இரண்டு சட்ட உத்தியோகத்தர்களும் வளவாளர்களா பங்குபற்றியிருந்தனர்.

இச்செயலமர்வில் இலங்கையின் அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

தெற்காசிய நாடுகளுக்கென பொது சுற்றாடல் சட்டக் கோவையொன்றைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவுரைப்பு வழிகாட்டியொன்றைத் தயாரித்தல் இச்செயலமர்வின் நோக்கமாகும். செயலமர்வின் ஈற்றில் எதிர்பார்க்கப்பட்ட அறிவுரைப்பு வழிகாட்டி தயாரிக்கப்பட்டது.

## 5.6 மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கெதிராக தொடரப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பான சில விசாரணைகளுக்கு சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

### ஒலிச் சட்டம்

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சின் ஆலோசனைகளின் பிரகாரம் சட்டப் பிரிவு இலங்கையில் காணப்படும் அனைத்து விகாரைகளுக்கும் உத்தேச சட்டம் தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 12750 கடிதங்களை அனுப்பியுள்ளது.

இன்றளவில் 100 விகாரைகளிலிருந்து அதற்கான பதில் கிடைத்துள்ளது.

### புதிய சமூக ஒலிச் சட்டம் அறிமுகம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தானியங்கி, இயந்திர உதவியுடன், மின்சார வசதியுடன் அல்லது இலத்திரனியல் ஊடாக பிறப்பிக்கப்படும், மீள பிறப்பிக்கப்படும் அல்லது பெருப்பிக்கப்பட்ட ஒலியை விடுவிக்கும் மெகா போன், ஒலி பெருக்கிச் சாதனங்கள் என்பவற்றை சட்டமயப்படுத்துவதற்கு புதிய ஒலிச் சட்டத்தை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 6.0 சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு

அரும்பணி

ஆரோக்கியமான சூழலொன்றைப் பாதுகாக்கவும் பேணவும் பொதுமக்கள் மற்றும் பல்வேறு இலக்கு குழுக்களின் செயற்பாட்டுப் பங்களிப்பைப் பெறுவதற்கான கல்வியும் விழிப்பூட்டலும்

### 2011 ஆண்டில் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் செயற்பாட்டு முன்னேற்றங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவானது பொதுமக்களின் அறிவு விருத்தி மற்றும் சுற்றாடல் கல்வியை வழங்குவதனூடாக அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் சூழல் நேய முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இப்பிரிவானது அதனது குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக பொதுமக்கள் மற்றும் பல்வேறு இலக்கு குழுக்களுக்காக பின்வரும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த வேலைத்திட்டங்களுக்குத் தேவையான நிதி பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது.

<u>**திறைசேரி நிதியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்.**</u>

1. ஆரம்ப நிலை மாணவர்களுக்கான பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் – வகுப்பு 1 தொடக்கம் 5 வரை (சிறுவர் சுற்றாடல் கழகங்கள்).
   I. சிறுவர் சுற்றாடல் கழகங்களை பதிவு செய்தல்
   II. பதக்கங்கள் வழங்குதல்
   III. சிறுவர் சுற்றாடல் கழகங்களுக்கான ஆவணங்களினை தயாரித்தல்.

2. செவிப்புல கட்புல பிரிவின் மேம்படுத்துகை
   I. நிகழ்ச்சிகளினை ஆவணப்படுத்தல்.

3. ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்
   I. மின் ஊடகங்கள் – தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்
   II. "சோபா ஹெத்த" தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்"
   III. "மிஸ்டர் கிறீன்" தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்
   IV. வானொலி செய்திகள்

4. அச்சு ஊடகங்கள்.
   I.சுற்றாடல் செய்தித்தாள்.

5. செய்திகள் மற்றும் ஊடகங்களுக்கான கட்டுரைகள்.

6. கல்விசார் ஆவணங்கள் - கையேடுகள்

7. பத்திரிகையாளர்கள் மாநாட்டினை ஒழுங்குபடுத்துதல்.

8. "விருந்து வகைக்குரிய பாடல்" போட்டி

9. கண்காட்சிகள்
   I. கண்காட்சிகளில் கலந்துகொள்ளுதல்
   II. கண்காட்சிகளுக்கான மாதிரிகளினை தயாரித்தல்
   III. காட்சிப்பலகைகளினை தயாரித்தல்
   IV. பதாகைகளினை தயாரித்தல்

10. சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களினை நாடுபூராகவும் வலுப்படுத்துதல்.
   I. இல்லத்தரசிகளுக்கான விழிப்பூட்டல் மற்றும் செயன்முறை நிகழ்ச்சித்திட்டங்கள்.

11. தேசிய சுற்றாடல் நிகழ்வுகள் தொடர்பான சுற்றாடல் பிரச்சார நடவடிக்கைகள்
I. உலக சுற்றாடல் தினம்.

12. தேசியரீதியில் சுற்றாடலுடன் தொடர்புடைய நடப்புவிவகாரங்கள்.
I. டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

13. செயன்முறைரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்தல்.
I. ''பெல்லன்வில அத்திடிய'' என்னும் இடத்தில் அமைந்தள்ள இயற்கைவள நிலையத்தின் செயற்பாடுகள்

## 6.1 திறைசேரி நிதியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்.

### 6.11. ஆரம்ப நிலை பாடசாலை மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் – வகுப்பு 1 தொடக்கம் 5 வரை (சிறுவர் சுற்றாடல் கழகங்கள்).

ஆரம்பநிலை பாடசாலை மாணவர்களின் விழுமியங்கள், நடத்தைகள் மற்றும் மனோநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்துமுகமாக சிறுவர் சுற்றாடல் கழகங்கள் மூலமாக சுற்றாடல் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இச் சுற்றாடல் சிறுவர் கழகங்கள் பாடசலையில் கல்விகற்கும் வகுப்ப 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களிடையே உருவாக்கப்படுகின்றன.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் அமல்படுத்தப்படுகின்றன
1.சிறுவர் சுற்றாடல் கழகங்களை பதிவு செய்தல்
2.பதக்கங்களும் சான்றிதல்களும் வழங்குதல்.
3.நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுதல்.
4.ஆசிரியர்களுக்கும் பிரதேச சுற்றாடல் அலுவலர்களுகன்குமான பயிற்சிநெறிகள்.
5.ஆசிரியர்களுக்கான வழகாட்டல் நூல்களினை விநியோகித்தல்

### 6.1.2. சிறுவர் சுற்றாடல் கழகங்களை பதிவு செய்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவில் சிறுவர் சுற்றாடல் கழகங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. 2011 அம் ஆண்டில் 12 சிறுவர் சுற்றாடல் கழகங்கள் பதிவு செய்யப்பட்டன.

### 6.1.3. பதக்கங்கள் வழங்குதல்

ஆரம்ப நிலை நிகழ்ச்சித்திட்டத்தில் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக பதக்கங்கள் வழங்கும் செயற்பாடு உள்ளடக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாணவர்களின் சுற்றடல் அக்கறையுள்ள அடைவு மட்டத்தினை பாராட்டுமகமாக 2011 ஆம் ஆண்டில் 8986 பிள்ளைகளுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பதக்கங்களின் விபரங்கள் பின்வருமாறு .

| வருடம் | தாவரப்பதக்கம் | விலங்குப் பதக்கம் | இயற்கைப்பதக்கம் | சான்றிதழ்கள் |
|---|---|---|---|---|
| **2011** | 3722 | 2964 | 2300 | 102 |

### 6.1.4. சிறுவர் சுற்றாடல் கழகங்களுக்கான ஆவணங்களினை தயாரித்தல்.

சிறுவர் சுற்றாடல் கழகங்களுக்காக 2011 அம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் பின்வருமாறு

| வருடம் | தாவரப்பதக்கம் | விலங்குப் பதக்கம் | வழிகாட்டல் நூல் |
|---|---|---|---|
| **2011** | 6600 | 6600 | 5000 |

## 6.2. செவிப்புல கட்புல பிரிவின் மேம்படுத்துகை

### 6.2.1. நிகழ்ச்சிகளினை ஆவணப்படுத்தல்.

செவிப்புல கட்புல அலகானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நோக்கங்களுக்கு இணங்க பலன்தரத்தக்கவகையில் அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதற்கு பரந்தளவிலான பங்களிப்பினை வழங்கக்கூடியதாக இருக்கின்றது. இவ்வகையில் செவிப்புல கட்புல அலகானது 2011 அம் ஆண்டில் 99 நிகழ்வுகளை ஆவணப்படுத்தியுள்ளது.

## 6.3. ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்

சுற்றாடலின் மீதான கவணயீர்ப்பினை மேற்கொள்வதற்காக பொதுமக்களின் பல்வேறுபட்ட குழுக்களினை கருத்திற் கொண்டு சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பயன்படுத்தப்படுகிறது.

### 6.3.1. இலத்திரனியல் ஊடகங்கள் – தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்

குறித்த விடயம் தொடர்பாக விளம்பரத்தினை மேற்கொள்வதற்கு இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது மக்கள் தொடர்பு ஊடக தொடர்பாடல்கள் வினைத்திரனானதாகவும் பலன்தரத்தக்கதாகவும் காணப்படுகிறது. சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்ளிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துமுகமாக ‘‘சோபா ஹெத்த’’ மற்றும் ‘‘மிஸ்டர் கிறீன்’’ போன்ற இரண்டு நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன.

#### 6.3.1.1. “சோபா ஹெத்த” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்”

சுற்றாடல் தொடர்பான பல கருப்பொருள்களின் கிழ் ‘‘சோபா ஹெத்த’’ தொலைக்காட்சி நிகழ்ச்சியானது ரூபவாஹினி அலைவரிசையில் இரண்டு கிழமைக்கு ஒரு தடவை ஒளிபரப்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டில் 13 நிகழ்ச்சிகள் இவ்வாறாக ஒளிபரப்பப்பட்டது.

#### 6.3.1.2. “மிஸ்டர் கிறீன்” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்

5 நிமிடங்களினைக் கொண்ட கேளிக்கை நிகழ்ச்சியான ‘‘மிஸ்டர் கிறீன்” தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் தயாரிக்கப்பட்டது. சமகாலத்திற்குரிய கருப்பொருளுடன் தொடர்பபட்ட நையாண்டி நிகழ்ச்சியாக சமர்ப்பிக்கப்படுவதனால் இலங்கையில் வாழுகின்ற சமூகத்தினருக்கு வலுவான இயற்காட்சி தொடர்பாடல் வடிவில் பலன்தரத்தக்கதாகக் காணப்படுகிறது.

2011 அம் ஆண்டில் ரூபவாகினி தொலைக்காட்சியின் ஊடாக 36 உட்கதைகளைக் கொண்ட ‘‘மிஸ்டர் கிறீன்” தொலைக்காட்சி நிகழ்ச்சியானது ஒளிபரப்பப்பட்டது.

#### 6.3.1.3. வானொலி செய்திகள்

2012 ஆம் ஆண்டில் வானொலி மூலமாக ஒலிபரப்பப்படுவதற்காக சுற்றாடல் மொடர்பான இரண்டு வானொலி தகவல்கள் தயாரிக்கப்பட்டன.

## 6.4. அச்சு ஊடகங்கள்.

காலாண்டுக்கான சுற்றாடல் செய்தி மடல், சுவரொட்டிகள், கையேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் போன்ற அச்சிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

### 6.4.1. சுற்றாடல் செய்தி மடல்.

திறைசேரி நிதியின் கீழ் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு தேசிய மட்டத்தில் சுற்றாடல் செய்தி மடலினை வெளியிடுகிறது. இந்த சுற்றாடல் செய்தி மடலானது காலண்டுக்கு ஒரு முறை அச்சிடப்படுவதுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு தபாலில் அனுப்பப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் இருந்து இச்செய்திமடலானது

அரையாண்டுக்கான சஞ்சிகையாக மாற்றப்பட்டு அச்சிடப்படவிருக்கிறது. இதன் நிமித்தம் 5000 பிரதிகளினை அச்சிடுவதற்கு செய்திகள் மற்றும் கட்டுரைகள் அச்சகத்திற்கு கையளிக்கப்பட்டன.

## 6.4.2. செய்திகள் மற்றும் ஊடகங்களுக்கான கட்டுரைகள்.

ஊடகங்களினைப் பயன்படுத்தி பரந்துபட்ட சமூகத்தினர் விழிப்பூட்டப்பட முடியும். இதன் நிமித்தம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் ஊடாக அதன் செய்திகள் மற்றும் செய்ற்பாடுகளை வெளியிடுகிறது. அதற்கிணங்க 2011 அம் ஆண்டில் வெளியிடப்பட்ட பத்திரிகை வெளியீடுகள், பத்திரிகை கட்டுரைகள் மற்றும் தொலைக்காட்சி செய்திகள் கிழே பட்டியலிடப்படுகிறது.

| பத்திரிகைகளுக்கான வெளியீடுகளின் எண்ணிக்கை | பத்திரிகை கட்டுரைகளின் எண்ணிக்கை | தொலைக்காட்சி செய்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 85 | 46 | 09 |

## 6.4.3 கல்விசார் ஆவணங்கள் - கையேடுகள்

சமகால சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் வருடாந்தம் கையேடுகள் மற்றும் சுவரொட்டிள் தயாரிக்கபர்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. நடப்பிலுள்ள சவால்களினை கருத்திற் கொண்டு பின்வரும் கருப்பொருள்களின் கீழ் கையேடுகள் அச்சிடப்பட்டு பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனை நிறுவனங்களுக்கு அவர்களின் வேண்டுகோலுக்கு இணங்க 2011 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டன.

| விடயம் | | 2011 (பிரதிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|
| 01 | காலநிலை மாற்றமும் அனர்த்தமும் | 1,500 |
| 02 | மனித நடவடிக்கைககளும் சுற்றாடல் தாக்கமும் | 1,500 |
| 03 | உயிர்பல்வகைமை | 1.500 |

## 6.4.4 பத்திரிகையாளர்கள் மாநாட்டினை ஒழுங்குபடுத்துதல்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை செய்திகளை பரப்புவதற்காக பத்திரிகையாளர் மாநாட்டினை ஒழுங்கபடுத்துகிறது. இவ்வகையில் 2011 ஆம் ஆண்டில் இரண்டு பத்திரிகையாளர் மாநாடுகள் ஒழுங்கபடுத்தப்பட்டன.

## 6.4.5 "விருந்து வகைக்குரிய பாடல்" போட்டி

சுற்றாடல் தொடர்பான பாடல் போட்டியானது ("விருந்து வகைக்குரிய பாடல்" போட்டி)பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் பொதுமக்களுக்காக நடாத்தப்பட்டன. சிறந்த ஆவணங்கள் தெரிவுசெய்யப்பட்ட வல்லுநர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டன.

## 6.4.6 கண்காட்சிகள்

### 6.4.6.1 கண்காட்சிகளில் கலந்துகொள்ளுதல்

பல்வேறுபட்ட சுற்றாடல் பிச்சினைகளினை வெளிப்படுத்துவதற்கு கண்காட்சிகள் சக்திமிக்க உபாயமாக காணப்படுவதனால் சுற்றாடல் விழிப்புணர்வானது அதனூடாக ஊக்குவிக்கப்படுகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்திலான 12 கண்காட்சிகளில் பங்குபற்றியது.

**i.** பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற EDEX கல்விக் கண்காட்சி
**ii.** ''தேசத்தின் மகுடம்'' தேசிய கண்காட்சி .
**iii.** சாந்த மரியாள் கல்லூரியின் விஞ்ஞானம் மற்றும் மருத்துவ கண்காட்சி.

**iv.** களனி பல்கலைக்கழகத்தின் மருத்தவ பீடத்தின் மருத்துவ கண்காட்சி.
**v.** களனி பல்கலைக்கழகத்தின் ஊடக தொடர்பாடல்துறையினால் ஒழுங்குசெய்யப்பட்ட ‘‘சன்ஜானி’’ ஊடக விழா
**vi.** றோயல் கல்லூரியின் ‘‘றோயெஸ்’’ கண்காட்சி.
**vii.** ‘‘நைவல’’ உயர் கல்வி நிறுவனத்தின் கண்காட்சி.
**viii.** கம்பஹா கிறிண்டிவல மத்திய மகா வித்தியாலயத்தின 50 வது அருனலு கல்வி கண்காட்சி.
**ix.** பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ‘‘ஸ்திரி மல’’ கண்காட்சி
**x.** ‘‘பொடி லைன்’’ ஆடைத் தொழிற்சாலை குடும்ப நாள் நிகழ்ச்சித்திட்ட கண்காட்சி
**xi.** யா எல பொது விளையாட்டு மைதானத்தில் பீரங்கிப்படைப்பிரிவின் சேவா வனிதா கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட ஊனமுற்ற படையினரின் கண்காட்சி

### 6.4.6.2 கண்காட்சிகளுக்கான மாதிரிகளினை தயாரித்தல்

பொதுமக்களினை இலகுவாக ஊக்குவிப்பதற்கு கண்காட்சி மாதிரிகள் மிகவும் சக்திவாய்ந்ததாகக் காணப்படுகின்றன. அவ்வாறான நோக்கத்தில் உள்ளூர் மட்டத்தில் நடைபெறுகின்ற கண்காட்சிகளில் பங்குபற்றவதற்காக மாகான அலவலகங்களுக்கு வழங்குவதற்கென “ மனித உடலில் சுற்றாடல் மாசு எவ்வாறு பாதிக்கின்றது “ என்ற கருப்பொருளின் கீழ் சுற்றாடல் மாதிரிகள் தயாரிக்கப்பட்டன.

### 6.4.6.3 காட்சிப்பலகைகளினை தயாரித்தல்

சுற்றாடலுடன் தொடர்புபட்ட 56 காட்சிப்பலகைகள் கீழே குறிப்பிடப்பட்ட 8 கருப்பொருள்களின் கீழ் கண்காட்சிகளின் பாவனைக்காக தயாரிக்கப்பட்டன.

- ✓ உயிர்பல்வகைமை
- ✓ திண்மக்கழிவு முகாமைத்துவம்
- ✓ வளி மாசு
- ✓ காலநிலை மாற்றம்
- ✓ சுற்றாடல் தாக்க மதிப்பீடு
- ✓ சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்
- ✓ நீர்

### 6.4.6.4 பதாகைகளினை தயாரித்தல்

கண்காட்சிகளின் பாவனைக்காக பதாகைகளும் தயாரிக்கப்பட்டன. இவ்வகையில், கண்காட்சியின் நோக்கத்திற்காக காட்சிப்படுத்தவதற்கு 5 பதாகைககள் தயாரிக்கப்பட்டன.

## 6.4.7 சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களினை நாடுபூராகவும் வலுப்படுத்துதல்.

‘‘திவி நெகும’’ நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக பிரதேச செயலாளர் மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இல்லத்தரசிகளுக்கு வீட்டத்தோட்ட கருத்திட்டமானது சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

### 6.4.8 இல்லத்தரசிகளுக்கான விழிப்பூட்டல் மற்றும் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.



செயன்முறை பயிற்சிக்கான அமர்வு உட்பட ஆக்கத்திறனுடைய விட்டுத்தோட்ட விழிப்புணரவு நிகழ்ச்சித்திட்டமானது கொழும்ப மாவட்டத்தில் வசிக்கின்ற பெண்களுக்காக நடாத்தப்பட்டன. இவ்வகையில் கொழும்பு மாவட்டத்திலுள்ள பின்வரும் பிரதேச செயளாலர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத்தோட்ட கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நடைமறைப்படுத்தப்பட்டன.

- ✓ மெறட்டுவ
- ✓ ஹன்வெல
- ✓ தெகிவல
- ✓ கடுவல
- ✓ மகரகம
- ✓ ஹோமகம
- ✓ பாதுக்க
- ✓ கெஸ்பெவ
- ✓ ஸ்ரீ ஜயவர்தனபுர
- ✓ அத்திடிய
- ✓

### 6.4.10 தேசியரீதியிலான சுற்றாடல் நிகழ்வுகள் தொடர்பான சுற்றாடல் பிரச்சார நடவடிக்கைகள்



வேறுபட்ட தேசியரீதியிலான சுற்றாடல் நிகழ்வுகளின் மீது பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்கத்துடன் சுற்றாடல் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.4.11 உலக சுற்றாடல் தினம் (உ.சு.தி)



உயர்தர பாடசாலை மாணவர்களுக்கான நாடளாவிய கட்டரைப் போட்டியானது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட தேசிய வெற்றியாளர்கள் ''பின்னவல'' தேசிய பாடசாலையில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கபபட்டனர். மாவட்ட ரிதியிலான வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

### 6.4.12 தேசியரீதியில் சுற்றாடலுடன் தொடர்புடைய நடப்பு விவகாரங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தினையும் விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கைகளினையும் நடாத்ததல்.

ஆரோக்கியமான சுற்றாடலுக்காக பொதுமக்களினை விழிப்படையச் செய்யும் நோக்கத்துடன் நடப்பு பிரச்சினைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவினால் மேற்கொள்ளப்படுன்றன. இதன் கீழ் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

#### 6.4.11.1 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

பத்தரமுல்லை வடக்கு கிராம அலுவலர் பிரிவினை உள்ளடக்கியதாக ஏனை நிறுவனங்களின் ஆதரவுடன் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. பிரதேசத்தில் வசிக்கின்றவர்களுக்கு விழிப்பூட்டுவதற்கு வேறுபட்ட நிறவனங்களில் இருந்து வருகைதந்த 125 பங்குபற்றுனர்கள் கடந்துகொண்டனர்.

பங்களிப்புச் செய்த நிறுவனங்கள் கிழே பட்டியலிடப்படுகிறது.

- ✓ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்.
- ✓ தென்னை அபிவிருத்தி சபை
- ✓ கூட்டுறவு அமைச்சு
- ✓ ''கடுவல'' மாநகர சபை
- ✓ நீர் வழுங்கல் சபை
- ✓ ''தலங்கம'' மாகாண வைத்தியசாலை.
- ✓ மாகாண கல்வி அலுவலகம்
- ✓ சுகாதார திணைக்களம்

### 6.4.12 செயன்முறைரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களினை மேற்கொள்ளுதல்

சுற்றாடல் தொடர்பான செயன்முறைரீதியான அறிவினை வழங்கும் நோக்குடன் 05 இயற்கை களமையங்கள் (சோபா ஹெத்த) நிறுவப்பட்டது. இது சுற்றாடல் கல்வியின் விரிவுபடுத்தலுடன் தெடர்பான பிரதான அடைவாகவும் குறிப்பிடத்தக்க மைல் கல்லாகவும் காணப்படுகிறது. இந் நிலையங்கள் அப்பிரதேசத்திலேயே விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயன்முறைப்பயிற்சிகளை வழங்குவதற்கு பரந்தளவிலான வசதிகளைக் கொண்டுள்ளது.

#### 6.4.12.1 "பெல்லன்விலவில் அத்திடிய" என்னும் இடத்தில் அமைந்தள்ள இயற்கைவள நிலையத்தின் செயற்பாடுகள்

விழிப்பூட்டல், பயிற்சி நெறிகள், கல்வி போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்களானவை இயற்கைகள சிறுவர் கழகங்கள், ஆரம்ப பாடசாலை பிள்ளைகள், பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தினருக்காக நடாத்தப்பட்டன. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரத்தியோகமான தலைப்புகளின் கீழ் குறிப்பாக சுற்றாடல் சார்ந்த பரந்தளவிலான புரிந்துணர்வினை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இந் நிலையத்தில் பறவைகள், தாவரங்கள், ஈரநிலம், மீன்களும் நீரியல் வழங்களும், உயிர்பல்வகைமை, சேதன விவசாயம், ஓசோன் படை, இசை, நாட்டியம், திறன் அபிவிருத்தி, பொருளாதார வாய்ப்புகளின் முகாமைத்துவம், நடசத்திரங்களும் பிரபஞ்சமும், சிறுவர் உரிமை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

மரநடுகை, பொசன் நிகழ்வு, புதுவருடம், ஈரநிலதினம், உலக சுற்றாடல் தினம், சிறுவர் தினம், டெங்கு ஒழிப்பு, போன்ற விசேட தினங்களும் நிகழ்ச்சிதிட்டங்களுடன் இணைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் யாவும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஒழுங்குபடத்தப்பட்டதுடன் அதற்கான அனுசரனையும் வழங்கப்பட்டது.

பின்வரும் பங்கபற்றுனர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நேரிடையான நன்மைகளினை வழங்கியது.

| இலக்குக் குழு | | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ''சேபா ஹெத்த'' சிறுவர் கழகம் | 01 | 31 |
| 02 | இல்லத்தரசிகள் | 01 | 56 |
| 03 | பாடசாலை பிள்ளைகள் | 30 | 2304 |
| 04 | வெளிக்கள விருந்தினர்கள் | 11 | 726 |

## 6.4.13 தேசிய சுற்றாடல் தகவல் மையம்

தேசிய சுற்றாடல் தகவல் நிலையமானது இலங்கையின் சுற்றாடல் தகவலுக்கான நிலையமாக காணப்படுகின்றது.

இந்நிலையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு

- தகவல் தேவைப்படுவோருக்கு திருப்தியளிக்கும் வகையில் சுற்றாடல் தகவல் வளத்தினை ஏற்படுத்திக் கொடுத்தலும் விருத்திசெய்தலும்.
- சுற்றாடல் தகவலினை பகுப்பாய்தலும் திரட்டுதலும்.
- உள்ளுர் மற்றும் சர்வதேச நிலையங்கள்/நூலகங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதலும் தகவலினை பரப்புதலும்.

2011 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் தகவல் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றச் செயற்பாடுகள் பின்வருமாறு:

**<u>சேகரித்தலும் மேம்படுத்துகையும்</u>**

395 சுற்றாடல் புத்தகங்கள், 25 சுற்றாடல் இதழ்கள், கொள்வனவு செய்யப்பட்டன 4,420 புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் வகைப்படுத்தப்பட்டன.

**<u>நூலக வெளியீடுகள்</u>**

சுற்றாடல் பருவ வெளியீடுகள் தொடர்பான ''நடப்பு உள்ளடங்கங்கள்'' தொடர்பான 6 வெளியீடுகள், சுற்றாடல் செய்தித்தாள் அட்டவணை தொடர்பான 04 வெளியீடுகள், ''சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு அறிக்கை அட்டவணை'' மற்றும், தேசிய சுற்றாடல் சட்டமும் ஒழுங்குவிதிகளும் தொடர்பான அட்டவணை 2011 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்டன.

**<u>சுற்றாடல் தகவலினை பரிமாற்றுதல்</u>**

1,600 சுற்றாடல் தகவல்களானவை சர்வதேச மற்றும் உள்ளூர் நுலகங்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் பரிமாறப்பட்டன.

சுற்றாடல் தகவல் நிலையத்திலிருந்து நூலக வசதியினை 575 உள்ளூர் பாவனையாளர்கள் பெற்றுகொண்டதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நூலக அலவலர்களினால் 3,455 புத்தங்கள் இரவல் வழங்கப்பட்டன.

**<u>ஏனைய செயற்பாடுகள்</u>**

- மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகள் தயாரித்தல்
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலர்களுக்கு உறுப்பினர் அட்டைகளினை விநியோகித்தல்
- 2011/2012 ஆம் ஆண்டுக்கான பிரிட்டிஷ் கவுன்சிலின் நிறுவன உறுப்புரிமையானது புதுப்பிக்கப்பட்டதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.
- புனைகதைகளள் பதிவுசெய்தலும் இராக்கையிடலும் - 415 எண்ணிக்கை
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு/ஆரமப சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கைக்காக புதிய தரவுத்தளம் உருவாக்கப்பட்டது
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை களஞ்சிய இணைய தளம் தொடர்பான தொகுப்பு உருவாக்கப்பட்டது
- தேசிய சுற்றாடல் தகவல் நிலையத்திற்கான கருத்திட்ட அறிக்கை தயரித்தல்

**<u>வருமானம்</u>**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வெளியீடுகளின் விற்பனை
எண்ணிக்கை 568 . **Rs. 39,830.00**,
(புத்தகங்கள், சுவரொட்டிகள், கையேடுகள் இறுவட்டுக்கள் )
ஒளிப்பிரதியெடுத்தலுக்கான கட்டணங்கள் - எண்ணிக்கை
19,362 **Rs. 86,910.00**

## 7.0 சுற்றாடல் பொருளாதார தொடர்பு அலகு

சுற்றாடல் பொருளியலை சுற்றாடல் முகாமைத்துவத்துடன் இணைப்பதன் மூலம் இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல் 2008 ஆண்டில் தாபிக்கப்பட்ட சுற்றாடல் பொருளாதார தொடர்புக் அலகின் பிரதான நோக்கமாகும்.

### முக்கிய பொறுப்புக்கள்

**1. 2008 ஆண்டின் 26 இலக்க சுற்றாடல் பாதுகாப்பு வரிச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் சார்பாக சுற்றாடல் பொருளாதார தொடர்புக் அலகானது நிதி, திட்டமிடல் அமைச்சுடன் இணைந்து 2008 ஆண்டின் 26 இலக்க சுற்றாடல் பாதுகாப்பு வரிச்சட்டத்தை நடைமுறைபடுத்துகிறது.

சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள 2008ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கட்டளையின் கீழ் அனுமதி பெற்ற கையடக்கத் தொலைபேசிச் சேவைகளை வழங்குவோரின் சேவைப் பெறுமதி மீதான 2% வரி அறவிடப்படுகிறது. இந்த வரியினூடாக 2010 ஆண்டில் மொத்த வருமானமாக 1062.2 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. இத்தொகை தேசிய திரட்டு நிதியின் சுற்றாடல் பாதுகாப்பு வரிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2011 வரவு செலவுத் திட்டத்தில் தொலைத் தொடர்புகள் துறையில் ஏற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் அனைத்து வரிகளையும் கூட்டி புதிய தொலைத் தொடர்பு வரியாக 20% ஐ அறவிட முன்மொழியப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் 2010.11.19ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 1658/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2008.02.22ஆம் திகதியிலானதும் 1559/10 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான சுற்றாடல் பாதுகாப்பு வரிக் ஒழுங்கு விதிகளடங்கிய வர்த்தமானி ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

**2. 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திருத்தம்**

2008ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டத்தின் பிரிவுகளை மீறுவதற்கெதிராக வழக்குத் தொடர்தல் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம், பாதுகாப்பிற்காக வரிச் சட்டத்தால் அளிக்கப்படும் நிதியினை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யும் வகையில் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் திருத்தப்படுகின்றது.

சட்ட வரைஞர் திணைக்களத்தின் அவதானிப்பின் பொருட்டு திருத்தப்பட்ட வரைவு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அனுப்பி வைத்துள்ளதோடு இன்றளவில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை குறித்த வரைவு தொடர்பில் கலந்தாலோசித்து வருகிறது.

## 3. பசுமை முத்திரை

முறையான மற்றும் சூழல் நேயத் தொழில்நுட்ப பயன்பாட்டைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளுக்கு சுற்றாடல் உன்னதச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் பசுமை முத்திரையிடல் என அறியப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான அறிமுகம், நோக்கங்கள், தெரிவிற்கான அடிப்படை நியதிகள். நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான எண்ணக்கருக்கள், திட்டத்தின் கட்டமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட பொருட்கள் . சேவைகள் மீதான விசேட அம்சங்கள் 2010 ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டு அமுலாக்கும் பணிகளை சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு அலகு 2010.07.27ஆம் திகதியிலிருந்து பொறுப்பேற்றுக்கொண்டதோடு அதன் பணிகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல் பொருளாதார அலகின் ஒத்துழைப்பும் வழங்கப்படுகிறது.

## 8.0 திட்ட, கண்காணிப்பு அலகு

தேசிய சுற்றாடல் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தவதற்காக அந்தந்தப் பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்களுக்குப் பொருந்தக் கூடிய வகையிலான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் திட்ட மற்றும் கண்காணிப்புப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

அரசின் சுற்றாடல் கொள்கைகளுக்கு ஏற்புடைய விதத்தில் முன்னுரிமைகளைக் கண்டறிதல், ஆண்டுதோறும் பொதுத் தறைசேரியினால் வழங்கப்படும் நிதியை கண்டறிந்த முன்னுரிமைகளுக்காக கையாளுதல், சுற்றாடல் துறையில் தனியார் துறைக்கு ஏற்புடைய முன்னுரிமைகளைக் கண்டறிதல் மற்றும் வெளிநாட்டு உதவிகளை பயனுறுதி வாய்ந்ததாக கையாளுதல் போன்ற பணிகள் இவ்வலகினால் நிறைவேற்றப்படுகின்றன.

சுற்றாடல் துறையில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட துறைகளுக்கென தயாரிக்கப்படும் செயற்பாட்டுத் திட்டமானது மத்திய அரசாங்கத்தின் நிறுவனமான தலைமை அலுவலகம் ஊடாகவும் பிராந்திய மட்டத்தில் பிராந்திய அலுவலகங்கள் ஊடாகவும் நடைமுறைப்படுத்துவதில் திட்ட மற்றும் கண்காணிப்பு அலகு வெற்றி கண்டுள்ளது.

இந்த அலகினால் திட்டமிடல் செயற்பாட்டுக்கு இயைபாக பல்வகை செயற்பாட்டுத் திட்டங்கள், மேற்பார்வைத் திட்டங்கள் மற்றும் காலத்திற்குத் தேவையான செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அவற்றை இணைப்பாக்கம் செய்வதற்குமான வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு பல்வேறு நிறுவனங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளை உரிய திகதியில் தயாரித்து வழங்கலும் மேற்கொள்ளப்படுகிறது.

ஆதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளின் முறையான இணைப்பாக்கம், மேற்பார்வை மற்றும் அந்தந்த விடயத்துறைகளுக்கேற் பிராந்திய மட்டத்திலும் நிலவும் சிக்கல்கள் / பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்காக முகாமைத்துவத்துடனும் பிராந்திய அலுவலகங்களுடனும் மாதாந்தக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படும். திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தத் தேவையான ஒத்துழைப்பு இச்செயற்பாடுகளினூடாக வழங்கப்படுகிறது.

**கூட்டிணைத் திட்டம்**

பொதுத் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுட்டிணை ஆளுகை அறிவுறுத்தல்களுக்கமைவாக அனைத்து நியதிச்சட்ட சபைகளும் தத்தமது தொலை நோக்கு உட்பட்ட மூலோபாயங்களை உள்ளடக்கியதாக கூட்டுத் திட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் தேசிய சுற்றாடல் சட்டத்திற்கமைய, ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2008-2012 வரையான காலத்திற்கான கூட்டுத்திட்டத்தை தயாரித்துள்ளது.

சுற்றாடல் துறைக்கு மிகுந்த பயனுறுதியைக் கொண்டு வரும் புதிய தொழிற்பாடுகளையும் இலக்குகளையும் உள்ளடக்கிய மேற்படி திட்டம் 2011 ஆண்டில் காலத்திருத்தம் செய்யப்பட்டதோடு அதற்கென மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

**மாகாண அலுவலகங்களுடனான இணைப்பாக்கம்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும்

நோக்கத்துடன் சுற்றாடலின் தரத்தைப் பேணுதல், சுற்றாடல் மாசடைவதைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் குறைத்தலுக்கான போதிய அதிகாரங்களை வழங்கி பிராந்திய சுற்றாடல் முகாமைத்துவத்தின் பொருட்டு மாகாண அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மாகாண அலுவலகங்கள் ஊடாக பிராந்திய மட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள், தொழில்முயற்சிகள், கைத்தொழிலாளர்கள், அரசு சார்பற்ற அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகிய பரந்துமட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கு சுற்றாடல் முகாமைத்துவம் சார்ந்த சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், பிராந்திய அலுவலகங்களுக்கான செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல், சுற்றாடல் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளைக் கோருதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தச் செய்தல், இணைப்பாக்கம் செய்தல் போன்றவற்றையும் இந்த அலகு மேற்கொண்டு வருகிறது.

மாவட்ட மட்டத்தில் மாவட்ட அலுவலகங்களை அமைத்து பிராந்திய செயற்பாடுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவு செய்த சில மாவட்டங்களில் மாவட்ட அலுவலகங்களை அமைத்தது. மாவட்ட அலுவலகங்களின் முக்கிய நோக்கம் மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை இணைப்பாக்கம் செய்தலும் மேற்பார்வை செய்தலுமாகும்.

தற்போது அம்பாறை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, நுவரெலியா, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டம் அடங்கலாக 06 மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**கருத்திட்ட இணைப்பாக்கம், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு**

பொதுத் திறைசேரியின் நிதி மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளை உரிய முறையில் கையாளுதல், அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கீழ்க் காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு இணைப்பாக்கம் செய்யும் பணிகளை திட்டமிடல், கண்காணிப்பு அலகு மேற்கொண்டு வருகிறது.

பொதுத் திறைசேரியின் நிதியினைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்

- பிலிசறு கருத்திட்டம் (ரூபா 637 மி)
- பாவனைக்குப் பிற்பட்ட பொலித்தீன் முகாமைத்துவ கருத்திட்டம் (ரூபா 100 மி)
- இலங்கையில் சுற்றாடல் மாசுக்காரணி கைத்தொழில்களுக்கான தரவுத் தளத்தை நிறுவுதல் (ரூபா 1.5மி)
- சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் (ரூபா 5 மி)
- சுற்றாடல் வள தகவல் தொகுதியை நிறுவுதல் (ரூபா 0.5மி)

**வெளிநாட்டு உதவியில் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள்**

- KOICA (ரூபா 21 மி)

## 8.1 முறைப்பாட்டுப் அலகு

சுற்றாடல் முறைப்பாட்டு அலகிற்கு நாளாந்தம் பினவரும் வழிகளில் அதிகபடியான முறைப்பாடுகள் கிடைக்கின்றன

சுற்றாடல் அமைச்சின் அவசர தொலைபேசி அழைப்புகள் ஊடாக கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அவசர தொலைபேசி அழைப்புகள் ஊடாக கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ தலைவரின் அலுவலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ பணிபாளர் தலைமை அதிபதியின் அலுவலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ பிரிவுத் தலைவர்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ சுற்றாடல் அமைச்சருக்கு பொதுமக்கள் தினத்தன்று கிடைக்கும் முறைப்பாடுகள்
- ❖ பொதுமக்களால் தினசரி செய்யப்படும் முறைப்பாடுகள்
- ❖ தபால் மூலம் தினசரி கிடைக்கும் முறைப்பாடுகள்

முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் பதிவிலக்கமொன்று வழங்கப்பட்டு பதிவு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.
இவ்வாறான முறைப்பாடுகளில் பெரும்பாலானவை தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவுகள் மீறப்பட்டுள்ளதுடன் தொடர்புடையனவாக காணப்படுகின்றன.

இவ்வாறு வந்து கிடைக்கும் முறைப்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட அலகுகள் அல்லது மாகாண அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களால் விசாரிக்கப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும்.
சுற்றாடல் சட்டத்துடன் தொடர்புபடாத முறைப்பாடுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

2011 ஆண்டில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் எண்ணிக்கை நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு கீழுள்ளவாறு ஆற்றுப்படுத்தப்பட்டன.

| | **சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்** | **முறைப்பாடுகள் எண்ணிக்கை** |
|---|---|---|
| • | கொழும்பு மாவட்ட அலுவலகம், ம சுஅ | 364 |
| • | கம்பஹா மாவட்ட அலுவலகம், ம சுஅ | 233 |
| • | களுத்துறை மாவட்ட அலுவலகம், ம சுஅ | 78 |
| • | சுற்றாடல் தாக்க மதீப்பீட்ட பிரிவு, ம சு அ | 01 |
| • | இயற்கை வள முகாமைத்துவ அலகு ம சு அ | 04 |
| • | திண்ம கழிவு முகாமைத்துவ ம சு அ | 08 |
| • | சுற்றாடல் மாசு கட்டப்பாடு அலகு ம சு அ | 31 |
| • | சட்ட அலகு ம சு அ | 01 |
| • | பொலீஸ் பிரிவு ம சு அ | 47 |
| • | அம்பாறை மாவட்ட அலுவலகம், ம சுஅ | 38 |
| • | மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம், ம சுஅ | 10 |
| • | மத்திய மாகாண அலுவலகம், ம சுஅ | 137 |
| • | கிழக்கு மாகாண அலுவலகம், ம சுஅ | 18 |
| • | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம், ம சுஅ | 32 |
| • | மாத்தறை மாவட்ட அலுவலகம், ம சுஅ | 59 |
| • | வடமத்தி மாகாண அலுவலகம், ம சுஅ | 79 |
| • | வட மேல் மாகாண அலுவலகம், ம சுஅ | 133 |
| • | சப்புரகமுவ மாகாண அலுவலகம், ம சுஅ | 100 |
| • | தென் மாகாண அலுவலகம், ம சுஅ | 94 |
| • | ஊவா மாகாண அலுவலகம், ம சுஅ | 50 |
| • | ஊள்ளுராட்சி சபை | 312 |
| • | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூடடுத்தாபனம் | 12 |
| • | புவி சரிதவியல் மற்றும் அகழ்வு பணியகம் | 19 |
| • | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனம் | 01 |
| • | சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் | 99 |
| | **மொத்தம்** | **1960** |

## 9.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம்

### 9.1 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரங்களை பன்முகப்படுத்தல்

தலைமை அலுவலகமாக இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தேசிய மட்டத்தில் தர நியமங்கள் மற்றும் அளவுகோள்களை வெளியிடத் தேவையான அறிவுரைப்புகளைத் தயாரித்து வருவதோடு பிராந்திய மட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2002 ஆண்டில் மத்திய மற்றும் தென் மாகாணத்தில் இரண்டு பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டன.

நிறுவப்பட்ட மேற்படி அலுவலகங்களின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் குறித்த வேலைத்திட்டம் நாடு தழுவிய மட்டம் வரை விரிவாக்கப்பட்டதோடு 2007 ஆண்டளவில் வடமேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மாகாண அலுவலகங்கள் நிறுவப்பட்டு சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான செயற்பாட்டு வேலைத்திட்டமொன்று பிராந்திய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களில் ஒரு பகுதியை மத்திய சுற்றாடல் அதிகாரசபை சார்பாக நடைமுறைப்படுத்துவதற்கென மாகாண அலுவலகங்களின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 9.2 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான அதிகார பரவலாக்கம்

பிராந்திய மட்டத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தத்துவங்களை நடைமுறைப்படுத்தத் தேவையான அதிகாரங்களை வழங்குவது தொடர்பான பிரிவுகளை தேசிய சுற்றாடல் சட்டம் கொண்டுள்ளது.

குறித்த சட்டத்தின் 26ஆம் பிரிவிற்கமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபை கொண்டுள்ள தத்துவங்கள், பணிகள், அல்லது கடமைகள் எதையேனும் அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்திற்கு, கூட்டுத்தாபனத்திற்கு, நியதிச்சட்ட சபைக்கு, உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அல்லது எவரேனும் அரசாங்க அலுவலருக்கு ஒப்படைக்கலாம். 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க மற்றும் 1998ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அதிகாரசபையின் நடவடிக்கைகளை பிராந்திய மட்டத்திற்கு பன்முகப்படுத்தும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவிற்கமைய 1993ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தத்துவங்களின் ஒரு பகுதியை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டதோடு 1994.01.01ஆம் திகதியிலிருந்து பயனுறும் வகையில் சிறியளவிலான கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குவதற்கான தத்துவங்களும் மேலும் 12 நடவடிக்கைகளுக்கான தத்துவங்களும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதாவது மாநகர சபைகள், நகர சபைகள் அல்லது பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதன் பின்னர் 1533/16ஆம் இலக்க மற்றும் 2008 சனவரி மாதம் 25ஆம் திகதிய அதிவிசேட வாத்தமானி அறிவித்தலின் மூலம் உரிமங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகவல்கள் ''அ'', ''ஆ'', மற்றும் ''இ'' என 03 பகுதிகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விளைவாக 2008ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14ஆம் திகதி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தத்துவங்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை மீண்டும் எடுத்துக்கொண்டதோடு 2008.03.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் ''ஆ'' பகுதிக்குரிய விதித்துரைக்கப்பட்ட விடயங்களுக்காக உரிமப்பத்திரங்களை விநியோகிக்கும் அதிகாரம் மீண்டும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

## 9.3. மாவட்ட சுற்றாடல் சட்டங்களை பலப்படுத்தும் குழு (DELEC)

1995 ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட சுற்றாடல் சட்டங்களைப் பலப்படுத்துவதற்கான குழுக்களை அமைப்பதற்கான நிருவாக ரீதியான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அக்குழுவின் தலைவராக சம்பந்தப்பட்ட நிருவாக மாவட்டத்தின் செயலாளர் கடமையாற்றுவார்.

**இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் வருமாறு.**

- சுகாதார சேவை மாகாண பணிப்பாளர்
- சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
- மாவட்ட வன உத்தியோகத்தர்
- உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
- வன சீவராசிகள் திணைக்களத்தின் பிரதம அலுவலர்
- நிருவாக மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவன தலைவர்
- அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்
- பிராந்திய சுற்றாடல் உத்தியோகத்தர் இக்குழுவின் செயலாளர் பதவியை வகிப்பார். மேலும், தேவைப்பாட்டுக்கமைய இக்குழுவுக்குத் தேவையான உறுப்பினாகளும் பிரநிதிதிகளும் நியமிக்கப்படுவர்.

பொது மக்களிடமிருந்து கிடைக்கும் சுற்றாடல் ரீதியான மோசடிகள் மற்றும் தவறுகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களான பொலிசு, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் மற்றும் காடு பேணல் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளச் செய்தல் இக்குழுவின் முக்கிய செயற்பொறுப்பாகும்.

மேலும் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் சுற்றாடல் சார்ந்த முறைப்பாடுகளை தொடபில் செயலாற்றுதலை இக்குழு தனது முக்கிய பணியாகக்கொண்டுள்ளது.

# 10. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதேமயமாக்கல் வேலைத்திட்டம்

## 10.1 அறிமுகம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 08 மாகாண அலுவலகங்களை அமைத்து அவற்றின் ஊடாக சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பிற்கான பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. (1990 ஆண்டின் 12 இலக்க வட மேல் மாகாண சுற்றாடல் நியதிச்சட்டத்தின் கீழ் வட மேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை நிறுவப்பட்டு பேணப்பட்டு வருகிறது.

*2011 ஆண்டில் சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் இயங்கும் மாகாண அலுவலகங்கள்*

மத்திய மாகாண அலுவலகம்
தென் மாகாண அலுவலகம்
கிழக்கு மாகாண அலுவலகம்
வட மத்திய மாகாண அலுவலகம்
வட மாகாண அலுவலகம்
சப்ரகமுவ மாகாண அலுவலகம்
ஊவா மாகாண அலுவலகம்
மேல் மாகாண அலுவலகம

பணிப்பாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வை மற்றும் அந்தந்த துறைகளின் தொழில்நுட்ப உதவிகளுடன் மேற்படி அலுவலகங்கள் கடந்த ஆண்டில் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை வினைத்திறன்மிக்கதாக நிறைவேற்ற பாரிய முயற்சிகளை எடுத்திருந்தன.

வட மேல் மாகாணத்தில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் கல்வி, விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் அத்துடன் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் வட மேல் மாகாணத்தில் பிராந்திய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஏனைய மாகாணங்களில் நடைபெறும் தேசிய சுற்றாடல் சட்டம் மீதான ஒழுங்குபடுத்தல் பணிகள் நடைபெறுவதில்லை.

வட மேல் மாகாண அலுவலகத்தினூடாக நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் பின்வருமாறு

- திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில் பொது மக்களுக்கு நெருக்கமான சேவையை வழங்குதல்.

- உரிய முறையில் திண்மக் கழிவுப் பொருட்களை அகற்றுவதனூடாக ஆரோக்கியமானதும் தூய்மையானதுமான சுற்றாடலைப் பேணல்
- சூழல் நேயமிக்கவர்களை உருவாக்குதல்
- சுற்றாடல் ஆர்வமுள்ளவர்களை உருவாக்குதல்
- சூழல் நேயக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுற்றாடலின் தரத்தைப் பேணுதல்

## 10.2. மாகாண அலுவலகங்களின் செயற்பொறுப்பு

மாகாண அலுவலகங்கள் தத்தமது ஆளுகைப் பிரதேசங்களில் நிருவாக மற்றும் சுற்றாடல் சார்ந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

### 10.2.1 நிருவாக நடவடிக்கைகள்

(அ) பொது நிருவாக நடவடிக்கைகள்

(ஆ) மாகாண அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியின் நிருவாக நடவடிக்கைகள்

(இ) பிராந்திய சுற்றாடல் உத்தியோகத்தர்களின் நிருவாக நடவடிக்கைகள்

(ஈ) மனித வள அபிவிருத்திப் பணிகள்

(உ) மாகாண அலுவலகங்களை நிறுவுதலும் பொது நடவடிக்கைகளும்

(ஊ) நிதிசார் நடவடிக்கைகள்

(எ) பிராந்திய ரீதியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி கூட்டங்களில் கலந்துகொள்ளல்

### 10.2.2 சுற்றாடல் நடவடிக்கைகள்

*(அ) சுற்றாடல் பாதுகாப்பு*

- சுற்றாடல் மாசுக்கட்டுப்பாடு (கைத்தொழில் கழிவுகள், திண்மக்கழிவுப் பொருள், வாயு வெளியேற்றம், ஒலி மாசடைவைக் கட்டுப்படுத்தல்)
- சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல்
- புதிய கைத்தொழில்களுக்கான அமைவிட சிபாரிசுகளை விநியோகித்தல்
- சுற்றாடல் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கும் மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுதல்
- உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்குவது தொடர்பில் செயற்படுத்தல்
- சுற்றாடல் சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்

*(ஆ) சுற்றாடல் முகாமைத்துவம்*

- இயற்கை வள முகாமைத்துவம்
- பூர்வாங்க சுற்றாடல் ஆய்வு (IEE)
- சுற்றாடல் தாக்க மதிப்பீடு சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டினுள் அடங்காத கருத்திட்டங்களுக்கான சிபாரிசுகள்

*(இ) சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு*

- பாடசாலை முன்னோடி செயலணியை பலப்படுத்தல்
- பொது மக்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- சுற்றாடல் கண்காட்சிகளை நடாத்துதல் / ஏற்பாடு செய்தல்

## 10.3. மாகாண அலுவலகங்களின் செயலாற்றுகை

### 10.3.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை விநியோகிக்கும் செயற்பாடு

மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்தவங்களின் பிரதான சட்ட செயற்பாடு 1533/16ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை விநியோகம் செய்வதாகும். இதனை நடைமுறைப்படுத்தும்போது தேசிய மட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள, கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் தொடர்பான நியமங்கள், வரையறைகள், வாயு வெளியேற்றம் மற்றும் ஒலி மட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாடு அறிமுகம் செய்யப்படுவதற்கு அதாவது, இற்றைக்கு இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களுக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த கைத்தொழில்கள் காரணமாக பாரியளவில் சுற்றாடல் பிரச்சனைகள் இருந்துள்ளமை தெளிவாகிறது. மேலும், குறித்த கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அல்லது கழிவுப்பொருட்கள் எவ்வித பரிகாரத்திற்கும் உட்படுத்தப்படாது சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. குடி நீர் பெறப்படும் ஒருசில நீர் நிலைகளில் கழிவுகள் கொட்டப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் குளிப்பதற்கும் சலவை செய்வதற்குமான தண்ணீரை ஆறுகளிலிருந்து பெற்றுக்கொள்வதால் தண்ணீரைஆறுகளிலிருந்து பெற்றுக்கொள்வதில் சிக்கல் உள்ளதாக தேசிய நீர வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவிக்கின்றது. எனவே, இந்த உரிமச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தில் காணப்படும் நிபந்தனைகளை மீறுதலானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இலங்கையில் கைத்தொழிற்சாலைகளின் அமைவினை நோக்கும்போது 60 சதவீத சிறியளவிலான கைத்தொழிற் சாலைகள் மேல் மாகாணத்திலேயே அமைந்துள்ளன. இது மத்திய மாகாணத்தில் 13 சதவீதமாகவும் தென் மாகாணத்தில் சுமார் 17 சதவீதமாகவும் காணப்படுகிறது. எஞ்சிய 10 சதவீத கைத்தொழிற் சாலைகளும் ஏனை மாகாணங்களான சப்ரகமுவ, கிழக்கு, வட மத்திய, ஊவா மற்றும் வட மாகாணத்தில் அமைந்துள்ளன. விசேட கருத்திட்ட மற்றும் ஆராய்ச்சிப் பிரிவானது தற்போது அந்தந்த மாகாணத்தில் கைத்தொழிற் சாலைகள் அமைந்துள்ள விதம் தொடர்பான ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டு வருவதோடு அதனூடாக மாகாணங்களில் கைத்தொழிற் சாலைகளின் அமைவு தொடர்பான சரியான தகவல்களை வெளிப்படுத்த முடியும்.

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் மூன்று ஆண்டுகளுக்கொரு ஒரு முறை விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் ஒவ்வொரு உரிமத்தையும் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். மேலும், கைத்தொழிலாளர்கள் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும் வகையில் செயற்பட்டுள்ளமை நிரூபிக்கப்படும் பட்சத்தில் குறித்த உரிமத்தை ரத்துச்செய்வதற்கான அதிகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உண்டு. உரிமம் ரத்துச்செய்யப்பட்ட பின்னர் எவரேனுமொருவர் மேன் முறையீடொன்றைச் சமர்ப்பிக்க விரும்பின் குறித்த மேன்முறையீட்டை அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் செயலாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

## சுற்றாடல் உரிமம் விநியோகமும் புதுப்பிப்பும்

| மாகாணம் | மாவட்டம் | விநியோகிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் எண்ணிக்கை | | | | | | புதுப்பிக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2008 | | 2009 | | 2010 | | 2008 | | 2009 | | 2010 | |
| | | 'அ' | 'ஆ' | 'அ' | 'ஆ' | 'அ' | 'ஆ' | 'அ' | 'ஆ' | 'அ' | 'ஆ' | 'அ' | 'ஆ' |
| மேல் | கொழும்பு | 135 | 211 | 223 | 236 | 148 | 210 | 166 | - | 427 | - | 512 | 20 |
| | கம்பஹா | 110 | 212 | 142 | 227 | 168 | 166 | 137 | - | 218 | - | 260 | 14 |
| | களுத்துறை | 43 | 112 | 91 | 134 | 69 | 103 | 68 | - | 174 | - | 200 | 21 |
| மத்திய | கண்டி | 49 | 63 | 83 | 121 | 74 | 88 | 22 | 3 | 54 | 1 | 81 | 4 |
| | மாத்தளை | 23 | 58 | 37 | 49 | 32 | 33 | 14 | 3 | 35 | 2 | 64 | 5 |
| | நுவரெலியா | 8 | 13 | 4 | 7 | 13 | 9 | 3 | - | 16 | - | 7 | |
| தென் | காலி | 30 | 111 | 34 | 100 | 63 | 129 | 37 | 23 | 63 | 15 | 79 | 11 |
| | மாத்தறை | 15 | 91 | 53 | 74 | 23 | 96 | 36 | 18 | 31 | 22 | 79 | 6 |
| | அம்பாந்தோட்டை | 22 | 48 | 27 | 41 | 39 | 45 | 5 | 7 | 20 | - | 26 | 1 |
| சப்ர | கேகாலை | 37 | 108 | 38 | 91 | 36 | 69 | 5 | - | 32 | 1 | 39 | 3 |
| | இரத்தினபுரி | 32 | 94 | 56 | 89 | 40 | 79 | - | - | 31 | 12 | 39 | 7 |
| வட.ம | அநுராதபுரம் | 21 | 90 | 39 | 151 | 38 | 55 | 12 | - | 26 | 1 | 64 | 3 |
| | பொலனறுவை | 11 | 21 | 11 | 27 | 5 | 18 | 8 | - | 155 | 4 | 22 | 1 |
| கிழக்கு | திருகோணமலை | 18 | 61 | 19 | 48 | 21 | 28 | 8 | - | 10 | 9 | 23 | 4 |
| | அம்பாறை | 24 | 46 | 13 | 58 | 7 | 62 | 4 | - | 7 | 7 | 15 | |
| | மட்டக்களப்பு | 12 | 34 | 17 | 58 | 2 | 37 | 1 | - | - | - | 3 | 8 |
| | வவுனியா | - | 2 | 8 | 1 | 14 | 3 | - | - | - | - | 7 | |
| | மன்னார் | - | 6 | 1 | 3 | | 5 | 2 | - | 14 | 16 | 1 | |
| ஊவா | பதுளை | 13 | 31 | 11 | 36 | 17 | 37 | 3 | 26 | 13 | 9 | 26 | 6 |
| | மொனறாகல | 14 | 21 | 6 | 24 | 2 | 33 | 7 | - | 13 | - | 4 | 1 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 5 | 3 | 5 | 35 | 12 | 24 | 2 | 6 | | - | 25 | 1 |
| | கிளிநொச்சி | - | - | - | - | - | - | - | - | - | - | 0 | - |
| | முல்லைத்தீவு | - | - | - | - | - | - | - | - | - | - | 0 | - |
| **மொத்தம்** | | **622** | **1,436** | **918** | **1610** | **823** | **1329** | **540** | **86** | **1204** | **100** | **1576** | **116** |

*மாகாண அலுவலகங்களால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட புதிய கைத்தொழில்கள் தொடர்பான விபரங்கள்*

| மாகாணம் | மாவட்டம் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | மேற்கொள்ளப்பட்ட களப்பரி சோதனைகளின் எண்ணிக்கை | | | அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்டவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2009** | **2010** | **2011** | **2009** | **2010** | **2011** | **2009** | **2010** | **2011** | **2009** | **2010** | **2011** |
| | | 81 | 111 | 136 | 84 | 108 | 192 | 65 | 83 | 82 | 9 | 1 | |
| மேல் | கொழும்பு | 82 | 119 | 154 | 62 | 116 | 110 | 38 | 112 | 58 | 3 | 17 | 15 |
| | கம்பஹா | 69 | 86 | 135 | 42 | 77 | 125 | 57 | 64 | 102 | 5 | 4 | 8 |
| | களுத்துறை | 59 | 56 | 155 | 63 | 44 | 91 | 33 | 50 | 77 | 7 | 7 | 10 |
| மத்திய | கண்டி | 23 | 17 | 72 | 15 | 50 | 61 | 34 | 27 | 54 | 1 | | 8 |
| | மாத்தளை | 7 | 6 | 19 | 8 | 9 | 18 | 4 | 14 | 14 | 0 | | |
| | நுவரெலியா | 34 | 69 | 102 | 47 | 73 | 118 | 46 | 43 | 67 | 11 | 10 | 19 |
| தென் | காலி | 46 | 47 | 80 | 28 | 44 | 79 | 23 | 34 | 59 | 3 | 8 | 21 |
| | மாத்தறை | 22 | 33 | 58 | 23 | 31 | 54 | 21 | 23 | 39 | 0 | 2 | 6 |
| சப்ர | அம்பாந்தோட்டை | 49 | 31 | 96 | 42 | 27 | 56 | 38 | 15 | 58 | 4 | 1 | 5 |
| | கேகாலை | 49 | 59 | 83 | 38 | 50 | 34 | 31 | 18 | 48 | 5 | 3 | 15 |
| வட.ம | இரத்தினபுரி | 102 | 172 | 164 | 93 | 113 | 126 | 67 | 112 | 81 | 4 | 6 | 2 |
| | அநுராதபுரம் | 31 | 18 | 16 | 20 | 15 | 14 | 14 | 9 | 11 | 1 | | |
| | பொலனறுவை | 16 | 48 | 98 | 10 | 39 | 66 | 10 | 15 | 91 | 0 | 2 | 7 |
| கிழக்கு | திருகோணமலை | 51 | 61 | 28 | 34 | 55 | 34 | 19 | 27 | 60 | 1 | | 3 |
| | அம்பாறை | 44 | 37 | 89 | 40 | 35 | 92 | 32 | 18 | 88 | 0 | | |
| | மட்டக்களப்பு | 0 | 9 | 56 | 0 | 8 | 47 | 0 | 6 | 69 | 0 | | 2 |
| | வவுனியா | 0 | 6 | 37 | 0 | 7 | 37 | 0 | 13 | 26 | 0 | | |
| ஊவா | மன்னார் | 54 | 63 | 117 | 69 | 68 | 98 | 75 | 48 | 79 | 0 | 1 | 1 |
| | பதுளை | 24 | 38 | 44 | 23 | 27 | 30 | 21 | 24 | 28 | 6 | 2 | |
| | மொனறாகல | 31 | 276 | 155 | 23 | 152 | 120 | 20 | 161 | 97 | 6 | 16 | 3 |
| | யாழ்ப்பாணம் | 0 | 14 | 117 | 0 | 24 | 107 | 0 | 6 | 99 | 0 | 2 | 3 |
| | கிளிநொச்சி | 3 | | 11 | 1 | | 9 | 1 | | 8 | 0 | | |
| **மொத்தம்** | | **877** | **1376** | **2022** | **765** | **1172** | **1718** | **649** | **952** | **1395** | **66** | **82** | **128** |

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் கைத்தொழிலாளர்கள் புதிய கைத்தொழில்களின் நிமித்தம் மிகுந்த ஆர்வத்துடன் காணப்படுவதை மேற்படி அட்டவணை காட்டுகிறது. மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் புதிய கைத்தொழில்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

## 10.3.1.3. சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பான மக்கள் முறைப்பாடுகள்

| மாவட்டம் | கிடைத்த முறைப்பாடுகள் | | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | | சட்ட நடவடிக்கைக்காக ஆற்றுப்படுத்திய | பிற நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்திய | | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | EPC | NRM | EPC | NRM | EPC | EPC | NRM | |
| களுத்துறை | 359 | 7 | 325 | 6 | 3 | 6 | | 5 |
| கொழும்பு | 225 | | 96 | | 6 | 15 | | 14 |
| கம்பஹா | 243 | 53 | 55 | 13 | 8 | 54 | 27 | 20 |
| கண்டி | 80 | 24 | 7 | 7 | | 7 | | |
| மாத்தளை | 31 | 7 | 2 | 1 | 2 | | | 4 |
| நுவரெலியா | 39 | | | | | | | |
| காலி | 178 | 94 | 37 | 17 | 11 | 1 | 13 | 7 |
| மாத்தறை | 143 | 24 | 111 | 24 | 1 | | | |
| அம்பாந்தோட்டை | 39 | 2 | 23 | | | 2 | 1 | |
| கேகாலை | 42 | 50 | 16 | 26 | 1 | 5 | 19 | 4 |
| இரத்தினபுரி | 59 | 57 | 26 | 39 | 6 | 14 | 23 | 2 |
| பொலனறுவை | 56 | | | | 1 | 3 | | 2 |
| அநுராதபுரம் | 125 | | 4 | | 4 | 4 | | 10 |
| அம்பாறை | 17 | 2 | 2 | 1 | | 6 | | |
| மட்டக்களப்பு | 9 | 2 | 2 | 1 | | 1 | | |
| மன்னார் | | | | | | | | |
| வவுனியா | | | | | | | | |
| திருகோணமலை | 6 | 1 | 1 | | | | | 1 |
| மொனறாகலை | 2 | 3 | | | | | | |
| பதுளை | 29 | 15 | | | | | | |
| கிளிநொச்சி | 1 | | | | | | | |
| முல்லைத்தீவு | | | | | | | | |
| யாழ்ப்பாணம் | 25 | | 8 | | | | | |
| **மொத்தம்** | **1,676** | **341** | **715** | **135** | **43** | **118** | **83** | **71** |

அந்தந்த மாகாண அலுவலக ஆளுகைப் பிரதேசத்திலுள்ள பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் அதாவது, கைத்தொழிலொன்றை நடாத்துவதால் ஏற்படும் சுற்றாடல் மாசடைவு அல்லது வேறேதும் நடவடிக்கை காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைவு அல்லது இயற்கை வளங்களின் தவறான பயன்பாடு தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் மாகாண அலுவலகங்கள் செயலாற்றி வருகின்றன.

| மாகாணம் | மாவட்டம் | கிடைத்த விண்ணப்பங்கள் | | | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | | | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 |
| மேல் | கொழும்பு | 2 | | 2 | 1 | | | | | |
| | கம்பஹா | 1 | 9 | 4 | | | 2 | | | |
| | களுத்துறை | 0 | | 1 | 3 | | | | | |
| தென் | காலி | 1 | 2 | 11 | 1 | | 5 | | 1 | |
| | மாத்தறை | 1 | 3 | 9 | | 3 | | | 3 | |
| | அம்பாந்தோட்டை | 2 | 5 | 1 | | | | | 2 | |
| | கண்டி | 275 | 303 | 237 | 192 | 302 | 226 | 1 | 9 | 17 |

| மாகாணம் | மாவட்டம் | கிடைத்த விண்ணப்பங்கள் | | | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | | | நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 |
| மத்திய | மாத்தளை | 51 | 30 | 42 | 86 | 197 | 175 | 1 | 3 | 2 |
| | நுவரெலியா | 94 | 34 | 97 | 11 | 35 | 115 | | | |
| சப்ர | கேகாலை | 45 | 7 | 23 | | 4 | 4 | | | |
| | இரத்தினபுரி | *14* | *20* | *5* | 1 | 3 | 4 | 1 | | |
| ஊவா | பதுளை | | 10 | 2 | 1 | 1 | 4 | 1 | | |
| | மொனறாகல | | 1 | 3 | | | | | | |
| கிழக்கு | திருகோணமலை | | 20 | | | 14 | | | | |
| | அம்பாறை | | 4 | | | 3 | 1 | | | |
| | மட்டக்களப்பு | 1 | 2 | | | 2 | | | | |
| | வவுனியா | | 2 | | | 1 | | | | |
| | மன்னார் | | | | | 4 | | | | |
| வட.ம | அநுராதபுரம் | | | 1 | | | | | | |
| | பொலனறுவை | | | | | | | | | |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 14 | 47 | | 2 | 19 | | | 1 | |
| | கிளிநொச்சி | | | 2 | | | | | | |
| | முல்லைத்தீவு | | | 3 | | | | | | |
| **மொத்தம்** | | **501** | **499** | **443** | **296** | **581** | **536** | **4** | **19** | **19** |

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் அடங்காத கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் விதப்புரைகளை விநியோகித்தல்**

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டில் அல்லது பூர்வாங்க சுற்றாடல் ஆய்வில் அடங்காத கருத்திட்டங்களுக்கான விதப்புரைகளை வழங்கும் பணிகளை மாகாண அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

கருத்திட்ட முன்மொழிவாளர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களின் பிரகாரம் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நிபந்தனைகளுடன் சுற்றாடல் விதப்புரை வழங்கப்படும். அதன் பிரகாரம் கடந்த ஆண்டில் ஹோட்டல், மரங்களைத் தரித்தல், தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைத்தல் மற்றும் காணி துண்டாடல் ஆகிய 2606 கருத்திட்டங்களுக்கு கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு மாகாண அலுவலகங்கள் மூலம் சுற்றாடல் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

| மாகாணம் | மாவட்டம் | கிடைத்த விண்ணப்பங்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | நிராகரி விண்ணப்ப | கண்காணித்த விண்ணப்ப |
|---|---|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 72 | 17 | 1 | |
| | கம்பஹா | 269 | 71 | | |
| | களுத்துறை | 327 | 650 | 18 | 22 |
| தென் | காலி | 61 | 124 | 3 | 10 |
| | மாத்தறை | 8 | 33 | 6 | |
| | அம்பாந்தோட்டை | 41 | 90 | 2 | 30 |
| மத்திய | கண்டி | 258 | 439 | 5 | 7 |
| | மாத்தளை | 61 | 240 | | 2 |
| | நுவரெலியா | 31 | 20 | | |
| சப்ர | கேகாலை | 107 | 279 | 19 | |
| | இரத்தினபுரி | 129 | 217 | 3 | |
| ஊவா | பதுளை | 466 | 380 | 4 | 1 |
| | மொனறாகல | 252 | 164 | 1 | |
| | திருகோணமலை | 205 | 216 | 1 | |

| மாகாணம் | மாவட்டம் | கிடைத்த விண்ணப்பஙகள் | அங்கீகரிக்கப்படட் விண்ணப்பங்கள் | நிராகரி விண்ணப்ப | கண்காணித்த விண்ணப்ப |
|---|---|---|---|---|---|
| கிழக்கு | அம்பாறை | 87 | 137 | 3 | |
| | மட்டக்களப்பு | 94 | 103 | | |
| | வவுனியா | 102 | 97 | | |
| | மன்னார் | 40 | 38 | | |
| வானொலி விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 13.6 | 4,904,703.87 | 2,341,000.00 |
| KITA நிகழ்ச்சித்திட்டம் | | 374,443.11 | 302,455.33 |
| சுற்றுப்புர வளித்தர நிகழ்ச்சித்திட்டம் | 13.7 | 527,241.00 | 296,650.00 |
| நீர்த்தரம் - பாரியளவு | | 374,699.96 | 400,000.00 |
| பிவிதுருய மெதரட்ட நிகழ்ச்சித்திட்டம் | | 887,212.00 | - |
| சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாட்டுக்கான தரவுத்தளம் | | 291,919.02 | - |
| சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் - அமைச்சு | | 115,000.00 | - |
| பிரதான மூன்று நீர்த்தேக்கங்களில் நீர்த்தர மேற்பார்வை | | 75,000.00 | - |
| சமூகமட்ட நீர்த்தர நிகழ்ச்சித்திட்டம் | | 1,378,745.00 | - |
| நீர்த்தர கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | 5,000.00 | - |
| | | 150,000.00 | - |
| **மொத்தம்** | | **54,412,218.54** | **56,928,814.93** |

| குறிப்பு14 | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களின் செலவுகள்** | | | |
| மாலே மாலே பிரகடனம் பிரகடனம் | | 27,453,088.65 | 27,453,088.65 |
| **வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களின் செலவுகள்** | 14.1 | 147,391,382.74 | 155,015,628.07 |
| மனைசார் கழிவுப்பொருள் குறைப்பு கருத்திட்டம் - கம்பஹா | 14.1 | 2,542,104.71 | - |
| பிலாஸ்ரிக் கழிவுப்பொருள் குறைப்பு கருத்திட்டம் | 14.1 | 11,842,418.92 | 13,061,851.38 |
| தெற்காசிய மாநாடு | 14.1 | 3.04 | 3.04 |
| சுற்றாடல் வள தகவல் முறைமை | 14.1 | 20,410,150.58 | 25,694,092.18 |
| வடக்கு கிழக்கு கரையோர கருத்திட்டம் | 14.1 | 52,571,765.10 | 55,528,489.87 |
| வானொலி விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் | 14.1 | 20,559,310.07 | 26,415,093.02 |
| KITA நிகழ்ச்சித்திட்டம் | 14.1 | 3,484,440.31 | 3,487,000.75 |
| சுற்றுப்புர வளித்தர நிகழ்ச்சித்திட்டம் | 14.1 | 1.00 | 731,291.14 |
| நீர்த்தரம் - பாரியளவு | 14.1 | 34,376,606.08 | 33,645,444.64 |
| பிவிதுருய மெதரட்ட நிகழ்ச்சித்திட்டம் | 14.1 | 442,857.51 | 530,647.68 |
| சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாட்டுக்கான தரவுத்தளம் | 14.1 | 3,963,896.22 | 4,448,526.87 |
| **மொத்தம்** | | **325,038,024.93** | **346,011,157.29** |

| குறிப்பு 15 | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **முதலீடுகள்** | | |
| திறைசேரி உண்டியல்கள் | 9,960,000.00 | 9,960,000.00 |
| **மொத்தம்** | | |

| குறிப்பு 16 | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **பொருள் பதிவேடு** | | |
| எழுதுபொருட்களும் அலுவலக தேவைப்பாடும் | 671,160.00 | - |
| நலன்புரி பொருட்கள் | 31,773.00 | - |
| நூல்களும் வெளியீடுகளும் | 60,000.00 | - |
| மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 999,360.00 | - |
| பொது உருப்படிகள் | | - |

| குறிப்பு 16 | 2011 | 2010 |
|---|---|---|
| | 547,300.00 | |
| மின் உபகரணங்கள் | 486,000.00 | - |
| எழுதுபொருட்களும் அலுவலக தேவைப்பாடும் | 648,300.00 | - |
| | 159,943.00 | - |
| எழுதுபொருட்களும் அலுவலக தேவைப்பாடும் | 159,943.00 | - |
| நலன்புரி பொருட்கள் | 72,424.00 | - |
| நூல்களும் வெளியீடுகளும் | 400,000.00 | - |
| மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 94,000.00 | - |
| பொது உருப்படிகள் | | - |
| **மொத்தம்** | **4,573,203.00** | |

| குறிப்பு 17 | 2011 | 2010 |
|---|---|---|
| | **Rs.** | **Rs.** |
| **பொருள் பதிவேடு** | | |
| எழுதுபொருட்களும் அலுவலக தேவைப்பாடும் | 1,646,445.26 | 2,110,110.78 |
| நலன்புரி பொருட்கள் | - | 18,116.08 |
| நூல்களும் வெளியீடுகளும் | 4,163,720.46 | 5,301,992.31 |
| மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 160,608.71 | 123,652.96 |
| பொது உருப்படிகள் | - | 142,915.82 |
| மின் உபகரணங்கள் | 27,855.76 | 36,318.77 |
| **மொத்தம்** | **5,998,630.19** | **7,733,106.72** |

| குறிப்பு 18 | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | **Rs.** | **Rs.** |
| **வியாபார மற்றும் ஏனைய பெறுகைகள்** | | | |
| பல்வேறு கடன்படுநர்கள் | | - | 153,750.00 |
| நானாவித முற்பணங்கள் | 18.1 | 251,762.10 | 296,819.74 |
| கொள்வனவு முற்பணங்கள் | 18.2 | 2,055,802.62 | 360,483.60 |
| இடர்க் கடன்கள் | | 48,224,064.28 | 35,149,202.31 |
| சுனாமி கடன்கள் | 18.3 | 21,111.29 | |

| **குறிப்பு 18** | | **2011** | **2010** |
|---|---|---|---|
| | | | 29,074.09 |
| பண்டிகை கால கடன்கள் | | 747,600.00 | 738,700.00 |
| கிடைக்க வேண்டிய பொருட்கள், சேவைகள் மீதான வரி | | 143,738.62 | 143,738.62 |
| கிடைக்க வேண்டிய வைப்புகள் | 18.4 | 633,515.00 | 642,407.00 |
| மோட்டார் சைக்கிள் காப்புறுதி | | 214,192.13 | 475,901.88 |
| குடும்ப வைத்திய காப்புறுதி | | 1,685,083.20 | 797,282.38 |
| விசேட முற்பணங்கள் | | 605,708.50 | 659,708.50 |
| VAT அறவீடு | | 9,346,724.68 | 11,180,735.40 |
| வருமதி - பிலிசறு கருத்திட்டம் | 18.5 | - | 57,549.75 |
| மோட்டார் வாகனக் கடன் - சாரதிகள் | | - | 2,205,453.65 |
| கிடைக்க வேண்டிய வாடகைக்கட்டணங்கள் - பிலாஸ்ரிக், பிலிசறு கருத்திட்டம் | 18.6 | 907,320.00 | 27,320.00 |
| பிலாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம் கொள்வனவு முற்பணம் | | 459,000.00 | - |
| சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு முற்பணம் | 18.7 | - | 362,423.75 |
| வருமதி - WHT | 18.8 | 157,690.00 | 55,854.00 |
| சில்லறைச் செலவுப் பணம் | | 180,000.00 | 180,000.00 |
| காசு முற்பணம் - GIS | | 90,000.00 | 90,000.00 |
| காசு முற்பணம் - EP செயற்பாட்டிற்கான தரவுத்தளம் | 18.9 | - | 20,000.00 |
| பிலிசறு கருத்திட்டம் வருமதிச் சம்பளம் | 18.10 | 22,920.00 | - |
| வருமதி பரீட்சைக் கட்டணம் - முதலீட்டுச் சபை | 18.11 | - | 278,000.00 |
| வருமதி உரிமக் கட்டணம் - முதலீட்டுச் சபை | 18.12 | - | 150,000.00 |
| சமூகமட்ட நீர்த்தர நிகழ்ச்சித்திட்டம் | 18.13 | 1,854,404.97 | - |
| நீர்த்தர பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் | 18.14 | 26,318.00 | - |
| **மொத்தம்** | | **67,626,955.39** | **54,054,404.67** |

| குறிப்பு 19 | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **முற் கொடுப்பனவுகள்** | | | |
| ஏற்கெனவே செலுத்தப்பட்டவை | 19.1 | 3,410,304.74 | 2,377,536.13 |
| பிலாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ முற்பணம் | | | 1,000,000.00 |
| **மொத்தம்** | | | |

| குறிப்பு 20 | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **பணம்** | | |
| இலங்கை வங்கி, பெலவத்த - பிரதான கணக்கு 0-002937303 | 73,550,089.82 | 66,530,564.96 |
| இலங்கை வங்கி, பெலவத்த - MALE - 0002972309 | 2,722,546.84 | 2,035,726.53 |
| இலங்கை வங்கி, பெலவத்த - DEO - 2937330 | (475,897.17) | 743,268.42 |
| இலங்கை வங்கி, பெலவத்த - 2937341 | 9,964,045.75 | 4,294,925.16 |
| இலங்கை வங்கி, தாபனக் கிளை - 1608 | 1,534,205.70 | 961,417.99 |
| இலங்கை வங்கி, பெலவத்த, பொலிசெஸ் - 2937361 | - | 544,903.71 |
| இலங்கை வங்கி, தெற்காசிய மாநாடு - 0000-869-0834 | - | 23,875.00 |
| **மொத்தம்** | | **75,134,681.77** |

| குறிப்பு 21 | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **செலுத்த வேண்டியவை** | | | |
| செலுத்த வேண்டிய வைப்புகள் | 21.1 | 53,000.00 | 53,000.00 |
| தேசிய முகாம் | | 8,000.00 | 8,000.00 |
| தலைவரின் நிதியம் | | 8,218.66 | 8,218.66 |
| சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு கருத்திட்டம் | 21.2 | 32,936,421.45 | 26,930,990.17 |
| MHP கருத்திட்டம் | 21.3 | 86,518.00 | 86,518.00 |
| மீளச் செலுத்த வேண்டிய கேள்விமனு வைப்புகள் | | 1,099,640.97 | 913,185.65 |
| மருத்துவ காப்புறுதி உரித்து | | 222,318.98 | 186,775.56 |
| செலுத்த வேண்டிய மோட்டார் வாகன உரித்து | | - | 63,578.00 |
| DEO மோட்டார் வாகன கடன் அறவிடல் | | - | 7,067,175.21 |
| | | | |
| மேல் கொத்தமலை நீர்த்தரம் | | 728,146.75 | 697,097.75 |

| | | |
|---|---|---|
| பாசல் உடன்படிக்கை | - | 146,365.45 |
| மீட்கப்பட்ட காணிகளில் நிர்மாணங்கள் | 156,584.00 | 156,584.00 |
| செலுத்த வேண்டிய முத்திரை தீர்வை | 907,887.05 | 742,596.65 |
| புதிய நலன்புரித் திட்டம் | 351,337.25 | 436,819.21 |
| ஏற்கெனவே பெற்ற வட்டி (நிலையான வைப்பு) | 276,991.11 | 223,103.41 |
| நிறுத்தி வைக்கப்பட்ட தொகை | - | 385,000.00 |
| மீளச் செலுத்த வேண்டிய கேள்விமனு வைப்புகள் பிலிசறு | 32,000.00 | 8,000.00 |
| அறவிடல் - புகைப்படக் கருவி | 63,851.00 | - |
| பாசல் உடன்படிக்கை அமுலாக்கம் | 174,365.45 | - |
| திண்ம கழிவு முகாமைத்துவ ஒதுக்கீடு (DO) | 3,000.00 | - |
| **மொத்தம்** | **37,108,280.67** | **38,113,007.72** |

| குறிப்பு 22 | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **அட்டுறு செலவுகள்** | | |
| சம்பளங்களும் வேதனாதிகளும் | 13,144,268.84 | 12,385,677.71 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 2,951,866.47 | 2,621,620.73 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 591,281.61 | 524,324.19 |
| மேலதிகக் கொடுப்பனவு | 517,476.03 | 386,251.33 |
| மிகையூதியக் கொடுப்பனவு | 681,939.75 | 150.00 |
| வெளிநாட்டு பயணங்கள் | 1,790,481.13 | 480,044.05 |
| வெளிநாட்டுப் பயணங்கள் | 27,767.22 | 12,000.00 |
| நலன்புரிச் செலவுகள் | 85,749.00 | 87,754.66 |
| கட்டட பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 276,757.59 | 203,129.29 |
| அலுவலக உபகரண பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 224,716.50 | 212,607.36 |
| மோட்டார் வாகன பழுதுபார்ப்பு | 664,683.11 | 320,459.78 |
| பாதுகாப்புச் சேவைக்கட்டணங்கள் | 1,375,049.39 | 1,845,530.65 |
| மின் கட்டணம் | 735,541.50 | 618,440.48 |
| எரிபொருள் மற்றும் எழுது கருவிகள் | 1,292,478.67 | 1,053,913.85 |

| குறிப்பு 22 | 2011 | 2010 |
|---|---|---|
| எழுது கருவிகள் | 139,108.34 | 331,751.47 |
| தபால் கட்டணம் | 23,631.00 | 47,453.00 |
| தொலைபேசிக் கட்டணம் | 408,061.64 | 594,297.21 |
| நிருவாக பொதுப்பணி ஆகுசெலவு | 589,807.00 | 466,000.00 |
| பத்திரிகை | 2,150.00 | 16,370.00 |
| நீர் வழங்கல் | 35,692.94 | 29,459.62 |
| சட்டச் செலவுகள் | 213,340.00 | 360.00 |
| நானாவித செலவுகள் | - | 9,204.00 |
| சேர் பெறுமதி வரி (அட்டுறு செலுவுக்கான) VAT | 2,758,666.15 | 1,036,302.49 |
| காலாண்டு சஞ்சிகை வெளியீடு | 115,000.00 | 91,000.00 |
| அலுவலக தளபாடம் | 1,011,987.00 | 791,227.00 |
| நீதவான் நிருவாகச் செலவுகள் | 109,500.00 | 131,500.00 |
| சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு வழிகாட்டி | - | 4,000.00 |
| அய்வுக்கூட பொருள் கொள்வனவு | 264,266.50 | 324,670.63 |
| சுற்றுப்புற வளித்தரக் கண்காணிப்பு | 327,174.40 | 23,876.96 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,400,000.00 | 700,000.00 |
| அலுவலக கட்டட வாடகை | 89,780.00 | 164,592.50 |
| பிலாஸ்ரிக் செலவுகள் | - | 62,585.27 |
| பிலாஸ்ரிக் செலவுகள் | 173,699.18 | 35,000.00 |
| தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 830,288.85 | 1,344,846.44 |
| முத்திரை வரி | 4,130,685.14 | 3,002,498.16 |
| பாடசாலை நிகழ்ச்சித்திட்ட நிதி | 2,469.09 | 25,330.04 |
| தேசக்கட்டுமான வரி | 801,425.90 | 765,390.80 |
| பிராந்திய அலுவலக நிர்மாணம் | - | 4,000.00 |
| கட்டட நிர்மாணம் | 404,642.02 | 210,878.97 |
| இடர்க் கடன் - முத்திரை வரி | 1,023,618.93 | - |
| பொதுக் கட்டணங்கள் | 148,677.48 | 935,325.99 |

| குறிப்பு 22 | 2011 | 2010 |
|---|---|---|
| பொருளாதார சேவைக் கட்டணங்கள் | 1,725.00 | 800.00 |
| GIS கருத்திட்டம் | - | 10,500.00 |
| சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை பலப்படுத்தல் | - | 285,524.40 |
| நுசுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் வெள்ளி விழா | 9,917.00 | 73,000.00 |
| ீEPP பொருள் நிகழ்ச்சித்திட்டம் | - | 78,895.00 |
| பொருளாதார சேவைக் கட்டணங்கள் | - | 3,600.00 |
| ீதிட்ட மற்றும் தொழிற்பாட்டு பிரிவு | - | 17,352.62 |
| ஆய்வுக்கூட உபகரண பராமரிப்பு | 437,987.84 | 105,525.00 |
| மூன்று பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்த்தரக் கண்காணிப்பு | 170,516.00 | 5,992.00 |
| சமூகமட்ட நீர்த்தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | - | 269,000.00 |
| நீர்த்தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 195,360.00 | 4,372.50 |
| ீதிட்ட மற்றும் தொழிற்பாட்டு பிரிவு | 428,118.14 | 300,000.00 |
| ஆய்வுக்கூட உபகரண பராமரிப்பு | 182,338.91 | 368,818.91 |
| ீதிட்ட மற்றும் தொழிற்பாட்டு பிரிவு | 184,589.38 | 302,455.33 |
| ஆய்வுக்கூட உபகரண பராமரிப்பு | 250.00 | 112,140.00 |
| மூன்று பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்த்தரக் கண்காணிப்பு | 13,884.25 | 400,000.00 |
| சமூகமட்ட நீர்த்தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 5,300.00 | - |
| நீர்த்தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 225.00 | - |
| ீதிட்ட மற்றும் தொழிற்பாட்டு பிரிவு | 150,000.00 | - |
| ஆய்வுக்கூட உபகரண பராமரிப்பு | 163,000.00 | - |
| மூன்று பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்த்தரக் கண்காணிப்பு | 941,224.00 | - |
| ீதிட்ட மற்றும் தொழிற்பாட்டு பிரிவு | 71,850.75 | - |
| ஆய்வுக்கூட உபகரண பராமரிப்பு | 760,880.00 | - |
| மூன்று பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்த்தரக் கண்காணிப்பு | 843,300.00 | - |
| சமூகமட்ட நீர்த்தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | 1,200.00 | - |
| நீர்த்தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 33,875.00 | - |
| **மொத்தம்** | **43,959,269.64** | **34,237,800.39** |

| குறிப்பு 23 | 2011 | 2010 |
|---|---|---|
| **மீண்டெழும் அன்பளிப்புகள்** | **Rs.** | **Rs.** |
| IEMP - மீண்டெழும் அன்பளிப்புகள் | - | 745,466.55 |
| சுனாமி அன்பளிப்புகள் | - | 133,006.26 |
| Dutch கருத்திட்ட வருமதிகள் | - | 2,447,673.06 |
| ACAIR கருத்திட்டம் அவுஸ்திரேலிய நிதி உதவி | - | 370,388.68 |
| கொழும்பு கடல் கரை - நகர அபிவிருத்தி அதிகாரசபை | - | 490,000.00 |
| APPLLE கருத்திட்டம் | - | 65,246.08 |
| முன்னோடி கருத்திட்ட அளவீடு | - | 156,300.00 |
| மாலே உடன்படிக்கை | 3,958,050.38 | 3,271,230.07 |
| UNITAR 234A | - | 246,547.86 |
| UNITAR 234B | - | 147,231.04 |
| UNITAR 234C | - | 201,574.67 |
| UNITAR 234D | - | 764,220.71 |
| UNITAR 234E | - | 179,027.55 |
| UNITAR 234F | - | 178,855.74 |
| UNITAR 234G | - | 164,406.41 |
| UNITAR 234H | - | 125,623.00 |
| 743 A - நீர் மாதிரிகள்- தண்டுகம்ஓயா | - | 197,518.51 |
| 745 - நீர்த்தரம் - காலி முகத்திடல் | - | 18,914.33 |
| 745A - நுவர வாவி நீர்த்தரம் | - | 78,800.00 |
| 746 - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை | - | 833,340.91 |
| EA1P நீர்த்தரம் - களனி கங்கை | - | 30,000.00 |
| இரத்தினக்கல் அகழ்வுக் கைத்தொழில் | - | 400.00 |
| மனைசார் கழிவுப்பொருள் குறைப்பு கருத்திட்டம் - கம்பஹா | - | 952,974.41 |
| பிலாஸ்ரிக் கழிவுப்பொருள் அன்பளிப்புகள | 14,920,878.42 | 14,286,393.46 |
| இலத்திரனியல் கழிவுப்பொருள் அன்பளிப்புகள் | - | 11,690.13 |

| | | |
|---|---|---|
| UNEP அன்பளிப்புகள் | - | 165,680.50 |
| சுனாமிக்குப் பின்னரான அன்பளிப்புகள் | - | 185,017.27 |
| பூர்வாங்க நகர சேவைகள் கருத்திட்டம் | - | 77,662.50 |
| FRMP மீண்டெழும் அன்பளிப்புகள் | - | 274,998.80 |
| ஆய்வுக்கூட ஆலொசனைச் சேவைக் கட்டணங்கள் | - | 160,000.00 |
| GIS கருத்திட்டம் | 197,859.63 | 443,815.63 |
| பிலிசறு சுட்டுப்பசளை கொள்கலன் | - | 1,891,651.80 |
| தெற்காசிய மாநாடு | - | 17,009.32 |
| "பிலிசறு கருத்திட்ட உகரணங்களை மீளப்பெறல் | - | 100,000.00 |
| நீர்த்தர மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டம் | - | 44,354.16 |
| சமூகமட்ட நீர்த்தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | - | 50,000.00 |
| மூனறு பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்த்தரம் | 261,391.07 | 121,392.98 |
| பாரியளவிலான நீர்த்தர அனபளிப்புகள் | 659,936.65 | 659,936.65 |
| KITA அன்பளிப்புகள் | 105,822.02 | 248,123.45 |
| ஈரநில தினத் தின அளிப்புகள் | - | 89,886.32 |
| "பிலிசறு கருத்திட்ட உகரணங்களை மீளப்பெறல் | 425,300.04 | 300,000.00 |
| பாரியளவிலான நீர்த்தர அனபளிப்புகள் | 526,109.00 | 1,053,350.00 |
| அன்பளிப்புகள் | 290,619.84 | 472,432.45 |
| ஈரநில தினத் தின அளிப்புகள் | 5,048,080.98 | - |
| "பிலிசறு கருத்திட்ட உகரணங்களை மீளப்பெறல் | 127,788.00 | - |
| **மொத்தம்** | **26,521,836.03** | **32,452,141.26** |

| **குறிப்பு 24** | **2011** | **2010** |
|---|---|---|
| | **Rs.** | **Rs.** |
| பணிக்கொடை நிதியேற்பாடு<br>- | 110,125,260.56 | 96,123,022.50 |
| **மொத்தம்** | **110,125,260.56** | **96,123,022.50** |

| குறிப்பு 25 | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| **மூலதன அன்பளிப்புகள்** | | |
| UNITAR மூலதன அன்பளிப்புகள் | 165,155.53 | 193,064.57 |
| FRMP மூலதன அன்பளிப்புகள் | 279,226.82 | 326,412.36 |
| Dutch மூலதன அன்பளிப்புகள் | 21,960,691.05 | 25,671,749.15 |
| EA1P அன்பளிப்புகள் | 4,405,769.87 | 5,150,285.05 |
| மூலதன அளிப்புகள் - திறைசேரி நிதியம் | 88,490,418.38 | 79,713,671.63 |
| USAID | 81,187.35 | 94,906.91 |
| நெதர்லாந்து அன்பளிப்புகள் | 480,409.07 | 561,591.67 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,163,205.11 | 1,359,770.95 |
| UNDP | 545,643.50 | 328,068.44 |
| WHO | 1,322,950.10 | 1,546,510.67 |
| UNICEF | 51,353.37 | 60,031.39 |
| APPELL கருத்திட்டம் | 38,249.40 | 44,713.03 |
| மாலிகாவத்த அபிவிருத்தி நிதியம் | 20,951.30 | 24,491.79 |
| NAREEP | 154,830.20 | 180,994.40 |
| UNIDO (IRRP) | 1,213,390.85 | 1,418,437.40 |
| உலக வங்கி | 1,506,047.48 | 1,760,549.02 |
| NORAD | 1,458,658.30 | 1,705,151.71 |
| 100 மில்லியன் மரக்கன்றுகள் கருத்திட்டம் | 206,593.52 | 241,505.02 |
| Sacap மையச் செயற்பாட்டு நிதியம் | 56,244.64 | 65,749.22 |
| பாரிய கொழும்பு வெள்ள நிகழ்ச்சித்திட்ட பங்களிப்பு | 87,471.74 | 102,253.27 |
| கைத்தொழில் மதிப்பீடுகள் | 40,707.45 | 47,586.46 |
| வடமேல் மாகாண (ஆசிய அபிவிருத்தி வங்கி) கருத்திட்டம் | 9,231.97 | 10,792.05 |
| NAREPP உள்ளூராட்சி நிறுவனம் | 22,763.60 | 26,610.34 |
| சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் | 3,928.36 | 4,592.20 |
| வெளிநாட்டு உதவி | 156,296.53 | 182,708.52 |
| மின்னஞ்சல் வசதிகளை விரிவாக்கல் | 5,921.36 | 6,921.99 |

| | | |
|---|---|---|
| IS EIA கருத்திட்டம் | 29,436.59 | 34,410.97 |
| நூல் நிலைய புத்தக அளிப்புகள் | 414,694.00 | 431,907.88 |
| NAREPP உள்ளுராட்சி நிறுவனம் | 265,215.08 | 310,032.82 |
| சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் | 91,970,825.17 | 107,512,643.73 |
| IRMP | 672,748.95 | 786,434.37 |
| UNEP | 400,687.59 | 468,398.34 |
| இலங்கை புகையிலைக் கம்பனி | 13,350.18 | 15,606.18 |
| மோட்டார் வாகன அன்பளிப்புகள் | 235,648.28 | 275,469.63 |
| UNEP மூலதன் அன்பளிப்புகள் | 5,998.33 | 7,011.97 |
| E- கழிவு மூலதன் அன்பளிப்புகள் | 53,079.91 | 62,049.69 |
| பிலாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ மூலதன அளிப்பு | 4,180,290.85 | 3,431,455.36 |
| GIS மூலதன் அன்பளிப்புகள் | 863,448.48 | 1,009,359.53 |
| மனைசார் கழிவுப்பொருள் குறைப்பு கருத்திட்டம் - கம்பஹா ீசுனாமிக்குப் பின்னரான மூலதன அளிப்புகள் | 266,667.48 | 311,730.66 |
| சொபா கள நிலைய அன்பளிப்புகள் | 120,160.91 | 140,466.47 |
| | 282,200.36 | 329,888.38 |
| நூற்றாண்டு அளிப்புகள் | 1,034,198.69 | 1,208,964.20 |
| இடைக்கால குழு | 16,215,500.04 | 18,955,699.00 |
| சுற்றாடல் மாசுச் செயற்பாட்டிற்கான தரவுத்தளம் அமைப்பு | 1,339,031.24 | 1,565,309.31 |
| தெற்காசிய நிகழ்ச்சித்திட்டம் | 79,324.12 | 92,728.82 |
| மனைசார் கழிவுப்பொருள் குறைப்பு கருத்திட்டம் - கம்பஹா | 60,000.00 | - |
| ீசுனாமிக்குப் பின்னரான மூலதன அளிப்புகள் சொபா கள நிலைய அன்பளிப்புகள் | 118,200.00 | - |
| **மொத்தம்** | **242,548,003.10** | **257,778,686.52** |

| | | | |
|---|---|---|---|
| **குறிப்பு 10.1** | | **2011** | **2010** |
| | சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பணர்வ செலவீனம | **Rs.** | **Rs.** |
| 307 | சுற்றாடல் செய்தி மடல் | 222,000.00 | 478,554.97 |
| 319.01 | கல்வியல் பொருட்களை அபிவிருத்தி செய்தல் | 234,980.00 | - |
| 319.02 | நாடளாவிய ரீதியில் சுற்றாடல் நிகழ்ச்சித் | | - |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களை உருவாக்கல் | 381,095.00 | |
| 319.03 | ஏக்கோ கழகம் உருவாக்குதல் | 635,360.00 | - |
| 319.04 | இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் | 470,000.00 | - |
| 319.05 | சுற்றாடலுடன் நட்புறவான பொருட்கள் உற்பத்தி செய்தல் | 763,449.00 | - |
| 319.06 | செயன்முறை நிகழ்ச்சி திட்டங்களை இணைத்தக் கொள்ளல் | 613,491.75 | - |
| 319.07 | விழ்ப்புணர்வு நிகழ்ச்சித்திடடம் | 49,912.00 | - |
| 319.08 | விழ்ப்புணர்வு நிகழ்ச்சித்திடடம் | 204,880.00 | - |
| 319.09 | விழ்ப்புணர்வு நிகழ்ச்சித்திடடம் | 251,430.75 | - |
| 319.10 | கட்புல பிரிவு அபிவிருத்தி | 50,271.00 | - |
| 317.1 | உலக சுற்றாடல் தினம் | - | 1,659,235.94 |
| 317.2 | NGO அரச நிறுவனம் என்பனவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டம் | - | 369,809.19 |
| 317.3 | இளைனர் கழக அபிவிருத்தி | - | 71,937.00 |
| 317.4 | ஏக்கோ கழகம் உருவாக்குதல் | - | 877,355.00 |
| 317.6 | பொருக்காட்சி உருவாக்குதல | - | 517,990.00 |
| 317.7&8 | இயற்கை கழ மையம் உருவாக்குதல | - | 1,167,231.28 |
| 317.9 | விழ்ப்புணர்வு நிகழ்ச்சித்திடடம் | - | 59,127.00 |
| | உலக சுற்றாடல் தினம் | - | 136,000.00 |
| | மொத்தம் | **3,876,869.50** | **5,337,240.38** |

# 15 பிலிசறு தேசிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டம்

## 15.1 அறிமுகம்

முறையற்ற திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவமானது இலங்கையில் பாரியதும் பிரதானமானதுமான சுற்றாடல் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. கழிவுச் சேகரிப்பு, கழிவுகள் போக்குவரத்து, இடையீட்டு பரிகார வழிமுறை மற்றும் பொருத்தமான இறுதி வெளியேற்றல் வழிமுறை இல்லாமை இலங்கையில் திணமக் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரச்சனையை மேலும் தீவிரமாக்குவதற்கு செல்வாக்கு செலுத்தியுள்ளது.இலங்கையில் தற்போது காணப்படும் முறையற்ற கழிவு வெளியேற்றல் செயற்பாடுகள் மூலம் பொது மக்களிடையே பல்வேறு சுற்றாடல் சார்ந்த பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதுடன் அவர்களை துன்பத்திலும் ஆழ்த்தியுள்ளது. இச்செயற்பாடுகளின் இறுதி பேறுபேறானது சமூகத்தை பல்வேறு சுகாதார, சமூக, பொருளாதார மற்றும் கலாசார நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளதுடன் அது புதிய பிரச்சனைகளை தோற்றுவிப்பதற்கு ஏதுவாகியுள்ளது.

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் கழிவுகளை சேகரிப்பதற்கும் வெளியேற்றுவதற்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமையினால் சுற்றாடல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களிலும் எவ்வித கட்டுபாடுமின்றி கழிவுகள் வெளியேற்றப்படுவதும் வீசப்படுவதுமான நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அநேகமான பிரதேசங்களில் குடிமனைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேற்றப்படும் அநேகமான கழிவுகளை இறுதியாக வெளியேற்றுவதற்கான முறையான வசதிகள் இல்லை. இவ்வாறு முறையற்ற விதத்தில் வெளியேற்றப்படும் கழிவுகள் மூலம் கால்வாய்களில் நீர் வழிந்தோடுவதில் இடையூறுகள் ஏற்படுவதுடன், நோய் காவிகள் அதாவது ஈ, நுளம்புகள் மற்றும் எலிகளின் பெருக்கத்துக்கும் வழிவகுக்கின்றன. இயற்கையான இடங்களில் இடம்பெறுகின்ற திறந்த கழிவு வெளியேற்றல் மூலம் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் அசுத்தப்படுத்தப்படுகின்ற அதேவேளை, அனுமதியற்ற முறையில் காணிகளை கைப்பற்றுவதற்கும் அது வாய்ப்பாகி விடுகின்றது. குறைந்த வெப்ப நிலையின் கீழ் திறந்த வெளிகளில் கழிவுகளை எரித்துவிடும் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலம் சூழல் மாசடைதல் மற்றும் பல்வேறு சுகாதார பிரச்சனைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

ஏற்புடைய சட்டங்கள் மூலம் இலங்கையில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த பொறுப்பும் உள்ளூராட்சி நிறுவனங்களையே சார்கின்றது. மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர சபை மற்றும் பிரதேச சபை கட்டளைச் சட்டங்கள் மூலம் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கு ஏற்புடைய முழுப் பொறுப்பும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அநேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது கொள்கை வகுப்பின் போது அதிக கவனத்தை பௌதீக வளங்களின் அபிவிருத்தி மீது செலுத்தியுள்ள போதிலும், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் ஒப்பீட்டளவில் குறைந்து காணப்படுகின்றன.

### 15.2 பிலிசறு கருத்திட்டம் தாபிக்கப்படல்

இலங்கையில் அநேகமான பிரதேசங்களில் உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவு முகாமைத்துவம் மீது ஒப்பீட்டளவில் குறைந்த ஆர்வத்தை கொண்டுள்ளமையினால் பொது மக்களிடையே திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதுடன், கடந்த சில வருடங்களாக உள்ளூராட்சி நிறுவனங்கள் இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது. இக்காரணங்களினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எதிராக மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சுக்கு தொடர்ச்சியான மக்கள் முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன.

இக்காரணங்களினால் மேற்சொன்ன நெருக்கடி தொடர்பாக தீர்வு காண்பது உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்பு என்ற போதிலும் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர் கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சினால் 'பிலிசறு' என்ற பெயரில் தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சினதும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினதும் வழிக்காட்டல்களின் கீழ் இதர அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் துறை சார் நிபுணர்களின் பங்கேற்புடன் தாபிக்கப்பட்டது..

பிலிசறு என்ற சிங்கள சொல்லின் பொருள் மீண்டும் வளமாக்கிக் கொள்வது என்பதாகும். அதுவே இவ்வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமுமாகும். இவ்வேலைத்திட்டத்தின் எண்ணக்கருவானது, கழிவுகளாக அப்புறப்படுத்தப்படுகின்ற பொருட்களை அதிக பட்ச மீள் பயன்பாட்டுக்குட்படுத்துவதும் இதர கழிவுகளை சுற்றாடல் சார்பு முறையில் அகற்றுவதுமாகும்.

இப்பிரச்சனை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தின் அடிப்படையில் தேசிய ரீதியாக ஒருங்கிணைப்பொன்றை வழங்கும் பொருட்டு சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சினால் பிலிசறு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்து, அதற்காக 2007யூலை மாதம் 25 ஆம் திகதியன்று கொள்கை ரீதியான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

இவ்வேலைத்திட்டத்தில் பின்வரும் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- தேசிய கழிவுப் பொருள் முகாமைத்துவ கொள்கையொன்றை வகுத்தல்
- கழிவு முகாமைத்துவத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினருக்கு அறிவூட்டல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்
- உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுகின்ற கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டங்களை மேம்படுத்துவதற்கும் புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் தேவையான தொழிநுட்ப உதவிகளையும் இதர வளங்களையும் பெற்றுக் கொடுத்தல்
- வளப் பரிமாற்றம் மற்றும் அதிக பட்ச பயனைப் பெறுவதன் மூலம் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டத்துக்கு வசதி செய்து கொடுத்தல்
- கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்
- நீண்ட கால செயற்பாடாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் ஏற்புடைய பணிகளை உரிய முறையில் செயற்படுத்தத் தவறும் பட்சத்தில், அதற்கு எதிராக நட்ட நடவடிக்கை மேற்கொள்ளல்

மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணைந்து பிலிசறு தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தினால் மாவட்டத்தினுள் திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மொனறாகலை மாவட்டத்தினுள் 10 உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளன. உள்ளூராட்சி , மாகாண சபைகள் அமைச்சின் கீழான திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையங்களினால் 05 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. அவை, புத்தளம் பிரதேச சபை, மொணறாகலை பிரதேச சபை, வெல்லவாய பிரதேச சபை, கதிர்காமம் பிரதேச சபை மற்றும் மெதகம பிரதேச சபைகளாகும்.

## 15.3 தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவக் கொள்கை

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சானது ‘பிலிசறு’திட்டத்தின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக தேசிய ரீதியான கொள்கையொன்றை திண்மக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக இயற்றுவதற்கான நடைமுறைகளை ஐப்பசி மாதம் 2007 இல் மேற்கொண்டதுடன் புதிய தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டங்களும் இயற்றப்பட்டது. தற்போது அக் கொள்கை திட்டங்கள் செயல் வடிவத்திற்கு மாற்றல் பெற வேண்டிய நிலையில் உள்ளன. இதன் மூலம் உரிய பிரதேசங்களில் முழுமையான ஈடுபாட்டையும் உள்ளூராட்சி அதிகாரசபையின் பங்களிப்பையும் பெற்று கொள்ளமுடியும். இக் கொள்கை திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதை ‘பிலிசறு’ திட்டம் ஒரு சவாலாக ஏற்று கொண்டுள்ளது.

## 15.4 குறிக்கோள்கள்

‘பிலிசறு’திட்டத்தின் கீழ் 5 பிரதான குறிக்கோள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைகளை அபிவிருத்தி செய்தல்.
- திண்மக்கழிவு முகாமைத்துவ தேசிய செயற்றிட்டத்தை அபிவிருத்தி செய்தல்.

- பயிற்சி மற்றும் திறமைக் கட்டமைப்பு உள்ளடங்கிய திண்மக்கழிவு முகாமைத்துவ கல்வி மற்றும் விழிப்புணர்வை சகல பங்குதாரர்களுக்கும் வழங்கல்.
- திண்மக்கழிவு முகாமைத்துவதிட்டங்கள்அல்லதுநிகழ்வுகளை செயற்படுத்த உள்ளூராட்சி அதிகாரசபைக்கான அதிகாரங்களை எளிதாக்கல்.
- திறமையான சட்ட அமுலாக்கலை வலுப்படுத்த சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

இந்த நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் போது, ஏற்கனவே திண்மக்கழிவு முகாமைத்துவம்தொடர்பானபிரச்சனைகள், பங்குதாராகளால் எதிர்கொள்ளப்பட்டவைமற்றும் நாட்டினுடைய ஒட்டு மொத்த திண்மக்கழிவு முகாமைத்துவ நடவடிக்கை என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக இடைநிலை செயற்பாடுகள் மற்றும் சுற்றாடலுக்கு உகந்த எஞ்சிய கழிவு மீதிகளை வெளியகற்றல் தொடர்பான பிரச்சனைகளை வலியுறுத்தல்.

## 15.5 எண்ணக்கரு

திண்மக்கழிவானது வீட்டுக்கழிவு வர்த்தக கழிவுகள், சந்தை கழிவுகள், நிறுவன கழிவுகள் மற்றும் சில தொழிற்சாலை கழிவுகளையும் உள்ளடக்குவதோடு மட்டுமல்லாமல் உள்ளூராட்சி அதிகாரசபைக்கு உரித்தான பொது இடங்களில் சேரும் கழிவுகளையும் உள்ளடக்குகிறது. ‘பிலிசறு’திட்டத்தின் எண்ணக்கருவானது பொதுவாக பின்வரும் பிரதான திட்டங்களை கொண்டுள்ளது.

**i. உள்ளூராட்சி அதிகாரசபையின் திண்மக்கழிவகற்றல் தொடர்பான தகவல்களை சேகரித்தல்.**
**ii.**

தற்போதைய திண்மக்கழிவகற்றல் முறைகள், திட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபையினால் கைவிடப்பட்ட திட்டங்கள், கிடைக்க கூடியதாகவுள்ள வளங்கள் போன்ற தகவல்கள் திட்டமிடல் நோக்கத்திற்காக சேகரிக்கப்பட்டது. இத் தகவல் சேகரிப்பின் போது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பிரிவு அதிகாரிகள் இன் உதவியானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வலையமைப்பினூடு பெற்றுக்கொள்ளப்படும்.

### iii. திட்ட முன்மொழிவு மதிப்பீடு

உள்ளூராட்சி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட முன்மொழிவுகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தேவையான அனுசரனை வழங்கப்படும். முறையான மதிப்பீட்டு முறையுடன் வேறுபட்ட தொழினுட்ப வல்லுனர்களின் உதவியானது திட்டத்தின் வெற்றிகரமான முன்மொழிவுக்காக பெற்றுக்கொள்ளப்படும்.

### iv. கழிவு மீள் சுழற்சி வங்கித் திட்டத்தின் நோக்கம்

‘பிலிசறு’திட்டமானது“சணச” அபிவிருத்தி வங்கியுடன் கழிவு வங்கியொன்றை உருவாக்கிக் கொள்வதற்காக இணக்கப்பாடு ஒன்றை உருவாக்கியது. இவ் வங்கி ஆனது மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுகள் குறிப்பாக பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவை வாடிக்கையாளர்களிடம் இருந்து சேகரித்துக் கொண்டு கையளிக்கப்பட்ட கழிவுகளுக்கு ஈடான குறித்த தொகை வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். சேகரிக்கப்பட்ட கழிவானது வங்கியால் கிரமமாக மீள்சுழற்சியாளர்களுக்கு விற்பனை செய்யப்படும். இதன்போது கிடைக்கும் பணத்தால் வாடிக்கையாளர்களுக்கு செலுத்திய பணம் ஈடுசெய்யப்படும். அத்துடன் பெறப்படும் சிறிதளவு இலாபம் வங்கியின் செலவீனங்களுக்கு பயன்படுத்தப்படும். இது ‘பிலிசறு’திட்டத்தினால் ‘சணச’வங்கியுடன் இணைந்துபுதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நல்ல திட்டமாகும்

**v. கழிவுகளை சேகரிப்பதற்கான நிலையங்களை நிர்ணயித்தல் மறறும் நிறுவுதல்**

**vi. தொழில்நுட்ப அனுசரனை, நிறுவன உறுதிப்படுத்தல் மற்றும் கொள்ளளவுக் கட்டுமானம்.**

**vii. உலோகம், பிளாத்திக்கு, கண்ணாடி மற்றும் கடதாசிக் கழிவுகளுக்கான சேகரிப்பு வலையமைப்பை நிர்ணயிப்பதன் மூலம் மீள்சுழற்சியை உறுதிப்படுத்தல்.**

உலோகம் , பிளாத்திக்கு, கண்ணாடி மற்றும் கடதாசிக் கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய முதன்மைப்பாடான கழிவுகளாகும். தற்காலத்தில் அதிகரித்து வரும் தனியார் நிறவனங்களால் பொலித்தீன் மற்றும் கடதாசிகளை சேகரிப்பதற்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.
'பிலிசறு'திட்டத்தின்பிரதான செயற்பாடுகளில் கடதாசி மற்றும் பிளாத்திக்கு கழிவுகளை சேகரிப்பதற்கான முறையான வலையமைப்பை உருவாக்குதலும் ஒன்றாகும். விசேடமாக கல்வி மற்றும் கருத்தரங்குகள் பலவும் பாடசாலைகள் சமூக நிறுவனங்கள் மகளிர் மன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் போன்றவற்றில் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதும் ஊக்குவிக்கப்படுகின்றது.

**viii. உள்ளூராட்சி அதிகார சபை மட்டத்தில் கூட்டு பசளைக் கூட உருவாக்கம்**

திறந்த நிலங்களில் மற்றும் நீர் நிலைகளில் கொட்டப்படும் திண்மக்கழிவுகளால் சூழலுக்கு ஏற்படும் தீங்குகளை பிரச்சனைகளை நீக்க அறிவு பூர்வமான ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நியாயமான தீர்வு ஒன்றை காணும் முயற்சியாக, 'பிலிசறு' திட்டமானது திண்மக்கழிவு முகாமைத்துவ தேசிய குழுவின் மூலம் பொருத்தமான தொழினுட்பங்கள் மற்றும் தொழினுட்ப வல்லுனர் குழுக்களின் நிபுணத்துவ அறிவை பயன்படுத்தி கூட்டு பசளைக்கூடங்கள் நிறுவப்பட்டதுடன் ஒரு சூழல் பாதுகாப்புடன் கூடிய கழிவு அகற்றல் வசதிகளை ஏற்படுத்துவதற்கு உதவ முன்வந்தது.

**ix. எஞ்சிய மீதிகளுக்கான குறைந்த செலவில் நிர்மாணிக்கப்படும் கழிவு நிரப்பும் நில கட்டுமாண பணி**

இறுதி கழிவகற்றலுக்கான குப்பைநிரப்பும் நில வடிவமைப்பின் போது அந்த இடத்தின் சுற்றுச்சூழல் ஒலி கொள்கையானது கருத்தில் கொள்ளப்படும். இந்த வடிவமைப்பானது கழிவுகளில் இருந்து வெளியேறும் நீர் மற்றும் வாயு கட்டுப்பாடு, தினசரி வேலை செய்யப்பட்ட பகுதிகளை மூடுதல், வடிகால் அமைப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதோடு இதன் மூலம் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுதலை தடுப்பதாகும்.'பிலிசறு' திட்டமானது உள்ளூராட்சி அதிகாரசபைகளின் பயன்பாட்டிற்கென கொத்தணி முறையில் எஞ்சிய கழிவு கொட்டுவதற்கான பல குப்பை நிரப்பும் நில வடிவமைப்புகளை நிறுவ திட்டமிட்டுள்ளது.

**x. வீடுகளில் உரமாக்கல் செயற்பாட்டை ஊக்குவித்தல்**

வீட்டு உரமாக்கல் செயற்பாடானது வழமையாக சமையலறை மற்றும் தோட்டத்தில் இருந்து பெறப்படும் சிறு தொகுதி சேதன பொருட்களை உள்ளடக்கியதாகும். திறந்த குவியல்களை போன்றல்லாது வெப்பம் மற்றும் ஈரப்பதன் இழப்பை தடுப்பதற்காக பிளாத்திக்கு பாத்திரம் அல்லது ஒரு வெட்டப்பட்ட குழி பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் சிறிய அளவான வெப்பம் மற்றும் ஈரப்பதன் இழப்பே அனுமதிக்கப்படுகிறது. ஒரு குடியிருப்பில் உள்ள கொள்கலன் ஆனது சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்பது விரும்பத்தக்கதுடன் நன்மை பயக்கக்கூடியதும் ஆகும். எனவே 'பிலிசறு'திட்டமானது கொளகலன்களை உள்ளூராட்சி அதிகார சபையூடாக மானிய விலையில் வழங்குவதன் ஊடாக வீட்டிலே உரம் தயாரித்தல் செயற்பாட்டை ஊக்குவிக்கிறது.

**xi. உள்ளூராட்சி அதிகார சபைகளை கண்காணித்தல் மற்றும் முறையற்ற திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல்**

'பிலிசறு' திட்டத்தின் இறுதி செயற்பாடானது சரியான முறையில் திண்ம கழிவு முகாமைத்துவ திட்டத்தை நடைமுறைப்படுத்தாதஉள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாகும். வழமையாக உள்ளூராட்சி அதிகார சபைகளால் அமுல் படுத்தப்படும் மதிப்பீடு மற்றும்திண்ம கழிவு முகாமைத்துவ நிகழ்வுகளை மதிப்பீடுவதற்கான குழுவில் மாவட்ட சுற்றாடல் அதிகாரிகள் மற்றும் 'பிலிசறு' அலுவலர்களும் அடங்குவர்.

## 15.6 'பிலிசறு' செயல்முறை வரைவு

'பிலிசறு'திட்டத்தின் மூன்று வருட (2008 -2010 மற்றும் 2011 -2013) செயற்திட்டத் திட்டமிடலுக்கு மேலதிகமாக வருடாந்த திட்டமிடலும் உரிய வருடங்களுக்காக தயாரிக்கப்பட்டது. அதற்கேற்ப திட்டம் - 2011 ஆனது திட்டமிடப்படும் போது காலத்துக்கு காலம் பல்வேறு தேவைக்கேற்ப மாற்றங்களுக்கு உட்பட நேர்ந்தது.
அதே போன்று சில செயற்பாடுகளும் அதற்குரிய செலவீனங்களும் வருட ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டது. எனினும் அவ்வாறு இல்லாமல் செயற்பட்டு, அந் நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் அவற்றில் மாற்றங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறான மாற்றங்களுக்கு தேவையேற்பட்ட சந்தர்ப்பங்களில் தேசிய பிலிசரு திட்டத்தின் அடித்தளம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையிடமிருந்து உரிய அனுமதி பெறப்பட்டது.

## 15.7 'பிலிசறு' திட்டத்தின் முன்னேற்றம்

இலகுவான விளக்கம் மற்றும் தெளிவுபடுத்தலுக்காக 'பிலிசறு'திட்டத்தின் முன்னேற்றம் ஆனது "பிலிசறு செயல் முறை வரைவு – 2011" இன் ஒவ்வொரு திட்டத்தினுள்ளும் தரப்பட்டுள்ளது. இருப்பினும் சில நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் மிக குறைந்தளவு முன்னேற்றத்தையும் சில நடவடிக்கைகள் எதுவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை. இதற்கு பிரதான காரணம் பொது திறைசேரியிலிருந்து போதியளவு நிதிமூலம் கிடைக்காமையே ஆகும்.
அதேபோன்று 'பிலிசறு'திட்டமானது அதன் செயற்திட்டமிடலில் உள்ளடக்கப்படாத போதிலும் மனிதவலுவாகவும் நிதி மூலமாகவும் தேசிய திட்டங்களை முன்னெடுப்பதில் முழு ஆதாரத்தை வழங்கியுள்ளது.

## 15.8 கூட்டு பசளைக் கூட கட்டுமாணங்கள் ( பிரதான திட்டங்கள்)

நிர்மாணித்தல் சம்பந்தமான திட்டமிடலின் போது பல்வேறு கூட்டுப் பசளையாக்கல் நிலையங்களை வடமாகாணம் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களிலும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. இதன் போது முன்மொழியப்பட்ட திட்டங்கள் வருமாறு

- பொதுவில் கும்புர கூட்டு பசளைக் கூடம், கொலன்னாவ
- போஹொறவத்த கூட்டு பசளைக் கூடம், களுத்தறை
- மொன்றோவியவத்த கூட்டு பசளைக் கூடம், ஹிக்ஹடுவ,காலி(வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் மட்டும்)
- கூட்டு பசளைக் கூடம், தொம்பே
- சுந்தரபொல கூட்டு பசளைக் கூடம், குருணாகல்(ந.ச)
- வட மாகாண கூட்டு பசளைக் கூடங்கள் ( யாழ்ப்பாணம், வவுனியா, கிண்ணியா)

### 15.8.1 பிரதான கூட்டு பசளை கூடங்கள்

இலங்கையில் உருவாகும் திண்மக் கழிவுகளின் அடிப்படையிலும் பெறக்கூடியதாகவுள்ள தொழினுட்ப வளங்களின் அடிப்படையிலும் கூட்டுப் பசளையாக்கல் முறையானது கழிவு

முகாமைத்துவம் தொடர்பான மிகக் கூடிய பொருத்தப்பாடான முறைகள் அடையாளம் காணப்பட்டது. எனவே பாரிய அளவில் உருவாகும் திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு இம் முறையானது பிலிசறு திட்டத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. எனவே பாரிய மற்றும் சிறிய அளவிலான கூட்டுப்பசளை நிலையங்களை வழங்குவது பிலிசறு திட்டத்தின் பிரதான செயற்பாடாகும்.

பிலிசறு திட்டத்தினால் நாளொன்றுக்கு 10 மெற்றிக் தொன் இலும் அதிகமாக கழிவுகள் சேகரிக்கப்படும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு பாரிய அளவில் கூட்டுப் பசளையாக்கல் நிலையங்கள் வழங்கப்பட்டன. இவ் வசதிகள் நாடு பூராகவும் மெதிகிரிய அனுராதபுர களுத்துறை கொலன்னாவ குருநாகல் கிக்கடுவ தொம்பே மாத்தளை திருகோ கொனடிகாவத்தை போன்ற இடங்களுக்கு ஒதுக்கப்பட்டது. அத்துடன் 3 பாரிய நிலையங்கள் வடமாகாணத்தில் வவுனியா யாழ்ப்பாணம் கின்னியா போன்ற இடங்களுக்கு வழங்கப்படவுள்ளன. மடிகிரியா அனு களுத்துறை நிலையங்கள் 2010 ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு வெற்றிகரமாக இயங்கிய வண்ணம் உள்ளன. கொலன்னாவ மற்றும் கிக்கடுவவில் நிர்மாணப் பணிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. ஏனைய இடங்கள் திட்டமிடல் படியில் உள்ளன.
நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 1 வருட காலம் பூர்த்தியுறும் வரைக்கும் பிலிசறு திட்டத்தினால் மேற்பார்வை செய்யப்படும். இதற்குரிய தொழிலாளர்களுக்கு வெலிகம பிரதேச சபையில் உரிய பயிற்சி கூட்டுப் பசளையாக்கல் சம்பந்தமாக வழங்கப்பட்டன.

பெரும்பாலான இவ் வசதிகள் அனேகமான உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கழிவுகள் சேகரிக்கப்படும் இடங்களுக்கே வழங்கப்படுகிறது. இவ் பாரிய அல்லது பிரதான நிலையங்கள் தமது தொழிற்பாட்டுக்கு அத்தியாவசியமான பல்வேறு முக்கியமான பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளன.

### 15.8.2 பிரதான கூட்டு பசளை கூடத்தின் இன் முக்கிய அம்சங்கள்

- **இறக்கல் மற்றும் பிரித்தெடுக்கும் பகுதி**

  சேகரித்து கொண்டுவரப்பட்ட கழிவுகளானது இறக்கப்பட்டு கூட்டு பசளைக்குரியவை பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய கழிவானது அண்மையிலுள்ள கழிவு நிரப்பும் நிலப் பகுதிக்கு அனுப்பப்படும். எனவே இப் பிரித்தெடுக்கும் மிகுதியானது இலகுவாக வந்து சேரக்கூடிய இடத்திலும் கழிவு நிரப்பும் நிலப் பகுதிக்கு அண்மையிலும் நிர்மாணிக்கப்பட்டது.

- **மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி**

  இக் கட்டடமானது இறக்கல் மற்றும் பிரித்தெடுக்கும் பகுதிக்கு அடுத்ததாக நிர்மாணிக்கப்பட்டது. மீள்சுழற்சிக்கு உட்படுத்த வேண்டிய கழிவுகளானது குவியல்கள் ஆக பிரிக்கப்பட்டு அடுத்து மேற்கொள்ள வேண்டிய சகல செயற்பாடுகளும் இங்கு நடைபெறும். நிலமானது 1:80 எனும் சாய்வில் உரியவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- **பொதி செய்தல் மற்றும் சேகரிப்பு பகுதி**

  உற்பத்தி செய்யப்பட்ட கலப்பு உரம் ஆனது இவ்விடத்திலிருந்து வெளி அகற்றப்படும் வரைக்கும் பொதி செய்யப்பட்டு சேகரிக்கப்படும். இந்த இடம் ஆனது கலப்பு உரத்தை அரித்தல் மற்றும் சிறுதுண்டுகளாக்கல் செயற்பாடுகளுக்கு பயன்படுகிறது.

- **வசதிகள் கட்டடம்**

  இப்பகுதியானது தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. இது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்காக தனியான ஓய்வு அறை மற்றும் குளியலறைகளை உள்ளடக்கியுள்ளது. இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் கழிவுகளுடனும் துர்நாற்றத்துடனும் நாள் முழுவதும் வேலை செய்வதனால் அவர்கள் தத்தமது வீடு செல்வதற்கு முன் தங்களை சுத்தப்படுத்தி கொள்வதற்கு உரிய வசதிகள் வழங்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இவ் வசதியானது அவர்களின் வேலை செய்யும் ஈடுபாட்டை அதிகரிக்கச்செய்வதோடு இப்பகுதியில் வேலையில் ஈடுபட வேறு வேலையாட்களையும் ஊக்கப்படுத்தும்.

- **பிரதான அலுவலகம்**

  அலுவலகமானது நிர்வாகப்பொறுப்பை மேற்கொள்ளும் பொருட்டும் வெளியிடத்துடன் ஒத்துழைப்புடன் இயங்கும் பொருட்டும் அமைக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகமானது அலுவலகத்தினுள் இருந்தவாறே வேலை செய்யும் பகுதியின் முழுமையான பிரதேசத்தையும் கண்காணிக்கக்கூடியவாறான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

- **பாதுகாப்பு ஊழியர் கூடம்**

  உபகரணங்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உரம் முதலியவற்றுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும் பொருட்டு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கடமை புரிவதற்காக இக்கூடம் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இருந்து முழுமையான வேலைத்தளத்தையும் அவதானிக்க முடியும்.

- **கழிவுகளிலிருந்து வடியும் நீர் சுத்திகரிப்பு முறைமை.**

  கூட்டு பசளை தயாரிக்கும் போது கழிவுகளினால் அமைக்கப்பட்ட குமியல்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரானது உரிய முறையில் அமைக்கப்பட்ட வடிகால்கள் மற்றும் குழாய்களின் ஊடாக கொண்டு செல்லப்பட்டு கழிவு நீர் தொட்டியினுள் சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு செய்வதன் மூலம் அந் நீரானது மீளவும் கூட்டு பசளை தயாரிப்புக்கு பயன்பெறத்தக்கதாக மாற்றலாம்.

- **சிறந்த உள்ளக வீதி வலையமைப்பு**

  பிரதானமாக உரமாக்கல் நிலையங்களில் கழிவுகளை சேகரித்து வரும் பாரவூர்திகள் பெரும் அளவில் பயணிக்க வேண்டியுள்ளதால் சேகரிப்பு நேரங்களில் வாகன நெரிசலை தவிர்க்கும் பொருட்டு வீதி வலையமைப்பானது விசாலமானதாகவும், உறுதியானதாகவும், பயணிக்கும் வாகனங்களுக்கு உரிய வசதி வாய்ப்பினை வழங்கும் முகமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

- **சுற்று மதில்**

  வேலை நடைபெறும் இடத்தினுள் தெரு விலங்குகள் உட்புகுந்து கழிவுகளை சிதறு படுத்துவதை தவிர்க்கும் பொருட்டு சுற்று மதில் ஒன்று தேவைப்பட்டது. அத்துடன் இது வேலைத்தலத்தின் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கும் பாதுகாப்பாகவும் விளங்குகின்றது.

- **மறைப்பு பகுதி**

  பொதுமக்கள், கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தை காண நேரிடும் போது அவர்கள் துர்மணத்தை உணர்கிறார்கள். இது உண்மையிலேயே துர்மணம் அக்கழிவுகளிலிருந்து வெளிவராதபோதிலும் கூட உளவியல் ரீதியாக துர்மணம் வீசுவதாக உணர்கிறார்கள். எனவே கழிவுகள் கொட்டப்படும் இடம் அவர்களின் கட்புலனுக்கு உட்படாத வகையில் மறைவாக இருத்தல் அவசியமாகும். எனவே மரங்கள் வரிசையில் நாட்டப்பட்டு இம் மறைப்பு உருவாக்கப்பட்டது. அத்துடன் இம்மரங்கள் கழிவு துகள்கள், தூசிகள் என்பன கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் இருந்து வெளியேறாமல் தடுக்க பெரிதும் உதவுகிறது.

மற்றைய கூட்டு பசளைக் கூட திட்டங்களைப் போலவே, ஒரு தொழிநுட்ப மதிப்பீட்டுக்காக செயன்முறையுடனான தொழிநுட்ப வலு மற்றும் நிதி உதவிகளை திரட்டும் முன் ஒருமைப்பாட்டுக்கான உறுதிமொழி ஏற்க்கப்பட்டது. திட்ட முன்மொழிவுகளுக்காக முக்கியமான தொழிநுட்ப மதிப்பீட்டை 'பிலிசறு'தேசிய அடித்தளத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிபுணர் குழுவினால் (தொழிநுட்ப துணைக்குழு என்று அழைக்கப்படும்) மதிப்பீடு செய்ததை தொடர்ந்து 'பிலிசறு' உத்தியோகத்தர்களால் திட்ட அமைவிடத்துக்குரிய மதிப்பீட்டு செயன்முறைக்குரிய ஆரம்ப விசாரணைகள் தொடங்கப்பட்டது. 'பிலிசறு' திட்டத்தினால் நிதி வழங்கப்படும் எந்தவொரு திட்டத்தின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலின் போது பின்வரும் பிரதான படிமுறைகள் பின்பற்றப்படும்.

- கருதுகோள் ஒன்றை உருவாக்குதல்.
- திட்ட முன்மொழிவு ஒன்றை உருவாக்குதல்.
- சூற்றுச்சூழல் அனுமதியை பெறுதல்.
- உள்ளூராட்சி அதிகார சபையின் ஒப்புதலை பெறுதல்.
- மண் பரிசோதனை மற்றும் நிலம் தொடர்பான ஏனைய பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல்.
- எல்லை அளவைகளை பூர்த்தி செய்தல்.
- வடிவமைத்தல். (சகல கட்டடங்களுக்கான திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்)
- உடன்படிக்கை ஒன்றை தயாரித்தல்.
- உடன்படிக்கை கைச்சாத்திடல்.
- கேள்விப்பத்திர செயன்முறையை பூர்த்தி செய்தல்.
- நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தல்.
- அவதானிப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு.
- நிலையத்தை கையளித்தல்.

## 15.8.3 பொதுவில் கும்புர கூட்டு பசளைக் கூடம், கொலன்னாவ

கொலன்னவ கூட்டுப் பசளையாக்கல் நிலையமானது கொலன்னவ நகர சபைக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகளில் நாளொன்றுக்கு 40 தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்யக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டமானது பொத்துவககும்பற கொலன்னவ எனும் இடத்தில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத் திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவீனம் ரூ 98.28 மில்லியன் ஆகும்.

பிலிசறு திட்டத்தின் பாரிய அல்லது பிரதான கூட்டுப் பசளையாக்கல் நிலையங்களை அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கொலன்னவ நகரசபை முல்லேரியா பிரதேச சபைக்குட்பட்ட இடங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக கொலன்னவ நகரசபைக்கு இவ்வாறானதொரு வசதியை வழங்க பிலிசறு திட்டம் முடிவு செய்தது.
இவ் உள்ளூர் அதிகாரசபைகளினால் தினமும் 58 மெற்றிக் தொன் கழிவுகள் சேகரிக்கப்படுவதுடன் இவற்றுள் 35 மெற்றிக் தொன் உயிர் இரசாயன பிரிகையாக்கலுக்கு உட்படக்கூடிய கழிவுகளாகும். எனவே நாளொன்றுக்கு 7.5 மெற்றிக் தொன் கூட்டுப் பசளை உற்பத்தி இந் நிலையத்திலிருந்து பெறப்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்னர் முல்லேரியா பிரதேச சபையானது தமக்குரிய கழிவுகளை தனியாக முகாமைத்துவம் செய்வதற்கு முடிவு செய்ததை தொடர்ந்து நாளொன்றுக்கு பெறப்படும் கழிவானது 35 மெற்றிக் தொன் ஆக வீழ்ச்சியடைந்தது.





| இல. | வசதிகள் | பரப்பளவு (சதுர மீ) |
|---|---|---|
| 01. | மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி | 2727.00 |
| 02 | திறந்த கழிவு குவியல் பகுதி | 1820.00 |
| 03. | தங்ககம், சிறுதுண்டாக்கல், அரித்தல் & சேகரிப்பு பகுதி | 186.40 |
| 04. | பிரதான அலுவலகம் | 46.07 |
| 05. | பாதுகாப்பு ஊழியர் கூடம் | 16.00 |
| 06. | உடை மாற்றும் அறை மற்றும் குளியலறை | 357.35 |
| 07. | நிறை அளக்கும் பகுதி மற்றும் சேகரிப்பு பகுதி | 52.25 |
| 08. | திருத்தகம் மற்றும் பராமரப்பகம் | 112.06 |
| 09. | துவிச்சக்கரவண்டி தலிப்பிடம் | 21.58 |
| 10 | **மொத்த நில பரப்பளவு** | **5337.07** |

நிர்மாணித்தலுக்கான கால எல்லையானது செப்டம்பர் 20 ம் திகதி 2011 இலிருந்து 7 மாதங்களுக்கு அதாவது 20 ம் திகதி ஏப்ரல் 2012 வரை நீடிப்பு செய்யப்பட்டது.
உடன்படிக்கையின் படி ஒவ்வொரு 2 கிழமைகளுக்கும் 1 தடவை கொலன்னவ நகரசபை தலைவரின் தலைமையுடன் முன்னேற்ற ஆய்வுக் குழுவினால் நிர்மாணப் பணிகள் மீளாய்வு செய்யப்படும். அதை விட மேலதிகமாக நிர்மாண வேலைத் தளமானது மாகாண பொறியியளாளர், உதவி பொறியியளாளர் மற்றும் பிலிசறு திட்ட உறுப்பினர்கள் ஆகியோரை கொண்ட குழு ஒன்றினால் மேற்பார்வை செய்யப்படும்.
இத் திட்டத்திற்குரிய ஒப்பந்தக்காரர் இவ் வேலைத் தளம் சம்பந்தமாக சில பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. ஆவையாவன






- மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டனுள் பாரிய நிலப்பரப்பை கையாள்வது கடினமாக இருந்தது.
- முழு நிலப்பரப்பும் 18 மீற்றர் கழிவுப்படையால் மூடப்பட்டிருந்ததால் கழிவுகளை குவியலாக்கல் செயற்பாட்டின் முன்னேற்றம் காண்பது மிக கடினமாக இருந்தது.
- குப்பை லாரிகள் தளத்தின் ஊடாக தொடர்ச்சியாக பயணம் செய்வதன் காரணமாக ஒப்பந்தக்காரர் தளத்தின் முழுமையான முகாமைத்துவ ஆட்சி சார்ந்த கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு என்பவற்றை இழக்க நேரிடுகிறது.
- கழிவுகளை குவியலாக்கல் செயற்பாட்டானது பொது மக்களுக்கு தொந்தரவு செய்யாது இருக்கவும் இயந்திரங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும் சுகாதாரமற்ற வேலை நிலைமை காரணமாகவும் பகல் நேரங்களிலேயே கூடியளவு வேலை செய்யப்படுகிறது.
- தொழிலாளர் மற்றும் ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்ட தற்செயலான காயங்கள் உடல் நல சீரின்மை மற்றும் சுகாதாரமற்ற வேலைத்தள நிலைமை என்பன காரணமாக தொழிலாளர்களுக்கான ஒரு பற்றாக்குறை ஆனது அங்கு நிலவி வந்தது
- தொழிலாளர்களுக்கான பாதுகாப்பை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களுக்கு பாதணிகள், தலை கவசங்கள் மற்றும் முகமூடிகள் எனபன வழங்கப்பட்டு அதனை அவர்கள் அணிந்து கொள்ளவும் பழக்கப் படுத்தப்பட்டனர்.
- வேலை பழுவிற்கான முக்கிய காரணமாக சுகாதாரமற்ற வேலை தள சுற்றாடலினால் தொழிலாளர்களுக்கள் அதிகமாக நோய் வாய் படுதலே என ஒப்பந்தக்காரர் உள்ளூர் அரசாங்க ஆணையாளரிடம் தெரிவித்தார்.
- வேலைத் தளத்தில் நிலவிய கஸ்டங்களை கருத்தில் கொண்டு கால எல்லை நீடிப்பு செய்யப்பட்டதுடன் நிர்மாணப் பணிகள் ஒப்பந்தக்காரரினால் பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதுடன் 2011 யூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டது.





## 8.4 போஹொறவத்த - களுத்தறை கூட்டு பசளைக் கூடம்

கூட்டு பசளைக் கூட நிர்மாணப் பணிகள் 2010 ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஒப்பந்தக்காரரினால் இந்த ஆண்டு பகுதியில் காலத்துக்கு காலம் தேவையான திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்பார்வை வேலைகள் மேல் மாகாண உள்ளூர் அதிகாரசபைகளினால் ஆணையாளரினூடாக மேற்கொள்ளப்பட்டதுடன் இடையிடையே தளத்துக்கு விஜயம் செய்யும் பிலிசறு திட்ட உத்தியோகத்தர்களாலும் மேற்பார்வை செய்யப்பட்டது.






கீழ் காணப்படும் அட்டவணையானது களுத்துறை போகொரவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விவரங்களை காட்டுகிறது

| வசதிகள் | பரப்பளவு (சதுர அடி) |
|---|---|
| மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி (1) | 40522.00 |
| திறந்த கழிவு குவியல் பகுதி (2) | 7839.52 |
| மீள் சுழற்சி பொருள் சேமிப்பகம் | 671.34 |
| சிறுதுண்டாக்கல், அரித்தல் மற்றும் சேகரிப்பு பகுதி | 1295.00 |
| தொழிலாளர் உடை மாற்றும் அறை | 232.87 |
| குளியலறை மற்றும் கழிப்பகம் | 568.75 |
| இறக்கல் மற்றும் ஆரம்ப நிரல்படுத்தகம் | 6410.00 |
| சேகரிப்பு பகுதி மற்றும் பிரதான அலுவலகம் | 671.34 |
| பாதுகாப்பு ஊழியர் கூடம் | 36.00 |





### 15.8.5 மொன்றோவியவத்த ஹிக்ஹடுவ கூட்டுப் பசளையாக்கல் நிலையத் தொகுதியை நிர்மாணித்தல்

காலியில் தீர்மானிக்கப்பட்ட இடமானது அதன் அமைவிடம் காரணமாக பாரியவிலான கூட்டுப் பசளையாக்கல் நிலையத் தொகுதியை அமைப்பதற்கு பொருத்தமில்லாமல் காணப்பட்டமையால் அதற்கு பதிலாக ராஜ்கம - மொன்றோவியவத்த பகுதி ஆனது பிலிசறு திட்டத்தினால் தெரிவு செய்யப்பட்டது. இந் நிலப்பரப்பானது காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான பகுதியாக காணப்பட்டமையால் பங்குதாரர் நிறுவனங்களுடன் நடாத்திய கலந்துரையாடல்களின் பின்னர் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆனது 20 ஏக்கர் கொண்ட இந் நிலப்பரப்பை நீண்ட கால குத்தகை அடிப்படையில் விடுவிப்பதற்கு ஒத்துக் கொண்டது.

2008 ம் ஆண்டு பிலிசறு திட்டமானது மொன்றோவயவத்த இல் மீதமுள்ள இடத்தில் (28 ஏக்கர் ) கூட்டுப் பசளையாக்கல் மற்றும் இறுதி கழிவகற்றல் செயற்பாடுகளுக்கென 7 உள்ளூர் அதிகாரசபைகள் முன்மொழியப்பட்டன. அவையாகிய ராஜ்கம பிரதேச சபை, ஹிக்கடுவ நகரசபை, அம்பலாங்ஹொட பிரதேச சபை, அம்பலாங்ஹொட நகரசபை, பலாப்பட்டிய பிரதேச சபை, காலி நகராட்சி மற்றும் போபே – பொடெல்லா பிரதேச சபை என்பவற்றுக்கான கூட்டுப் பசளையாக்கல் நிலையம் மற்றும் கழிவு நிரப்பும் நிலம் ஒன்றை அமைப்பதற்கு திட்டமிட்டது. அம்பலாங்கொட பிரதேச சபை மற்றும் பலாப்பட்டிய பிரதேச சபை என்பன தமக்கு ராஜ்கம - மொன்றோவியவத்த இல் கூட்டுப்

பசளையாக்கலுக்குரிய வசதி தேவை இல்லை என தெரிவித்ததுடன் ஆனால் தமக்கு தமது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் கழிவு நிரப்பும் நில வசதி தேவை என்பது தொடர்பான விவாதமானது தென் மாகாண சபை உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட 7 உள்ளூர் அதிகாரசபைகள் உள்ளூர் அரசாங்க துணை ஆணையக உத்தியோகத்தர்கள் மற்றும் பிலிசறு உத்தியோகத்தர்களுடனும் இடம்பெற்றது.

2010 ம் ஆண்டு நிர்மாணப் பணிகளுக்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டதுடன் 2011 மாசி மாதம் ஒப்பந்தக்காரருக்கு இக் கேள்வி வழங்கப்பட்டது. நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட கால எல்லை 07 மாதங்கள் ஆகும்.

ஒரு பொறியியளாளர் மற்றும் உதவி பொறியியளாளர் ஒருவரும் தெண் மாகாண உள்ளூர் அதிகாரசபையினால் மேற்பார்வை பணிகளுக்காக நியமிக்கப்பட்டனர்.

சீரற்ற காலநிலை காரணமாக 03 மாத கால நீடிப்புடன் ஒப்பந்தக்காரர் நிர்மாணப் பணிகளை 2011 கார்த்திகையில் பூர்த்தி செய்தனர். நிர்மாணப் பணிகளுக்கான மொத்த செலவீனம் ரூபா. 79 250 248.83 ஆகும்.

| வசதிகள் | பரப்பளவு (சதுர அடி) |
|---|---|
| மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி (1) | 21670.00 |
| திறந்த கழிவு குவியல் பகுதி (2) | 14450.00 |
| மீள் சுழற்ச்சிக்கு உட்படுத்தக் கூடியவை சேமிக்குமிடம் | 483.00 |
| சிறுதுண்டாக்கல், அரித்தல் மற்றும் சேகரிப்பு பகுதி | 870.00 |
| தொழிலாளர் உடை மாற்றும் அறை | 312.00 |
| குளியலறை மற்றும் கழிப்பகம் | 430.00 |
| இறக்கல் மற்றும் ஆரம்ப நிரல்படுத்தகம் | 2415.00 |
| பிரதான அலுவலகம் மற்றும் வேறு வசதிகள் | 210.00 |
| பாதுகாப்பு ஊழியர் கூடம் | 36.00 |







**புகைப்படங்கள்:** முன்னதாக நிறுவப்பட்டிருந்த கூட்டு பசளை கூடம் - றஜகம (பிச)

**புகைப்படங்கள்:** உத்தேசிக்கப்பட்ட கழிவு நிரப்பும் நில அமைப்பு மற்றும் கூட்டு பசளை







கூடத்துக்கான நிலம்





**புகைப்படம்:** நிறைவு செய்யப்பட்ட மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி

**புகைப்படம்:** நிறைவு செய்யப்பட்ட தண்ணீர் தாங்கி

## 15. 8.6 மாளிகாவத்தை தொம்பே கூட்டுப் பசளையாக்கல் நிலையத் தொகுதியை நிர்மாணித்தல்

தொம்பே பிரதேச சபையால் சுற்றாடல் மற்றும் சூழல் இயற்கை வளங்கள் அமைச்சிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை தொடர்ந்து தொம்பே பிரதேச சபைக்ககுட்பட்ட இடங்களில் உருவாகும் கழிவுகளை உரிய முகாமைத்துவத்திற்காக பிலிசறு திட்டத்தின் உதவி நாடப்பட்டது. இதற்கான பொருத்தமான நிலப்பகுதியொன்று தொம்பே பிரதேச சபையின் மாளிகாவத்தை பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்திற்காக அடையாளம் காணப்பட்டது. இதற்கான தெரியப்பட்ட நிலப்பகுதியில் கவர்ச்சியான வன உயிரிகளான அக்கோசியா மற்றும் பைனஸ் என்பன காணப்பட்டன.

இவ் பிரதேச சபையிலிருந்து நாளொன்றுக்கு 5 மெற்றிக் தொன் திண்மக் கழிவுகள் உருவாக்கப்படும் அதேவேளை இவற்றில் 50 வீதம் ஆனவை உயிர் இரசாயன பிரிகையாக்கலுக்கு உட்படக்கூடியவையாகும். அடையாளம் காணப்பட்ட இடமானது 5 ஹெக்டேயர் ஆகும். இதிலிருந்து 3 ஹெக்டேயர் நிலப்பரப்பானது கூட்டுப் பசளையாக்கல் நிலையத்திற்கு பயன்படுத்தப்படும்.




***உத்தேசிக்கப்பட்ட கழிவு நிரப்பும் நில அமைப்பு மற்றும் கூட்டு பசளை கூடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலம்***

தொம்பே பிரதேச சபைக்ககுட்பட்ட பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகளில் சேதனக் கழிவுகளை உரிய பரிகரிப்பு செய்யும் பொருட்டு கூட்டுப் பசளையாக்கல் நிலையமானது திட்டமிடப்பட்ட கழிவு நிரப்பும் நிலத்துக்கு அண்மையாக நிர்மாணக்கப்படும் இதற்கான வடிவமைப்பு வேலைகள் பிலிசறு திட்டத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
கழிவு முகாமைத்துவத் திட்டம் மற்றும் கட்டடவேலைகளுக்கான அனுமதியை பெறும் பொருட்டு உரிய திட்டங்கள் வடிவமைப்புகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் தொம்பே பிரதேச சபை தலைவருக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் பொது மக்களின் தலையீடு மற்றும் ஒரு குழுவினரின் அரசியல் தலையீடுகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளால் முன்னேற்றமானது குறிப்பிடத்தக்க அளவு தாமதத்தன்மயை காட்டியது.பிலிசறு திட்ட உத்தியோகத்தர்களுக்கு கிராமத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்களுக்கு சட்டரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

ஏனைய பிரதான கூட்டுப் பசளையாக்கல் நிலையங்களுடன் ஒப்பிடுகையில் இக் கூட்டுப் பசளையாக்கல் நிலையத்தின் தனிச்சிறப்பு என்னவெனில் இத் திட்டத்தின் ஆலோசனையாளர் மற்றும் உரிமையாளர் இரண்டுமே பிலிசறு திட்டமாகும்.

இத் திட்டத்திற்காக பொறியியளாளரின் மதிப்பீடு ரூபா. 16,198,063.75 உடன் ஆகும். ஒப்பந்தக்காரருக்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டது. கேள்வியானது 06.09.2010 இல் திறக்கப்பட்டதுடன் 12 விலை மனுதாரர்களிடமிருந்து பதில்கள் பெறப்பட்டிருந்தன. பொறியியளாளரின் மதிப்பீடு ரூபா. 18 மில்லியன் ஆகும்.

விலை மனு மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டதுடன் கழிவு நிரப்பும் நிலத்திற்கான நில வேலைகள் 2011 ஜனவரி அதே இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் உள்ளமையால் கேள்வி வழங்குதலானது நிறுத்தி வைக்கப்பட்டது.

## 15.8.7 குருநாகல் - சுந்தரபோல பிரதான கூட்டுப் பசளையாக்கல் நிலையம்

குருநாகல் பிரதேச சபை மற்றும் மாநகர சபை இரண்டையும் கருத்தில் கொண்டால் கடந்த வருடங்களில் திருப்திகரமான கழிவு முகாமைத்துவத் திட்டம் எதுவும் காணப்படவில்லை. எனவே சூழல் பாதுகாப்பு நிலைய அபிவிருத்தி திட்டத்தை தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவித் திட்டத்தினூடாக பிலிசறு திட்டத்தின் உதவியினூடு நிறுவ குருநாகல் மாநகர சபை திட்டமிட்டது.

எப்படியிருப்பினும் திட்டத்தின் உருவாக்கத்தினூடு சிந்திக்கும் போது 3ம் நிறுவனத்துடன் வேலைகளை மேற்கொள்வது கால தாமதத்தை தரக்கூடும் என்பதால் பிலிசறு திட்டத்துடன் நேரடியாக இத் திட்டத்தை நிர்மாணிக்க முடிவு செய்யப்பட்டது.

**தள நிலவரம்**

தற்போது வனத் திணைக்களத்துக்குச் சொந்தமான சுந்தரபொல காட்டிலுள்ள 11.3 ஏக்கர் நிலப்பரப்பிலேயே கழிவுகள் சட்டத்துக்கு புறம்பான முறையில் புதைக்கப்பட்டு வருகிறது. தற்போதைய புதைக்கப்படும் இடமானது குருநாகல் பிரதேச சபையில் சுந்தரபொலவில் ஏறத்தாழ 5 ஹெக்டயர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு இயற்கையாகவே சரிவென்று காணப்படுவதால் மழை காலத்தில் மழைநீர் வடிந்தோடக் கூடியதாக உள்ளது. மழை காலத்தில் தேங்கி நிற்கும் நீரின் அளவு கூடுவதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வடையும் அநேகமான நிலப்பரப்பானது புதைக்கப்பட்ட 2 – 3 மீற்றர் கழிவுப்படையால் மூடப்பட்டு காணப்படுகின்றது. இந் நிலப்பரப்புக்கு தெற்கு பகுதியில் ஏறத்தாழ 20 குடியிருப்புக்கள் காணப்படுவதுடன் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் காட்டினால் சூழப்பட்டுள்ளது.





**தற்போதைய தள நிலவரம்**

உருவாக்கப்படும் கழிவுகளில் ஒரு பகுதியானது சேகரிக்கப்பட்டு மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் அதே வேளை ஒரு பகுதி விலங்குகளுக்கான உணவாக மாற்றப்படுகிறது.

நிலத்துக்குரிய உரிமம் வனத் திணைக்களத்துக்கு உரித்தாயிருக்கும் அதே வேளை புதைக்கும் இடத்தின் கட்டுப்பாடு மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்றது. அடிக்கடி கழிவுகள் சிதறுபடுத்தப்படுவது நடைபெற்றாலும் மாநகர சபையானது மணலை அகழ்ந்து கழிவுகளை மூடுவதற்கு முயற்சி எடுத்தது. வாகனங்களை கழுவி சேவை செய்யும் நிலையங்கள் மற்றும் மோட்டார் திருத்த வேலையிடங்களில் இருந்து பெறப்படும் கழிவுகள் பிரிக்கப்பட்டு உலோகப் பொருட்களை பெறும் பொருட்டு எரியூட்டப்பட்டது.

இந் நிலையமானது கழிவுகளை வேறுபடுத்துவதற்காக 03 மாற்றும் பட்டிகளை கொண்டிருப்பதோடு 6 மீற்றர் அகலமான உள் வீதி மற்றும் 450 மீற்றா நீளமும் 10 மீற்றா அகலமும் உடைய மறைக்கும் பகுதியையும் கொண்டுள்ளது. இரண்டு மூடி அடைக்கப்பட்ட கழிவு குவியல் பகுதி நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் இவற்றில் ஒரு பகுதி கூட்டுப்பசளை உற்பத்தியின் ஆரம்ப வாரங்களுக்கு திறந்திருக்கும்.

நாளாந்தம் 42 மெற்றிக் தொன் கழிவுகளும் அவற்றில் 25 மெற்றிக் தொன் பிரிகையாக்கத்துக்கு உட்படக் கூடியவையுமாகும். இவற்றை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு சுந்தரபொலவில் பிரதான கூட்டுப்பசளையாக்கல் நிலையமொன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேற் கூறப்பட்ட கழிவுகளில் 35.6 மெற்றிக் தொன் குருநாகல் மாநகர சபைக்குட்பட்ட இடத்திலிருந்தும் மீதமுள்ள 6.4 மெற்றிக் தொன் குருநாகல் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களிலிருந்தும் தினமும் பெறப்படுகிறது. அண்ணளவாக விற்பனைக்காக நாளாந்தம் 8.4 மெற்றிக் தொன் கூட்டுப் பசளை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிலிசறு திட்டத்தின் வேண்டுகோளுக்கிணங்க வனத் திணைக்களமானது 12.6 ஏக்கர் நிலத்தை குருநாகல் மாநகர சபைக்கு திட்ட ஆரம்பித்தலுக்காக 21.07.2010 இல் வழங்கியது. தெரிவுசெய்யப்பட்ட இந் நிலப்பகுதியின் அளவையியல் செயற்பாடுகள் நில அளவையியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

பிலிசறு திட்டத்தின் உதவியுடன் குருநாகல் மாநகர சபையானது வடிவமைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் செயற்பாடுகளை மேற்கொண்டது. செலவீன மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவாகும். 2011 ம் ஆண்டு கூட்டுப்பசளையாக்கல் நிலையத்தின் நிர்மாணப்பணிகளுக்கான கேள்வி அறிவித்தல் கோரப்பட்டதுடன் விலை மனுக்களும் பெறப்பட்டன. இக் கேள்வியானது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய இரத்துச் செய்யப்பட்டதுடன் கூட்டுப்பசளையாக்கல் நிலையத்துடன் கழிவு பரிகரிப்பு நிலையம் ஒன்றையும் இணைத்து நிர்மாணிப்பதற்காக கேள்வி அறிவித்தல் ஒன்றை மீளவும் கோருவதற்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே குருநாகல் மாநகர சபையும் பிலிசறு திட்டமும் இணைந்து திட்டடத்தை மீள் வடிவமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்ததோடு பொறியியல் சார் மதிப்பிடலையும் மேற்கொண்டது

## 15.8.8 வடமாகாணம் - கூட்டு பசளையாக்கல் நிலையங்கள்

யுத்த சூழல் காரணமாக பிலிசறு திட்டமானது திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் எதையும் வடமாகாணத்தில் விருத்தி செய்யமுடியாத நிலை காணப்பட்டது. ஆனால் எவ்வளவுக்கு காலம் தாழ்த்தாமல் முடியுமோ அவ்வளவுக்கு கால தாமதமின்றி விஜயம் செய்ததுடன் வடமாகாணத்தில் நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆரம்பித்தது. பிலிசறு திட்ட உத்தியோகத்தர்கள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்ததுடன் உரிய உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுடனும் பல்வேறு சந்திப்புக்களை நடாத்தியதுடன் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக பல்வேறு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் கள விஜயம் மேற்கொண்ட போது யாழ் மாநகர சபையானது பாரியளவிலான கூட்டுப்பசளையாக்கல் நிலையமொன்றை கொண்டிருப்பதுடன் சிறிய திருத்தங்களுடன் கூட்டுப்பசளையாக்கல் செயல் முறையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதும் அறியப்பட்டது. எனவே திருத்த வேலைகளுக்கான கணிய அளவீடொன்றை தயாரித்து உரிய ஏனைய ஆவணங்களுடன் பிலிசறு திட்டத்திற்கு ஆரம்ப நடவடிக்கையாக அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

முன்மொழிவு மட்டும் மதிப்பீடு என்பவற்றை பரிசீலித்ததன் பின்னர் பிலிசறு திட்டமானது ஆரம்ப நடவடிக்கையாக ஏற்கனவே உள்ள கூட்டுப் பசளையாக்கல் நிலையத்தின் திருத்த வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்தது. பிலிசறு திட்டத்தின் நிதி உதவியுடன் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது.












இதைவிட மேலதிகமாக பிரதான தளத்துக்காக பிலிசறு திட்டத்தினால் நிலப்பரப்பொன்று தெரிவு செய்யப்பட்டதுடன் பொறியியல் திட்டமிடல் வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

## 15.9. கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (KOICA) நிதியுதவியுடன் மாளிகாவத்தை, தொம்பே கழிவு நிரப்பும் நில திட்டம்

வஹற பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட கழிவு நிரப்பும் நில திட்டத்திற்கு எதிராக பொதுமக்களால் வலிமையாகக் காட்டப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து அரசாங்கம் இத் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானித்தது. எப்படியிருப்பினும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பாரிய நிதியுதவியை இலங்கையில் உரியமுறையில் பயன்படுத்தும் நோக்கில் திட்டத்திற்குரிய இடத்தை பெல்பட, வஹற வில் இருந்து தொம்பே க்கு மாற்றுவதற்காக கலந்துரையாடல்கள் நடைபெற்றன. பிலிசறு திட்டம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இன் பல்வேறு முயற்சிகளின் பின்னர் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமானது திட்ட அமைவிடத்தை தொம்பே க்கு மாற்றுவதற்கு உடன்பட்டது.

இந்த கழிவு நிரப்பும் நில திட்டமானது தொம்பே பிரதேச சபையின் நாளொன்றுக்கு 10 தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்யக்கூடிய இறுதியிடமாக அமையுமாறு திட்டமிடப்பட்டது. கழிவு நிரப்பும் நில திட்டக்கு மேலதிகமாக அதேயிடத்தில் கூட்டுப்பசளையாக்கல் நிலையமொன்றை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டது. உண்மையில் இந் நிலப்பரப்பு காணி சீர்திருத்த

ஆணைக்குழுக்கு உரித்துடையதும் வனத் திணைக்களத்துக்கு வியாபாரப் பயிரிடலுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டதாகும். காணி சீர்திருத்த ஆணைக்குழு ஆனது நீண்டகால குத்தகை அடிப்படையில் இந் நிலப்பரப்பை (68 ஏக்கர்) பிலிசறு திட்டத்திற்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, இந் நிலப்பரப்பில் 6 ஹெக்டயர் நிலப்பரப்பு கழிவு நிரப்பும் நில திட்ட நிர்மாணிப்பிற்கான மூல இடமாக தெரிவு செய்யப்பட்டது.

அதே சமயம் இவ்விடத்திற்கான உள்நுளைவுப் பாதையானது மிகவும் ஒடுங்கியதாக காணப்பட்டமையால் வாகனங்கள் வந்து செல்வதில் மிகவும் கடினங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தமையால் இவ் விதியை 20மீற்றர் வரைக்கும் அகலமாக்கித் தருமாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கேற்ப காணி சீர்திருத்த ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.
விவாதங்களின் பதிவுகளுக்கு ஏற்ப இலங்கை அரசாங்கத்திடம் நிலவேலைகள் அதாவது மண் அகழ்வு, சேமிப்பு, நில மட்டமாக்கல், மற்றும் வீதியமைப்பு, மின்வழங்கல், நீர் வழங்கல், கழிவுப் பரிகரிப்பு, தொலைபேசி வசதி போன்ற கழிவு நிரப்பும் நில நிர்மாணிப்பிற்கு தேவையான உள்ளக கட்டமைப்புக்களை வழங்குவதற்குரிய பொறுப்பு வழங்கப்பட்டது. அரசாங்கத்தின் கேள்வி அறிவித்தலைத் தொடர்ந்து தொம்பே கழிவு நிரப்பும் நில நிர்மாணப் பணிகளுக்கான நிலவேலைகள் ஒரியன்ற் கட்டுமாண இணை தனியார் நிறுவன ஒப்பந்தகாரரிடம் 9ம் திகதி மார்கழி மாதம் 2010 இல் வழங்கப்பட்டது நில வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இறுதித் திகதி 10.09.2011 ஆகும். அடிப்படையில் மண் நிர்மாணப் பணிகளின் தொடர்பான முன்னெடுப்புகள் இரு பகுதிச் செயற்பாடுகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டது.

பகுதி I – நிலம் வெட்டுதலும் அப்புறப்படுத்துதலும்

பகுதி II – தளத்தில் கழிவு நிரப்பும் நில ஐ நிர்மாணிப்பதற்கான நில வேலைகள்.

109 000 கன மீற்றர் மணலை வெட்டுதல் மற்றும் அப்புறப்படுத்தலுடன் தொடர்பான செயற்பாடுகள் பகுதி I இல் உள்ளடக்கப்பட்டதுடன் நிலச் சுத்தப்படுத்தல், மர அடிக்கட்டைகளை அப்புறப்படுத்தல், ஏறத்தாழ 50 000 கன மீற்றர் மண்ணை வெட்டுதல் மற்றும் குவியல்களாக்கல், வடிகாலமைப்புக்களை உருவாக்குதல், மற்றும் ஏனைய மண் சார்ந்த செயற்பாடுகள் பலவும் பகுதி II இனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நில வேலைகள் 13.01.2011 இலிருந்து 21.03.2011 வரைக்கும் உள்ளூராட்சி தேர்தல் காரணமாக தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதுடன் தேர்தல் நடைபெற்று முடிந்ததும் ஒரியன்ற் கட்டுமாண இணை தனியார் நிறுவன ஒப்பந்தகாரருக்கு மீளாய்வு செய்யப்பட்ட வேலை திட்டத்தை சமர்ப்பிக்குமாறு இடை நிறுத்தப்பட்ட வேலைகளை மீள ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.
2011ம் ஆண்டின் இறுதியில் பகுதி I இன் வேலைகள் 80 வீத முன்னேற்றத்துடன் செய்து முடிக்கப்பட்டன. எப்படியாயினும் ஒப்பந்தகாரரினால் பகுதி I இன் நில வேலைகள் பரிசோதனைகளுக்காக சில டிப்பர் சுமை மண் அகற்றதலை தவிர ஏனையவை நிறைவேற்றுப்பட்டன. எனினும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை க்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரர் இப் பகுதியிலிருந்து வெளியெடுத்துச் செல்லும் ஒவ்வொரு கன மீற்றர் மண்ணுக்கும் ரூபா.45 வீதம் செலுத்த வேண்டும் என்பதற்கிணங்க மொத்தம் ரூபா.4.9 மில்லியன் செலுத்த வேண்டும் ஆனால் ஒப்பந்தகாரரினால் இம் மண்ணாணது ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்த பொருத்தமற்று காணப்பட்டமையால் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. எனவே தம்மால் பகுதி I இல் குறிப்பிட்ப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆனது தேசிய கட்டிட மீளாய்வு நிறுவனத்தினால் இம் மண்ணாணது பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. பரிசோதனை அறிக்கை முடிவுகளின் படி இம் மண்ணாணது சாதரணமாக நிரவுதல் சீர்ப்படுத்தல் நோக்கங்களுக்காகவும் கட்டுமாண பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன வரையறையின் படி தரம் I மற்றும் தரம் II பாதை செப்பனிடுதலுக்கு (நீரை நிறுத்தி வைக்கும் இரு கரைகளுக்கான கட்டமைப்புக்கு) உகந்த பொருளாக பயன்படுத்த முடியும். இன்னம் இம் மண்ணாணது பாதை

செப்பனிடுதலில் துணை தள கட்டமைப்பின் கீழ் மட்ட படை இடுதலுக்கு மற்றும் அதிக இறுக்கம் தேவையான சந்தா்ப்பங்களில் பயன்படுத்தப்பட முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இதற்கேற்ப ஒப்பந்தகாரரினால் அதி வேக நெடுஞ்சாலை கட்டுமாண பணிகளுக்காக இம் மணலை விற்பனை செய்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அதி வேக நெடுங்சாலை கட்டுமாண பணி ஒப்பந்தகாரா்களால் இம் மண் ஆனது நிராகரிக்கப்பட்டது.

அமைச்சரவை பத்திர இல 11/2207/527/027 ஆனது..
22.11.2011 திகதியிடப்பட்ட குறிபேடு ஒன்று மாளிகாவத்தை தொம்பேயில் முன்மொழியப்பட்ட கழிவு நிரப்பும் நில த்திற்கான இடத்தில் மண் அகழ்வு மற்றும் அப்புறப்படுத்தல் தொடர்பாக ஒரியன்ற் கட்டுமாண இணை தனியாா் நிறுவன ஒப்பந்தகாரருக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாக சுற்றாடல் அமைச்சினால் பின்வரும் அனுமதிகளை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சமா்ப்பிக்கப்பட்டது.

(i) ஒரு கன மீற்றா் மண் அகழ்வதற்கும் குவியல் செய்வதற்கும் ரூபா.295 வீதம் என்பதற்கிணங்க மொத்த செலவீனம் ரூபா.32,155,000.00 உடன் 1009000 கன மீற்றா் கன மீற்றா் மண் அகழ்வதற்கும் குவியல் செய்வதற்கும் ஒரியன்ற் கட்டுமாண இணை தனியாா் நிறுவனத்தை வழிப்படுத்தல்.

(ii) நிலத்திலிருந்து அகழப்பட்ட 1,009,000 கன மீற்றா் மண்ணை குவியல் செய்வதற்கு மேலும் 3 ஏக்கா் நிலப் பரப்பை காணி சீா்திருத்த ஆணைக்குழு மற்றும் வன திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளல்.

(iii) மேலே (ii) இல் கூறப்பட்டுள்ளது மேலதிகமாக நிலப் பரப்பை பெறமுடியாது போயின் மணலை வெளியகற்றுவதற்காக ஒரு கி.மீ துாரத்துக்கு ஒரு கன மீற்றா் மண்ணை கொண்டு செல்வதற்கு ரூபா.50 வீதம் ஒரியன்ற் கட்டுமாண இணை தனியாா் நிறுவனத்துக்கு மீளளித்தல்.

(iv) கொரிய சா்வதேச ஒத்துழைப்பு நிறுவன செயல் திட்டத்தின் கீழ் பிலிசறு திட்டத்துக்கு கிடைக்க கூடியதாகவுள்ள நிதியில் மண் அகழ்தல் மறறும் குவியல் செய்வது போன்றவற்றுக்காக ஒப்பந்தகாரருக்கு செலுத்தல்.

அமைச்சரவை அனுமதியானது (ii),(iv) போன்ற மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட (i) செயற்பாடு தொடர்பாக சுற்றாடல் அமைச்சின் பரிந்துரையை பெறும் பொருட்டு சுற்றாடல் அமைச்சின் கொள்வனவு குழுமத்துக்கு பரிந்துரைக்கப்பட்டது. இதற்கேற்ப அமைச்சின் கொள்வனவு குழு கூட்டம் 2011 மாா்கழி 21 ம் திகதி நடைபெற்றதுடன் தொழிநுட்ப நிபுணா் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அனுமதியும் வழங்கப்பட்டது.

ஒரியன்ற் கட்டுமாண இணை தனியாா் நிறுவனம் ஆனது 30ம் திகதி மாா்கழ 2011 ல் தமது வேலையை மீளவும் தொடர்வதாக அறிவித்தது. உரிய காலப்பகுதியில் திட்ட செயல்பாடுகளை முடிப்பதற்காக மீளாய்வு செய்யப்பட்ட திட்ட அட்டவணையையும இந் நிறுவனம் சமா்ப்பித்தது.




**நில வேலை செயற்பாடுகள்**
சுடோக்வொன் கழிவு நிரப்பும் நில முகாமைத்துவ கூட்டமைப்பின் ஆலோசகராகவும் மற்றும் திட்ட ஒப்பந்தகாரரின் சிவில் பொறியியலாளர் கொண்ட ஆய்வுக்குழு ஒன்று நிலத்தை தயார் படுத்தல் தொடர்பான வேலைகள் கால அட்டவணையுடன் ஒன்றை தயாரித்தல் என்பவற்றை அவதானிக்கும் பொருட்டு நேரடியாக விஜயம் செய்தது. அத்துடன் சுற்றாடல் அமைச்சின் செயலாளருடன் கூட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது. கொரியாவின் கை தேர்ந்த நிபுணர் குழு ஒன்றும் விஜயம் செய்தது. அதே சமயம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் திட்ட முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் திட்டத்தின் முன்னேற்றத்தை அவதானிக்கும் பொருட்டு 2011 மார்கழி 19ம் திகதி கள விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.




**கொரியாவின் கை தேர்ந்த நிபுணர் குழு ஒன்றின் விஜயம்**

கூட்டுப் பசளை கூடம் நிறுவுவதுடன் நேரடியாக தொடர்புடைய பல்வேறு அரச நிறுவனங்களிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 15 பேர் கொண்ட குழுவினருக்கு கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் – பிலிசறு செயற்றட்டத்துக்கு ஏற்ப கூட்டுப் பசளையாக்கல் முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

அதறகேற்ப பின்வரும் உத்தியோகத்தர்கள் 10ம் திகதி சித்திரை 2011 முதல் 23ம் திகதி சித்திரை 2011 வரை இரண்டு வார கால கூட்டுப் பசளையாக்கல் முகாமைத்துவம் மற்றும் செயன்முறை தொடர்பான பயிற்சி நெறிக்காக சியோல் கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

| இல. | பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. ரமணி ரத்னமாலா எல்லேபொல | பணிப்பாளர் நாயகம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 2 | திரு. ஹோலித ஹிமால் முதுகுடாரச்சி | பிரதி பணிப்பாளர் நாயகம் / சுற்றாடல் மாசடைதல் தடுப்பு பகுதி | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 3 | திருமதி. ஹேட்டியா பத்மா சரோஜினி ஜயசேகர | பதில். பணிப்பாளர் /கழிவு முகாமைத்துவ பகுதி | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 4 | திரு. முகமட் அப்துல் குட்டோஸ் நஜீப் | திட்ட உப பணிப்பாளர் /அம்பாறை மாவட்ட | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 5 | திருமதி. விஜிதா சத்தியகுமார் | உதவி பணிப்பாளர் / வட மாகாண அலுவலகம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 6 | திரு. ரஞ்சித் மகேஷ் ஜல்டோட்ட | உதவி பணிப்பாளர் / கழிவு முகாமைத்துவ பகுதி | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 7 | திரு. தொலபிஹில முதலிகே சமன் குமார ஆரியவன்ச | சிரேஷ்ட சுற்றாடல் அலுவலகர் / சப்ரகமுவ | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 8 | திரு. ததலகே நிஹால் டீ சில்வா | சிரேஷ்ட சுற்றாடல் அலுவலகர் / ஊவா மாகாண | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 9 | திருமதி. லொகுலியனகே மங்கலிகா | பணிப்பாளர் / தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ | ஊள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாகாண சபை |
| 10 | திருமதி. திஷாநாயக்க முதலியன்சலாகே ஜயந்தி குமாரி திஷாநாயக்க | சுற்றாடல் முகாமை அலுவலகர் / கொள்கை திட்டமிடல் பிரிவு | சுற்றாடல் அமைச்சு |
| 11 | திரு. முதலியன்சலாகே சதுர சுதட்ட குமார மல்வான | திட்ட உப பணிப்பாளர் /பிலிசறு திட்டம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 12 | திரு. சித்ரசேன அளுத்கமகே அஜித் ஹேமந்த சித்ரசேன | திட்ட அலுவலர் /பிலிசறு திட்டம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 13 | திருமதி. குணகமுவே யட்டெகி அப்புகாமிலகே நில்மினி பஸ்நாயக்க | திட்ட பொறியியலாளர் /பிலிசறு திட்டம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 14 | திரு.றந்தெனி பிடும்வத்தகே ஜனக ஸ்ரீமேவன் | திட்ட உதவியாளா /பிலிசறு திட்டம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| 15 | திருமதி. சுனேத்ரா வலிகலா | கணிய அளவையாளர் /பிலிசறு திட்டம் | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |

இன்னமொரு கழிவு முகாமைத்துவ தொடர்பான பயிற்சி நெறி ஒன்று 14 பேர் கொண்ட குழுவினருக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கேற்ப பின்வரும் உத்தியோகத்தர்கள் கழிவு முகாமைத்துவ மற்றும் கழிவு நிரப்பும் நில அமைப்பு தொடர்பாக செயன்முறை பகுதிகளுக்கான 02 வார கால பயிற்சியை பெறும் பொருட்டு ஆனி 6ம் திகதி 2011 முதல் ஆனி 18ம் திகதி 2011 வரை கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

| இல. | பெயர் | பதவி | நிறுவனம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஏ.ஆர்.ஆர். றுாபசிங்க | மேலதிக செயலாளர் | சுற்றாடல் அமைச்சு |
| 2 | திரு. எம்.எம்.யு இந்திரரத்ன | பிரதி பணிப்பாளர் நாயகம் | ம.சு.அ |
| 3 | திரு. எம். ஜே.ஜே.பெர்ணாண்டோ | திட்ட பணிப்பாளர் /பிலிசறு திட்டம | ம.சு.அ |
| 4 | திரு. என். எஸ். கமகே | பணிப்பாளர் / மேல் மாகாணம் | ம.சு.அ |
| 5 | திருமதி. டபிள்யு.ஜி. | பிரதேச செயலாளர், பன்னல பிரதேச | பொது நிர்வாக |

| | | | |
|---|---|---|---|
| | குமாரகமகே | செயலகம் | அமைச்சு |
| 6 | திருமதி.மனுஜா விலசேன | திட்ட உப பணிப்பாளர் (சட்டம்) / பிலிசறு திட்டம் | ம.சு.அ |
| 7 | திருமதி. எஸ்.பி. பெரியபெரும | திட்ட உப பணிப்பாளர் (சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு) | ம.சு.அ |
| 8 | திரு. பிரேமரத்னே திஸாநாயக்கா | திட்ட உப பணிப்பாளர் (சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பணர்வு ) | ம.சு.அ |
| 9 | திரு. துலார குணதிலக்க | உப முகாமையாளர் /பிலிசறு திட்டம் | ம.சு.அ |
| 10 | திரு. சுனில் உடுகல | பிரதி பணிப்பாளா / ஊடகம் | ம.சு.அ |
| 11 | திரு. ஏ. எஸ். லியனகே | சிரேஷ்ட சுற்றாடல் அலுவலகர் / மத்திய மாகாண அலுவலகம | ம.சு.அ |
| 12 | திரு. டில்கான் ஷெண்டுபெரும | திட்ட உதவியாளர் /பிலிசறு திட்டம் | ம.சு.அ |
| 13 | திருமதி. லங்கா வீரசிங்க | திட்ட உதவியாளர் /பிலிசறு திட்டம் | ம.சு.அ |
| 14 | திருமதி. இஷானி முனசிங்க | பட வரைஞர் /பிலிசறு திட்டம் | ம.சு.அ |





**உத்தியோகத்தர்களுக்கு 2 வாரம் கொரியாவில் இடம்பெற்ற பயிற்சி மற்றும் விழிப்புணர்வின் போது**

## 15.10 பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிதியுதவி (EDCF) மூலம் நிறுவப்படவுள்ள கழிவு நிரப்பும் நில திட்டங்கள்

நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி நிலைமையினை கருத்தில் கொண்டு பிலிசறு திட்டத்திற்கான இடையறாத செயற்பாடுகளுக்காக நிதி கிடைப்பது என்பது கடினமானது என திட்டமிடலின் போதே உணரப்பட்டது. எனவே கொரிய அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிதியினூடாக இத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான கடன் வசதி பெறுவதற்கு முயற்சி செய்யப்பட்டது.

இதற்கேற்ப பிலிசறு திட்டமானது கடன் பெறுவதற்காக கொரிய அரசாங்கத்தின் எக்ஸிம் வங்கியின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிதி பகுதிக்கு விண்ணப்பித்தது. இதன் விளைவாக திட்ட தயாரிப்பு உதவி மற்றும் திட்டமுன்மொழிவு என்பன தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிக்கள வளங்கள் திணைக்களம் என்பவற்றின் ஊடாக பாணந்துறை,

அனுராதபுரம், ஹிக்ஹடுவ மற்றும் கண்டி எனும் இடங்கில் கழிவு நிரப்பும் நிலஅமைப்புக்களை நிறுவும் முகமாக சமா்ப்பிக்கப்பட்டது.
எக்ஸிம் வங்கி ன் வடிவமைப்பு நிறுவனமான குங்வா பொறியியல் உசாத்துணை தனியாா் நிறுவனம் இலங்கைக்கு பல தடைவ விஜயம் செய்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உடனும் வெளிக்கள வளங்கள் திணைக்களம் உடனும் பல தடவைகள் கலந்துரையாடல்களையும் நடாத்தியது. அத்துடன் சாத்தியமான அறிக்கையையும் 2010 ஏப்ரல் மாதம் சமா்ப்பித்தது.

கொரியன் எக்ஸிம் வங்கி ன் வேண்டுகோளுக்கு இணங்க பாணந்துறை, அனுராதபுரம், ஹிக்ஹடுவ மற்றும் கொனாடிஹவத்த என்பவற்றுக்கான திட்டங்களுக்கான சூழலியல் மதிப்பீட்டு அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு மேலதிகமாகன நடவடிக்கைகளுக்காக எக்ஸிம் வங்கியிடம் கையளிக்கப்பட்டன. இத்துடன் கண்டி கொனாடிஹவத்த இன் சூழலியல் விளைவுகளின் அறிக்கை தயாரிக்கப்பட்டு கொண்டும் இருக்கிறது. இதே சமயம் ம . சு. அ ற்கு வெளிக்கள வளங்கள் திணைக்களத்தின் கடன் சம்பந்தமான அபிப்பிராயங்களை கடன் உடன்படிக்கை கைச்சாத்திட முன்னரே அனுப்பி இருந்தது.

கொள்முதலுக்கான திட்ட உசாத்துணை சேவைகள் மற்றும் கட்டுமாண வேலை இற்கான முன் திட்டமிடல் ஆனது கொரியன் எக்ஸிம் வங்கியிடம் 20.09.2011 இல் சமா்ப்பிக்கப்பட்டது. இதன் திருத்தப்பட்ட திட்டம், திட்ட கோரிக்கை மாதிரி மற்றும் குறிப்பு சொற்கள் ஆனது எக்ஸிம் வங்கியினால் பிலிசறு திட்டத்துக்கு அனுப்பப்பட்டது. இது 26.09.2011 இல் மீளாய்வும் செய்யப்பட்டது.
பிலிசறு திட்டத்தால் திருத்தப்பட்ட திட்டம், திட்ட கோரிக்கை மாதிரி மற்றும் குறிப்பு சொற்கள் எனபவற்றுக்குரிய ஆரம்ப கட்ட விமா்சனங்கள் ஆனது 30.09.2011 இல எக்ஸிம் வங்கிக்கு அனுப்பப்பட்டது

## 15.11 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டு பசளையாக்கல் கூடங்கள்

சிறிய மற்றும நடுத்தர அளவிலான கூட்டு பசளைக்கூடங்கள் மீள்சுழற்சியாக்கல் திட்டங்களையும் உருவாக்கவதற்காக தொழிநுட்ப உதவி மற்றும் நிதியுதவி என்பவற்றை வழங்குவதற்காக உள்ளூராட்சி அதிகார சபையிடமிருந்து திட்ட முன்மொழிவுகளுக்காக பிலிசறு திட்டம் அழைப்பு விடுத்தது. இத்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கும் பாரியளவிலான கூட்டு பசளைக்கூடம், கழிவு நிரப்பும் நிலம் என்பவற்றை உருவாக்குவதற்கும் ம.சு.அ யின் முகாமைத்துவ குழுமம் மற்றும் பிலிசறு தேசிய அடித்தளம் என்பவற்றிடமிருந்து உரிய அனுமதி பெறப்பட்டது. அதை விட கல்வி நிறுவனங்கள் படை தளங்கள் போன்ற அரச நிறுவனங்களிலும் சிறிய மற்றும நடுத்தர அளவிலான கூட்டு பசளைக்கூடங்கள் நிறுவுவதற்கு ம.சு.அ யின் முகாமைத்துவ குழுமத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டது.

இலங்கையிலுள்ள பெரும்பாலும் சகல உள்ளூராட்சி அதிகார சபைகளும் அவற்றுக்குரிய திட்டங்களுக்குரிய தொழிநுட்ப உதவி மற்றம் நிதியுதவி பெற வரும்பின் பிலிசறு திட்டத்துக்கு தமது திட்ட முன்மொழிவை சமா்ப்பிக்குமாறு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இவற்றுக்கான நிதியுதவி வழங்கப்பட முன்னா் பிலிசறு தேசிய அடித்தளத்தால் நியமிக்கப்பட்ட வல்லுனா் குழுவினால் திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடலுக்கு உட் படுத்தப்படும். இதன் போது பிலிசறு திட்டத்தினால் தொடா்ச்சியான செயற்பாடுகள் ஒவ்வொரு திட்ட முன்மொழிழவ மதிப்பீடு செய்யும் போதும் பின்பற்றப்படும்

- ஒரு உள்ளூராட்சி அதிகார சபையிடமிருந்து நகராட்சி திண்ம கழிவு முகாமைத்துவத்துக்கான திட்டத்திற்கான முன் மொழிவு ஒன்றை பெறுதல்.

- தலைமை பீடத்தால் நியமிக்கப்பட்ட பிலிசறு அதிகாரிகள் மற்றும் தொழிநுட்ப வல்லுன்ர் குழுவினால் முன் மொழியப்பட்ட திட்டங்களை மதிப்பிடுதல்.
- உள்ளூராட்சி அதிகார சபை பிரதிநிதிகளுடன் இணைந்து பிலிசறு திட்ட அதிகாரிகள் மற்றும் தொழிநுட்ப வல்லுனர் குழு பிரதிநிதிகள் திட்ட தளம் மீதான விஜயம் ஒன்றை மேற்கொள்ளல்.
- தேவைப்படும் பட்சத்தில், பிலிசறு திட்டத்தினால் பிரேரிக்கப்படும் தர நிர்ணயத்திற்கு ஏற்பவும், தளம் மீதான விஜயத்தின் ஆய்வின் முலம் பெறப்பட்ட தீர்மானங்களின் படியும் திட்டத்திற்கான முன் மொழிவு மற்றும் திட்ட மதிப்பீடுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தல்.
- அந்தந்த மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் ஊடாக திருத்தப்பட்ட திட்டத்திற்கான முன் மொழிவுகள் ஆனது உள்ளூராட்சி அதிகார சபைகளால் மீண்டும் சமர்ப்பிக்கப்படல்.
- தொழிநுட்ப வல்லுன்ர் குழுவிற்கு முன் மொழியப்பட்ட திட்டங்களானது மதிப்பிடுதல் மற்றும் ஒப்புதலுக்காக வழங்கப்படல்.
- தொழிநுட்ப வல்லுன்ர் குழு தமது முன் மொழிவு திட்டங்களது மதிப்பீட்டு நிறைவு செய்யப்பட்ட ஒப்புதலை, இத் திண்ம கழிவு முகாமைத்துவ திட்டத்திற்காக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்கப்படும் செலவீனத்துக்கான நிதிக்குரிய முழு அங்கீகாரமும் உடைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிர்வாக சபையிடம் கையளித்தல்.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் இயங்கும் பிலிசறு திட்டம் மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு இடையே ஒரு உடன்படிக்கை ஆனது கைச்சாத்திடப்படல்.
- இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான தொகை ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவித்தல். பொதுவாக இக் காசோலை ஆனது மதிப்பிற்குரிய கௌரவ அமைச்சர் அல்லது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரால் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தலைவர்களுக்கு வழங்கல். இத்திட்டத்தின் ஆரம்பம் சம்பந்தமாக ஒரு விளம்பரம் ஆனது பத்திரிகை வாயிலாக வெளியிடப்படல்.
- உடன்படிக்கையில் குறிப்பிட்ப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைந்ததாக கட்டுமாண பணிகளை செயற்படுத்த மற்றும் கண்காணிக்க ஒரு கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவை நிறுவுதல்.
- கட்டுமாணத்துக்குரிய பகுதி கொடுப்பனவுகளை பெறும் பொருட்டு கணிய அளவீடுகள் பெறப்படல். இந்த கணிய அளவீட்டு பட்டியல் உள்ளூராட்சி அதிகார சபைகளின ஆல் மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் ஊடாக கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவின் உறுதிப்படுத்துலுடன் சமர்ப்பிக்கப்படல்.
- கணிய அளவீட்டு பட்டியல்களை ஆய்வு செய்யும் பொருட்டு கட்டுமாண பணிகள் இடம்பெறும் பகுதிக்கான விஜயம் முலம் கட்டுமாண பணிகளின முன்னேற்றமானது மதிப்பிடப்படும். இவ் ஆய்வுகளுக்காக பிலிசறு திட்டத்தின் திட்ட அலுவலர் மற்றும் திட்ட உதவியாளர் மற்றும் திட்ட பொறியியலாளர் மற்றும் கணிய அளவையாளர் ஆகியோர் கட்டயமாக உட்படுத்தப்பட்டு ஒவ்வொரு ஆய்வின் பின்னராக ஆய்வறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.
- கட்டுமாண பணிகளின் முன்னேற்றம் சார்பாக மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளர், மாவட்ட பொறியியலாளர், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழு மற்றும் பிலிசறு திட்ட அதிகாரிகளின் பரிந்துரைகளுக்கு ஏற்ப நிதியானது விடுவிக்கப்படும்.
- திட்டத்தின் நீடிப்பு தொடர்பான உறுதிப்பாட்டை நிலை நிறுத்த உள்ளூராட்சி அதிகார சபைகளின் ஆல் நியமிக்கப்பட்ட கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவானது தொடர்ந்து முன்னெடுக்கும். பிலிசறு திட்டத்தின் திட்ட அதிகாரிகள் திண்ம கழிவு

முகாமைத்துவத்துக்கான திட்டங்களை செயற்படுத்தவும் கண்காணிக்கவும் திட்ட தளம் மீதான விஜயங்களை மேற்கொள்வர்.

* இதே போன்ற திண்ம கழிவு முகாமைத்துவத்துக்கான திட்டங்கள் ஆனது இராணுவ படை தளங்கள் மற்றும் கல்வி நிறுவகங்கள் உள்ளடங்கிய ஏனைய அரச நிறுவனங்களிலும் நிறுவுவதற்கான நடைமுறைகள் தொடரப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிர்வாக சபையினால் நிதி வழங்கும் முன்னர் உள்ளூராட்சி ஆணையாளாரின் திட்டத்திற்கான முன் மொழிவு பரிந்துரைகள் மற்றும் ஒப்புதல்கள் ஆனது பெறப்பட்டது. உள் கட்டுமான அளவை பட்டியல் மற்றும் நடவடிக்கைகளின் வெளிப்பாட்டு தன்மையை உறுதிப்படுத்த (அவையாயன கூட்டு பசளை கூடங்கள், கொங்கிறீற்றால் ஆன உலர்த்திய துண்டு, அணுகல் சாலைகள், கழிப்பறைகள், அலுவலக அறைகள், களஞ்சிய அறைகள், பாதுகாப்பு வேலி, மின்சார வசதி, தண்ணீர் கிணறுகள், பொருத்தப்பட்ட குழாய் தொகுதிகள் மற்றும் ஏனையவை) இணை மாகாண சபையால் பரிந்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளர் ஊடாக கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவின் உறுதிப்படுத்துலுடன் சமர்ப்பிக்கப்படல்.

நிதி வழங்குதலுக்கு முன்பதாக ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகாரசபையின் தலைவருக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இன் தலைவருக்குமிடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவீனத்தின் 20 வீதம் ஆனது திட்ட நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவாக ஆக விடுவிக்கப்பட்டது.
சகல உள்ளூராட்சி அதிகார சபைகளின் ஆல் நியமிக்கப்பட்ட கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவானது கட்டுமாண பணிகளின் முன்னேற்றம் மற்றும் கட்டுமாண தரம் தொடர்பாக அறிவுறுத்துவதுடன் அவற்றுக்கான கட்டுமாண கணிய அளவீட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள செலவீனம் தொடர்பாக அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது. கணிய அளவீட்டு செலவீனங்களை மீளப் பெற மாவட்ட பொறியியலாளரால் உப்பதல் அளிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளரால் பரிந்துரைப்புடன் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவினால் கைச்சாத்திடப்பட்ட அறிக்கையும் இணைத்தே கணிய அளவீடுகள் பிலிசறு திட்டத்திற்கு அனுப்பப் பட வேண்டும.

தேவைப்படும் பட்சத்தில், பிலிசறு திட்டத்தின் திட்ட அதிகாரிகள் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவினரோடு கூட்டங்களை நிறுவி கட்டுமாண பணி தொடர்பாக கூடுதல் கண்காணித்தல் மற்றும் வழகாட்டுதல்களை மேற்கொள்ள முனைந்தது. பொதுவாக கணிய அளவீட்டு பட்டியல் தொடர்பான ஆய்வு செய்யும் பொருட்டு கட்டுமாண பணிகள் இடம்பெறும் பகுதிக்கான விஜயங்களை பிலிசறு திட்டத்தின் திட்ட அதிகாரிகள் நடாத்தினர்.

**2011 ல் நிதி வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டு பசளையாக்கல் கூட திட்டங்கள்:**

| இல. | உள்ளூராட்சி அதிகார சபை | அனுமதியளிக்கப்பட்ட தொகை (ரூபா.) | விடுவிக்கப்பட்ட மொத்த நிதி (ரூபா.) |
|---|---|---|---|
| 1 | அம்பலாந்தொட்ட ( பிரதேச சபை ) | 1,266,743.34 | 253,348.67 |
| 2 | யாழ்ப்பாணம் ( பிரதேச சபை ) | 1,272,094.50 | 869,589.05 |
| 3 | மாவத்தகம ( பிரதேச சபை ) | 6,070,157.65 | 1,214,031.53 |
| 4 | ரிதிகம ( பிரதேச சபை ) | 4,034,531.09 | 806,906.22 |
| 5 | மகாவ ( பிரதேச சபை ) | 3,871,132.56 | 774,226.51 |
| 6 | நிகவரடிய ( பிரதேச சபை ) | 2,465,256.48 | 493,051.30 |
| 7 | தணமல்வில ( பிரதேச சபை ) | 1,801,506.27 | 360,301.25 |

| | | | |
|---|---|---|---|
| 8 | தணமல்வில ( பிரதேச சபை )- செவனகல | 2,595,822.19 | 519,164.44 |
| 9 | அம்பகமுவ ( பிரதேச சபை ) | 5,148,264.30 | 1,029,652.86 |
| 10 | ஆனமடுவ ( பிரதேச சபை ) | 1,949,120.00 | 389,824.00 |
| 11 | நிவிற்றிகல ( பிரதேச சபை ) ( சேகரிப்பு | 2,776,609.87 | 555,321.97 |
| 12 | குருவிட்ட ( பிரதேச சபை ) ( சேகரிப்பு | 2,932,546.92 | 586,509.38 |
| 13 | 6வது இலங்கை இராணுவ கலாட்படை கட்டளை | 1,847,395.35 | 369,479.07 |
| 14 | ஹலென்பிந்துனுவெவ (பிரதேச சபை ) | 6,403,314.89 | 1,280,662.97 |
| 15 | கல்னேவ ( பிரதேச சபை ) | 5,295,245.90 | 1,059,049.18 |
| 16 | இபலோகம ( பிரதேச சபை ) | 6,042,336.98 | 1,208,467.40 |
| 17 | கஹடகஸ்டிகிலிய ( பிரதேச சபை ) | 6,497,638.42 | 1,299,527.68 |
| 18 | மதவாச்சிய (பிரதேச சபை ) | 6,497,638.42 | 1,299,527.68 |
| 19 | றஜாங்கணய (பிரதேச சபை ) | 5,295,245.90 | 1,059,049.18 |
| 20 | றம்பாவ ( பிரதேச சபை ) | 6,497,638.42 | 1,299,527.68 |
| 21 | திரப்பனே ( பிரதேச சபை ) | 5,572,025.61 | 1,114,405.12 |
| 22 | அலாவ்வ ( பிரதேச சபை ) | 5,366,118.38 | 1,073,223.68 |
| 23 | சாவகச்சேரி ( நகர சபை ) | 5,606,917.18 | 1,121,383.44 |
| 24 | ஹம்பாந்தோட்டை ( பிரதேச சபை ) | 512,638.94 | 102,527.79 |
| 25 | ஜா - எல ( நகர சபை ) | 1,707,865.30 | 341,573.06 |
| 26 | காத்தான்குடி ( நகர சபை ) | 8,708,282.50 | 1,669,226.50 |
| 27 | மலிம்பட ( பிரதேச சபை ) | 1,129,457.90 | 225,891.58 |
| 28 | மாத்தறை ( பிரதேச சபை ) | 1,000,000.00 | 200,000.00 |
| 29 | பொல்பிட்டிகம ( பிரதேச சபை ) | 3,981,693.02 | 796,338.60 |
| 30 | றுவன்வெல்ல ( பிரதேச சபை ) | 1,043,984.58 | 208,796.92 |
| 31 | வனதவில்லுவ ( பிரதேச சபை ) | 3,875,896.63 | 775,179.33 |
| 32 | வீரகெடிய ( பிரதேச சபை ) | 444,269.61 | 88,853.92 |
| | ***மொத்தம்*** | **119,509,389.10** | **24,444,617.96** |

### 15.11.1 கூட்டு பசளைக் கூடம், அம்பலாந்தொட்ட (பி.ச)



கூட்டு பசளைக் கூடம் மற்றும் வேலி அலுவலகம் பாதுகாப்பு ஊழியர் கூடம் விற்பனை நிலையம்

அம்பலாந்தோட்டை பிரதேச சபை ஆனது இலங்கையின் தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 255 சதுர கிலோமீற்றர்களாகும். இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 16500 ஆகும் . இதில் 80 வீதம் ஆனோர் விவசாயிகள் ஆவார்கள்.

பிரதேச சபையானது ஒரு நாளுக்கு பிரிந்தழிகைக்கு உட்பட கூடிய பொருட்களான உணவு துண்டுகள், வாழை மரப் பகுதிகள் மற்றும் பிரந்தழிகைக்கு உட்பட முடியாத பொருட்கள் உட்பட 7 தொன் இற்கும் மேற்பட்ட கழிவுகளை தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து

சேகரிக்கிறது. மேலும் கழிவுகளை பிரதேச சபைக்கு உட்பட்ட 4 வர்த்தக மையங்களில் இருந்தும் சேகரிக்கிறது.

பிரதேச செயலகப் பிரிவானது 10 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பினை இக் கழிவு முகாமைத்துவத்திற்கென உள்ளூராட்சி அதிகார சபைக்கு வழங்கியுள்ளது. பிலிசறு மாநகர சபை திண்ம முகாமைத்துவ செயற்றிட்டமானது 1,266,743.34 ரூபா செலவில் உஹபிற்றஹொட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டமானது வெற்றிகரமான முறையில் நாள்தோறும் 4 தொன் நிறையுள்ள கழிவுகளை பதப்படுத்துகிறது. தற்போது மாநகர சபை திண்ம கழிவுகள் மூலம் பதப்படுத்தப்பட்ட கூட்டு பசளை ஆனது அம்பலாந்தோட்டை பிரதேச சபை ஊடாக விற்பனையும் செய்யப்படுகிறது.

## 11.2 கூட்டு பசளைக் கூடம், யாழ்ப்பாணம் (பி.ச)



கூட்டு பசளைக் கூடம், யாழ்ப்பாணம்



*அரித்தல் மற்றும் கூட்டெரு*

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆனது இலங்கையின் வட மாகாணத்தில் யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 20.2 சதுர கிலோமீற்றர்களாகும். இவ் மாநகர சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 90000 ஆகும் ஒரு நாளுக்கு 40 தொன் கழிவுகளை தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து சேகரிக்கிறது. பிலிசறு செயற்றிட்டமானது எதிர் காலத்தில் மிகப் பெரிய அளவிலான கலப்பு உர திட்ட உருவாக்கத்திற்கும் செயல்படுத்தலுக்குமென நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கலாம் என திட்டமிட்டுள்ளது. அதேசமயம் பிலிசறு செயற்றிட்டமானது 2.5 ஏக்கர் நில பரப்பிலான காக்கைதீவில் அமைந்துள்ள கூட்டுப் பசளை கூடத்துக்கான நிதி உதவியையும் வழங்கியுள்ளது.

சிறிய அளவிலான கூட்டுப் பசளை கூட திட்டமானது நாளொன்றுக்கு சராசரியாக 5 மெற்றிக் தொன் கழிவுகளை கூட்டுப் பசளை ஆக்கல் செயன்முறைக்கு உட்படுத்துகிறது.

பிலிசறு செயற்றிட்டமானது ஏற்கனவே யாழ்ப்பாணம் மாநகரசபை பகுதியில் தயாரிக்கப்பட்டு உள்ள கூட்டு பசளைக் கூடங்களை மீள் புனரமைப்பு செய்வதற்கு ஆரம்பித்துள்ளது. அதற்கான அனுமதியளிக்கப்பட்ட மொத்த தொகையான ரூபா. 1,272,094.50 இல் இருந்து ரூபா. 869,589.05 வை ஆரம்ப கொடுப்பனவாக வழங்கியும் உள்ளது.

இத் திட்டமானது வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்பட்டு நாள் தோறும் 200 கிலோ கிராம் நிறையுள்ள கூட்டுப் பசளை உற்பத்தி செய்கிறமை குறிப்பிடத் தக்கது.

## 15.11.3 கூட்டு பசளைக் கூடம், மாவத்தகம (பி.ச)

மாவத்தகம பிரதேச சபை இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 653 சதுர கிலோமீற்றர்களாகும், மேலும் மாவத்தகம, பொல்ஹகதெனிய, பில்லஸ மற்றும் மாவத்தகம சுதந்திர வர்த்தக வலயம் ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப் பிரதேச சபையின்

ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 18000 மனைகள் உள்ளடங்களாக 42000 ஆகும்.

திண்ம முகாமைத்துவ செயற்றிட்டமானது பிலிசறு இனால் நிதியிடப்பட்டு உளுகுள்ளே பகுதியில் உள்ள டென்ரன் வத்த எஸ்டேட் இல் அமைக்கப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டமானது 4 ஏக்கர் நிலப்பரப்பளவு விசாலமானது.

இத் திட்டத்திற்காக கணக்கிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 6,070,157.65 ஆகும். இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 1,214,031.53 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டு பசளைக் கூடம் ஆனது நாள்தோறும் 6 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகளை செயன்முறைப் படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டதாகும்.

### 15.11.4 கூட்டு பசளைக் கூடம், ரிதிகம (பி.ச)

ரிதிகம பிரதேச சபை இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 393 சதுர கிலோமீற்றர்களாகும். மேலும் ரிதிகம மற்றும் டூடன்ஹஸ்லான்ட ஆகிய 2 முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 7300 மனைகள் உள்ளடங்களாக 24000 ஆகும்

திண்ம முகாமைத்துவ செயற்றிட்டமானது பிலிசறு இனால் நிதியிடப்பட்டு ஹொனடெனிய வத்த பகுதியில் உள்ள ஷிஹாலி எஸ்டேட் இல் அமைக்கப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டமானது 4 ஏக்கர் நிலப்பரப்பளவு விசாலமானது.

இத் திட்டத்திற்காக கணக்கிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 4,034,531.09 ஆகும். இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 806,906.22 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15.11.5 கூட்டு பசளைக் கூடம், மகாவ (பி.ச)

மகாவ பிரதேச சபை இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருநாகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1355 சதுர கிலோமீற்றர்களாகும். மேலும் அம்பன்பொல, மகாவ மற்றும் யாப்பகூவா ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ பிரதேசசபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 12300 மனைகள் உள்ளடங்களாக 36000 ஆகும்

மகாவ பிரதேச சபை ஆனது மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான நிதி சார் உதவிகளை பெறும் பொருட்டு பிலிசறு திட்டத்திடம் ஒரு கோரிக்கையை சமர்ப்பித்தது. இந்த பகுதியின் நாளொன்றுக்கான சேகரிக்கப்படும் மொத்த கழிவுகளின் அளவு 4 தொன் ஆகும். பிலிசறு திட்டமானது இக் கூட்டு பசளைக் கூடத்தை நாளொன்றுக்கு 2 தொன் அளவு கழிவுகளை செயன்முறைக்கு உட்படுத்த கூடிய முறையில் நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது அத்துடன் இதை வெற்றிகரமாக இயக்க நிரூபித்து காட்டும் பட்சத்தில் கூட்டு பசளைக் கூடத்தை மேலும் விஸ்தரிக்கும் தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இத் திட்டத்திற்காக கணக்கிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 6,070,157.65 ஆகும். இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 774,226.81 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது

### 15.11.6 கூட்டு பசளைக் கூடம், நிகவரடிய (பி.ச)

நிகவரடிய பிரதேச சபை இலங்கையின் வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 998 சதுர கிலோமீற்றா்களாகும். இப் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 12000 மனைகள் உள்ளடங்களாக 32000 ஆகும்

நிகவரடிய பிரதேச சபை ஆனது மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான நிதி சாா் உதவிகளை பெறும் பொருட்டு பிலிசறு திட்டத்திடம் ஒரு கோரிக்கையை சமா்ப்பித்தது. இக் கூட்டுப் பசளை கூடம் ஆனது பொகலகம அரச நிலத்தில் தொடங்க அனுமதியளிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கான பகுதியின் பரப்பானது 2 ஏக்கா்கள் 3 குழி மற்றும் 8.9 பேர்ச் ஆகும்.

2 மெற்றிக் தொன் கழிவுகளை செயன்முறைக்கு உட்படுத்தக்கூடியதுடன் திண்ம கழிவு முகாமைத்துவத்தை அமைப்பதற்கு ரூபா 2,465,256.48 இனை மொத்த செலவாக இத் திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது. இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 493,051.30 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயாா் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது

### 15.11.7 கூட்டு பசளைக் கூடம், தணமல்வில (பி.ச)

தணமல்வில பிரதேச சபையானது இலங்கையின் ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில் தணமல்வில பிராந்திய செயலகத்தின் கீழ் அமைந்துள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 70413 ஆகும். இத் தணமல்வில நகரானது மிகவும் அதிகமான குடியிருப்புகளை கொண்ட நகரமாகும்.

சராசரியாக 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகள் தினமும் தணமல்வில பகுதியில் உருவாக்கப்படுகின்றன. 300 வீடுகளிலிருந்தும், அரச நிறுவனங்களிலிருந்தும், சந்தைகளிலிருந்தும் மற்றும் பாடசாலைகளிலிருந்தும் இக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன.

பிலிசறு திட்டமானது பொடகாம கிராம சேவகா் பிரிவில் உள்ள ககுல்கற்றுவவேவா நிலப்பகுதியில் திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை அமைப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இந் நிலத்துக்குரிய முழுமையான உரிமையும் தணமல்வில பிரதேச சபையை சாா்ந்ததாகும். இக் கூட்டுப் பசளை கூட திட்டத்திற்காக கணக்கிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 1,801,506.27 ஆகும். இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 360,301.25 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயாா் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக தணமல்வில பிரதேச சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15.11.8 கூட்டு பசளைக் கூடம், தணமல்வில (பி.ச) - செவனகல

தணமல்வில பிரதேச சபையானது இலங்கையின் ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக் கூட்டு பசளைக் கூடமானது செவனகல பிராந்திய செயலகத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றது. இச் செவனகல பிராந்திய செயலகப் பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 20613 ஆகும். இச் செவனகல நகரானது மிகவும் அதிகமான குடியிருப்புகளை கொண்ட நகரமாகும்.

சராசரியாக 4 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகள் தினமும் செவனகல பகுதியில் உருவாக்கப்படுகின்றன. 556 வீடுகளிலிருந்தும், 4 சந்தைகளிலிருந்தும் மற்றும்

பாடசாலைகளிலிருந்தும் இக் கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. மொத்தமாக 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகள் நாள்தோறும் செவனகல பகுதியிலிருந்து சேகரிக்கப்படுகின்றன.
பிலிசறு திட்டமானது டன்டும, சி-07, எல நிலப்பகுதியில் திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை அமைப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்குரிய நிலப்பகுதியின் மொத்த அளவு 0.4047 ஹெக்டேயர்கள் ஆகும்.
இக் செவனகல கூட்டு பசளைக் கூட திட்டத்திற்காக கணக்கிடப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா. 2,595,822.19 ஆகும். இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 519,164.44 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக தணமல்வில பிரதேச சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

## 15.11.9 கூட்டு பசளைக் கூடம், அம்பகமுவ (பி.ச)

அம்பகமுவ பிரதேச சபை இலங்கையின் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ளது. மேலும் கொத்மலே, ஹங்குரன்கெத்த, வலபனே, நுவரெலியா மற்றும அம்பகமுவ கோரளை. ஆகிய பிராந்திய செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இவ் பிரதேசசபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை சராசரியாக 12000 ஆகும்.

இக் கழிவு முகாமைத்துவ திட்டமானது சிவனொளி பாத மலைக்கு புனித பருவ கால பகுதியில் ஆத்மீக தல யாத்திரை வருகின்ற பக்தர்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிலிசறு திண்ம முகாமைத்துவ திட்டமானது உத்தேசிக்கப்பட்ட மொத்தமாக தொகையான ரூபா 5.14 மில்லியன் உடன் செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவினை விடுவித்ததுடன் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தற்போது இவ் செயற்றிட்டமானது ஏறத்தாழ 85 வீத கட்டுமாண செயற்பாடுகள் நிறைவு பெற்ற நிலையில் உள்ளது.

## 15.11.10 கூட்டு பசளைக் கூடம், ஆனமடுவ (பி.ச)

ஆனமடுவ பிரதேச சபை இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1936 சதுர கிலோமீற்றர்களாகும இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 13000 மனைகள் உள்ளடங்களாக 37000 ஆகும். மேலும் ஆனமடுவ நகரம், பல்லம மற்றும் மஹாகும்புக்கல ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது.

ஆனமடுவ பிரதேச சபை ஆனது மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான நிதி சார் உதவிகளை பெறும் பொருட்டு பிலிசறு திட்டத்திடம் ஒரு கோரிக்கையை சமர்ப்பித்தது. புலுங்ககவத்த நிலப்பகுதியில் இக் கூட்டு பசளைக் கூட திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான பகுதியின் பரப்பானது 3 ஏக்கர்கள் 1 குழி மற்றும் 35 பேர்ச் ஆகும்.

3 மெற்றிக் தொன் கழிவுகளை செயன்முறைக்கு உட்படுத்தக்கூடியதுடன் திண்ம கழிவு முகாமைத்துவத்தை அமைப்பதற்கு ரூபா 1,949,120.00 இனை மொத்த செலவாக இத் திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது. இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 389,824.00 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15.11.11 சேகரிப்பு நிலையம், நிவிற்றிகல (பி.ச)

நிவிற்றிகல பிரதேச சபை இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்னபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 272.73 சதுர கிலோமீற்றர்களாகும். இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை உள்ளடங்களாக 101586 ஆகும் . மேலும் நிவிற்றிகல, கரவிட்ட மற்றும் யடிகிவிட்ட ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப் பிரதேசசபையில் 44 கிராம சேவையாளர் பிரிவுகள் உண்டு. நிவிற்றிகல பிரதேசசபையானது 21000 வீடுகளையும், 28 நிறுவனங்களையும், 43 தொழிற்சாலைகளையும், 1 வாரசந்தையையும், 24 உணவகங்களையும், 3 வைத்தியசாலைகளையும் மற்றும் 49 பிரதேசசபைக்குட்பட்ட பாடசாலைகளையும் உள்ளடக்கியுள்ளது.

ஒரு நாளுக்கு 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகள் பிரதேசசபை பகுதியில் இருந்து சேகரிக்கப்படுகின்றன. முன்னதாக பிலசறு திட்டமானது நிவிற்றிகல பிரதேச சபையில் திறந்த முறையில் குப்பைகளை கொட்டும் நடைமுறை ஒன்றை நிறுவி நடாத்தி வந்தது,

பிலசறு திட்டமானது கண கண்ணாடி, உலோகங்கள், பொலீத்தின், பிளாஸ்ரிக், கடதாசி மற்றும் தேங்காய் பாகங்கள் உள்ளடங்களாக மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை சேகரிப்பதற்கான நிலையத்தை அமைக்க நிதியிட்டுள்ளது. சேகரிப்பு நிலையமானது நிவிற்றிகல பிரதேசசபை அலுவலக வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு ரூபா 2,776,609.87 இனை மொத்த செலவாக இத் திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது. இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 555,321.97 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.
தற்போது இவ் செயற்றிட்டமானது ஏறத்தாழ 75% செயற்பாடடைந்த நிலையில் உள்ளது.

### 15.11.12 கூட்டு பசளைக் கூடம் மற்றும் சேகரிப்பு நிலையம், குருவிட்ட (பி.ச)

குருவிட்ட பிரதேச சபை இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்னபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 263.1 சதுர கிலோமீற்றர்களாகும். இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 114,592 ஆகும் . பிரதேச சபைக்குட்பட்ட முக்கிய நகரம் குருவிட்ட ஆகும். இப் பிரதேசசபையில் 56 கிராம சேவையாளர் பிரிவுகள் உண்டு. குருவிட்ட பிரதேச சபையானது 25000 வீடுகளையும், 460 கடைகளையும், 2 தொழிற்சாலைகளையும், 3 வார சந்தைகளையும், 35 உணவகங்களையும், 3 வைத்தியசாலைகளையும் மற்றும் 48 பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளையும் உள்ளடக்கியுள்ளது.
பிலசறு திட்டமானது கண்ணாடி, உலோகங்கள், பொலீத்தின், பிளாஸ்ரிக், கடதாசி மற்றும் தேங்காய் பாகங்கள் உள்ளடங்கலாக மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை சேகரிப்பதற்கான நிலையத்தை அமைக்க நிதியிட்டுள்ளது. சேகரிப்பு நிலையமானது தெல்கம பகுதியில் 5 ஏக்கர் மற்றும் 3 பேர்ச் நிலப்பகுதியினுள் அமைக்கப்பட்டு வருகிறது.

சேகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான ஒப்புக்கொண்ட மொத்த செலவானது ரூபா 2,932,546.92. ஆகும்.. இம் மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவீதமான ரூபா. 586,509.38 ஐ திட்டம் ஆரம்பிப்பதற்கான செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15. 11.13 கூட்டு பசளைக் கூடம், 6வது இலங்கை இராணுவ கலாட்படை கட்டளை முகாம், மகாஹுணதரவ

6வது இலங்கை இராணுவ கலாட்படை கட்டளை முகாம் ஆனது இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் மிகிந்தலை பிரதேச சபையினுள் அமைந்துள்ளது. இராணுவ தளத்தின் மொத்த பரப்பளவு 75 ஏக்கர்களாகும்.

இம் முகாமில் 500 முதல் 600 வரையான வதிவிட உத்தியோகத்தர்கள் உள்ளார்கள். மொத்தமாக 0.5 மெற்றிக் தொன் எடையுள்ள விரைவில் பிரிந்தளியக்கூடிய கழிவுகள் நாள்தோறும் இம் முகாமில் உருவாக்கப்படுகிறது.

இராணுவ படை தளத்தினுள் இக் கூட்டு பசளைக் கூடத்தை அமைப்பதன் முக்கிய குறிக்கோள் என்னவென்றால் திறந்த கழிவகற்றல் செயற்பாட்டை குறைத்தலும், சூழல் மாசாக்கத்தை குறைத்தலும் இராணுவ தளத்தினுள் உருவாக்கப்படும் கழிவுகளிலிருந்து கலப்பு உரம் தயாரித்தலுமேயாகும். திண்ம கழிவு சுத்திகரிப்பின் மூலம் உருவாக்கப்படும் உரம் ஆனது இராணுவ படை தள வளாகத்தில் உள்ள பயிர்களுக்கு உரமாக பயன்படுத்தபடுகிறது.

இராணுவ தளத்திற்கு திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை உருவாக்க மொத்த செலவான ரூபா 1,847,395.33 உடன் பெற்று தருவதாக பிலிசறு திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது. இத் தொகையானது கலப்பு உரத் திடலை அமைப்பதற்கும் இறக்குதல், தரம் பிரித்தல், துண்டாக்கல் மற்றும் அரித்தல் மற்றும் கழுவுதலுக்காக பகுதி என்பவற்றின் கட்டுமாண பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவ உருவாக்கத்திற்கும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 369,479.07 ஐ செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக கார்த்திகை மாதம் 29 ம் நாள் 2011 அன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15. 11.14 கூட்டு பசளைக் கூடம், ஹலென்பிந்துனுவெவ (பி.ச)

ஹலென்பிந்துனுவெவ பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1756 சதுர கிலோமீற்றர்களாகும்.
இத் திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை மொத்த செலவான ரூபா 6,403,314.89 உடன் பெற்று தருவதாக பிலிசறு திட்டம் ஒப்புக் கொண்டுள்ளது.மேலும் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தயட கிருல 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவ உருவாக்கத்தை ஊக்குவிக்க மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,280,662.97 ஐ செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது
தற்போது இத்திட்டமானது ஹலென்பிந்துனுவெவ பிரதேச சபை மீதான சட்ட நடவடிக்கை காரணமாக இடை நிறுத்தப்பட்டு உள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவிகளை தவறான முறையில் கையாண்டதாக குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது. குறித்த சட்ட சிக்கல்கள் காரணமாக ஹலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் சொத்துக்கள் யாவும் உள்ளூராட்சி அதிகாரசபையின் ஆணையாளரால் பறிமுதல் செய்யப்பட்டது. இதனால் பிலிசறு திட்டம் ஆனது ஹலென்பிந்துனுவெவ பிரதேச சபையிற்குரிய திட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்தி உள்ளது. இத் திட்டமானது உள்ளூராட்சி அதிகாரசபையின் ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றாகும்.

### 15.11.15 கூட்டு பசளைக் கூடம், கல்னேவ (பி.ச)

கல்னேவ பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. மேலுமு கல்னேவ, பலாலுவெவ, அகுண, பல்னெவ மற்றும் இபலொஹம ஆகிய பிரதேசசபைக்குட்பட்ட முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 8500 மனைகள் உள்ளடங்களாக 21900 ஆகும். இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 893 சதுர கிலோமீற்றர்களாகும்

பிலிசறு திட்டமானது ஹலன்வெவ, பொறுலு கபு வெல நிலப்பகுதியில் கூட்டு பசளைக் கூட வசதியினை அமைப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்குரிய நிலப்பகுதியின் மொத்த அளவு 4 ஏக்கர், 2 குழி மற்றும் 11.6 பேர்ச் ஆகும்.

பிலிசறு கலப்பு உர திட்டமானது நாள்தோறும் 1 மெற்றிக் தொன் கழிவுகளை செயன்முறைக்கு உட்படுத்தகூடியவாறும் திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை நிறுவ ஒப்புக் கொண்ட தொகையான ரூபா 5,295,245.30 இனை வழங்கவும் ஒப்புக்கொண்டது . அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவ உருவாக்கத்திற்கும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,299,527.68 ஐ செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15. 11.16 கூட்டு பசளைக் கூடம், இபலோகம (பி.ச)

இபலோகம பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் இபலோகம பிராந்திய செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 8750 மனைகள் உள்ளடங்களாக 25000 ஆகும். மேலும் இபலோகம, மகாலுபியான, ரணவிருகம, றஞ்சனய வீட்டுத் திட்டம் மற்றும் ஹிறபிடிய ஆகிய மக்கள் அதிகமாக வசிக்கும் இபலோகம பிரதேச சபைக்குட்பட்ட முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 720 சதுர கிலோமீற்றர்களாகும்.

பிலிசறு கலப்பு உர திட்டமானது நாள்தோறும் 2 மெற்றிக் தொன் கழிவுகளை செயன்முறைக்குட்படுத்தகூடியவாறும் திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை ஒப்புக் கொண்ட தொகையான ரூபா 6,042,336.98 இற்கு வழங்க ஒப்புக்கொண்டது .

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவ உருவாக்கத்திற்கும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,208,467.40 ஐ செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக இபலோகம பிரதேச சபை தலைவருக்கு மதிப்பிற்குரிய சுற்றாடல் துறை அமைச்சர் திரு.அனுர பிரியதர்ஷன யாப்பா அவர்களால் செயற்திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இடம்பெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டது.

### 15. 11.17 கூட்டு பசளைக் கூடம், கஹடகஸ்டிகிலிய (பி.ச)

கஹடகஸ்டிகிலிய பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 10500 மனைகள் உள்ளடங்களாக 29000 ஆகும். இப்பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1132 சதுர கிலோமீற்றர்களாகும். மேலும் கஹடகஸ்டிகிலிய நகரம்,ஹொனடினிய மற்றும் சீப்புகுலன ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது

பிலிசறு திட்டமானது மதகலியடகின்ன பொறுலுவெவ நிலப்பகுதியில் கலப்பு உர திடல் வசதியினை அமைப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டத்திற்குரிய நிலப்பகுதியின் மொத்த அளவு 2 ஏக்கர், ஆகும்.

இத் திட்டமானது 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகளை தினமும் முகாமைத்துவம் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

திண்ம கழிவு முகாமைத்துவ திட்டமானது ரூபா 6,497,638.42. மொத்த செலவில் கஹடகஸ்டிகிலிய பிரதேச சபை பகுதியில் கலப்பு உர திடலை ஆரம்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.
அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவத்தில் உள்ள அபிவிருத்தியை ஊக்குவிக்கவும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,299,527.68 ஐ கலப்பு உர திடலின் செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15.11.18 கூட்டு பசளைக் கூடம், மதவாச்சிய (பி.ச)

மதவாச்சிய பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 113 சதுர கிலோமீற்றர்களாகும். மேலும் மதவாச்சிய, ஏ-9 பாதை, மதவாச்சிய மேற்கு, மதவாச்சிய கிழக்கு மற்றும் குடா மதவாச்சிய ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 16000 மனைகள் உள்ளடங்களாக 36000 ஆகும் .

இந்த கலப்பு உர கூட திட்டத்துக்கான குடா மதவாச்சிய பகுதியில் ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் மற்றும் 2 குழி நிலம் ஆனது பழைய கிராம சபைக்கு சொந்தமானதாகும்.

இத் திட்டமானது 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகளை தினமும் முகாமைத்துவம் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. பிலிசறு திண்ம கழிவு முகாமைத்துவ திட்டமானது ரூபா 6,497,638.42 மொத்த செலவில் கலப்பு உர திடலை ஆரம்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..
அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவத்தில் உள்ள அபிவிருத்தியை ஊக்குவிக்கவும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,299,527.68 ஐ கலப்பு உர திடலின் செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 15.11.19 கூட்டு பசளைக் கூடம், றஜாங்கணய (பி.ச)

றஜாங்கணய பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் றஜாங்கணய பிராந்திய செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. மேலும் றஜாங்கணய, இபலகம மற்றும் புத்தளம் சந்தி ஆகிய முக்கிய நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 11000 மனைகள் உள்ளடங்களாக 24000 ஆகும். இவ் பிரதேச சபை ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1100 சதுர கிலோமீற்றர்களாகும்.

பிலிசறு திண்ம கழிவு முகாமைத்துவ திட்டமானது ரூபா 5,295,245.90 மொத்த செலவில் ஆரம்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசிய அபிவிருத்தி கண்காட்சி தேசத்தின் மகுடம் 2012 தொடர்புபட்ட உடனடி திண்ம முகாமைத்துவத்தில் உள்ள அபிவிருத்தியை ஊக்குவிக்கவும் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா. 1,059,049.18 ஐ கலப்பு உர திடலின் செயலாற்று நடவடிக்கைகளை தயார் செய்வதற்கான ஆரம்ப செலவுக்கென முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டமானது 1 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகளை தினமும் முகாமைத்துவம் செய்வதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. கூட்டு பசளைக் கூட திட்டத்துக்கான ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### 15.11.20 கூட்டு பசளைக் கூடம், றம்பாவ (பி.ச)

றம்பாவ பிரதேச சபை இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் றம்பாவ பிராந்திய செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. இவ் பிரதேச சபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த சனத்தொகை எண்ணிக்கை 10727 மனைகள் உள்ளடங்களாக 38509 ஆகும் . இவ் நகரசபையின் ஆட்சிக்குட்பட்ட பகுதியின் மொத்த பரப்பளவு 1075 சதுர கிலோமீற்றர்களாகும். றம்பாவ பிரதேச சபையில் மக்கள் பெருமளவில் பரந்து காணப்படும் பகுதிகள் ஆவன: றம்பாவ , ஏ-9 பாதை மற்றும் ல்கிரியஹொல.
பிலிசறு திட்டமானது றம்பாவ பிரதேசசபை பகுதியில் தினமும் 2 மெற்றிக் தொன் எடையுள்ள கழிவுகளை செயன்முறைக்கு உட்படுத்தக் கூடிய கொள்ளளவுடனான திண்ம கழிவு முகாமைத்துவ வசதியினை ரூபா 6,497,638.42 செலவில் ஆரம்பிக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

